# குருக்கள் மடத்துப் பையன்

தோண்டப்படாத குழிகளுக்குள்
தொலைக்கப்படும் வரலாறு



எஸ்.எம்.எம். பஷீர்

# குருக்கள் மடத்துப் பையன்

தோண்டப்படாத குழிகளுக்குள்
தொலைக்கப்படும் வரலாறு

**எஸ்.எம்.எம். பஷீர்**

நிச்சாமம்

**குருக்கள் மடத்துப் பையன்**
தோண்டப்படாத குழிகளுக்குள் தொலைக்கப்படும் வரலாறு
© **எஸ்.எம்.எம். பஷீர்**
முதல் பதிப்பு: டிசம்பர் 2017
பக்கங்கள்: 88

**வெளியீடு: நிச்சாமம், பிரான்ஸ்.**

நூல் வடிவமைப்பு: தி பிரைட் ஸ்டுடியோ
அட்டை வடிவமைப்பு: லினா பஷீர்
அச்சாக்கம்: ராகாஸ், சென்னை – 14

**Gurukkal Madaththu Paiyan**
© S.M.M.Bazeer
First Edition: December 2017
Pages: 84

**Pubished By Nichaamam, France.**

Book Design: The Bright Studio
Cover Design: Lina Bazeer
Printed at Ragaas, Chennai - 14

புலம்

விற்பனை உரிமை: **புலம்**
332/216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி: 98406 03499
மின்னஞ்சல்: pulam2008@gmail.com

Selling Rights by **Pulam**
332/216,Triplicane High Road,
Triplicane,Chennai 600 005
Mobile: 98406 03499
Email: pulam2008@gmail.com

**விலை ரூ. 80**

குருக்கள் மடத்தில் புலிகளால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுப்போன அப்பாவி பயணிகள் உட்பட புலிகளின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளினால் ஏற்பட்ட இன குரோத நடவடிக்கைகளில் பலியாகிப்போன தமிழ் முஸ்லீம் மக்கள் அனைவருக்கும் இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| குருக்கள் மடத்துப் பையன் | 1 |
| முகவுரை | 5 |
| சிதையும் எச்சங்களை தேடி! | 7 |
| அத்தியாயம் (1) | 12 |
| அத்தியாயம் (2) | 17 |
| அத்தியாயம் (3) | 27 |
| அத்தியாயம் (4) | 34 |
| அத்தியாயம் (5) | 41 |
| அத்தியாயம் (6) | 47 |
| பின்னிணைப்பு (1) | 60 |
| பின்னிணைப்பு (2) | 64 |
| பின்னிணைப்பு (3) | 72 |

# முகவுரை

புகலிடத்திலும் தமிழ்க் கதையாடல் வெளிகளிலும் தோழர் பஷீர் அவர்களை நேரிலும் அவர்தம் எழுத்துக்கள் மூலமாகவும் அறிந்தோருக்கு அவர் குறித்த அறிமுகம் மிகையானது, இலக்கிய - அரசியல் ஆய்வு மன்றுகளிலும் இணைய வெளிகளிலும் அவர்தம் கருத்தாய்வுகளை முன்வைக்கும் பாங்கு அலாதியானது. முஸ்லிம் அரசியல் உணர்மை புகலிடத்தில் பரவி காத்திரமான வலுவான தரப்பாக இப்போது நிலைகொண்டதற்கு தோழர் பஷீர் அவர்களின் அயராத உழைப்பும் மேற்கின் கருத்தியல் தளங்களில் அவரின் உன்னிப்பான அவதானமும் காரணங்கள். தேர்ந்த ஜனநாயக அரசியலாளனுக்குரிய மொழி தோழர் பஷீர் அவர்களது. நீண்ட ஜனநாயகப் பாரம்பரியமான அரசியல் வழி முஸ்லிம், இலங்கை சார்ந்த விழுமியத்தின் அடையாளம் அவர்.

மரபான தமிழ் இலக்கியத்தின் உன்னதமான மின்னற் தெறிப்புகளை அவர் ஆய்வினூடு முன்வைக்கும்போது அவரது தமிழ் இலக்கியப் புலமைத்துவம் குறித்து நான் எப்போதும் வியந்து நோக்குவதுண்டு. தமிழ் இலக்கிய புலமை மரபில் நீண்ட பாரம்பரியத்தை எப்போதும் அணையாதும் அறுந்து போகாதும் போற்றி வளர்ப்பதில் இஸ்லாமிய அறிஞர்களின் வரிசையில் அவரை வைத்து நோக்குவதில் எனக்கு எந்த மனத்தடைகளும் இல்லை. மேலும் சைவப் புலமையாளர் அவர்.

கவிஞனாக அறியப்படுவதில் உள்ள சவால் ஆழ்ந்த அரசியற் பிரக்ஞையிலிருந்து வருவது.

*1990இல் தமிழ்ப் பாசிசத்தால் கொன்று புதைக்கப்பட்ட படுகொலைகளில் இருந்து ஒரு கொலை விவரணத்தை பலமான தரவுகளோடு தோழர் முன்வைப்பதை நூலாக்குவதற்கு காலம் கனிந்ததை கனத்த கசப்பின் மிச்சத்தோடு இங்கு பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது.*

*கேள்விக்கிடமற்ற விசுவாசத்தினதும் வழிபாட்டினதும் துதிப்பாடற் பாராயணத்தினதும் நிலை கடைசியில் எங்கு எல்லோரையும் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதை இந்நூல் சிறப்பாக முன்வைப்பது நமது பேறு.*

**சுகன்**

**பாரிஸ் 05 08 2017**

# சிதையும் எச்சங்களை தேடி!

*இலங்கையின் வடக்கு கிழக்கு வாழும் முஸ்லிம்களின் வரலாற்றில், குறிப்பாக 1990 ஆம் ஆண்டு ஒரு மறக்க முடியாத இரத்தம் சுவரிய துயரம் தோய்ந்த வருடமாகும். 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையின் வடக்கு கிழக்கில் இந்திய சமாதானப் படைகள் முற்றாக இலங்கையை விட்டு நீங்கியதும் புலிகள் இலங்கை அரசுடன் சேர்ந்து தமது எதிரிகளான மாற்று தமிழ் இயக்கங்களையும், மாற்று தமிழர் அரசியல் சக்திகளையும் மட்டும் பழிவாங்கவில்லை தங்களுக்கு இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் உதவியும் ஒத்தாசையும் புரிந்த முஸ்லிம்களின் மீதும் தங்களின் மிலேச்சத்தனமான வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர்.*

*முஸ்லீம் மக்களை ஆயுத வலிமையைக் கொண்டு மிரட்டி, அதிகாரம் செய்ய முனைந்த புலிகளின் அடாவடித்தனங்கள் எல்லை மீறிய பொழுது, சமரசங்களைக் கடந்த பொழுது முஸ்லீம் மக்களின் அதிருப்தியையும், எதிர்ப்பையும் புலிகள் எதிர் விளைவாக எதிர் கொள்ள நேரிட்டது. அதிக வன்முறைகளினால், முஸ்லீம் மக்களை அடக்கி அச்சுறுத்தி வைக்க புலிகள் பல்வேறு மனித உரிமை மீறல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டனர். அத்தகைய வன்முறைகளின் கொடுமைகள் பல குறிப்பாக 1990 ஜுன் -ஆகஸ்து வரை பரவலாக கிழக்கில் இடம்பெற்றது, இறுதியாக வட மாகாண முஸ்லீம் மக்களை 1990 ஒக்டோபரில் இனச் சுத்திகரிப்பு செய்ததன் மூலம் தமது முஸ்லிம்கள் மீதான*

அடக்கு முறையின் நிகழ்ச்சி நிரல்களை புலிகள் நடத்தி முடித்தனர்.

1990 ஜூலை 12ஆம் திகதி கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக புலிகள் இழைத்த கொடுமைகளில் ஒன்றுதான் காத்தான்குடியை நோக்கி பயணித்த முஸ்லீம் பயணிகளை குருக்கள் மடத்தில் வைத்து கொன்று குவித்து அவர்களின் உடலங்களை பாரிய குழிக்குள் போட்டு புதைத்ததாகும். 2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை இராணுவம் புலிகளை முற்றாக தோற்கடித்த பின்னர் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு 2014 (The Presidential Commission Regarding Missing Persons -PCRMP) இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெறப்பட்ட சாட்சியங்களில் காத்தான்குடி - குருக்கள் மட மனித புதைகுழிமுறைப்பாடுகள்முதன் முதலில் உத்தியோகபூர்வமாக முன் வைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து குருக்கள்மட விவகாரம் பரபரப்பாக பேசப்பட்டது. உள்ளூர் அரசியல்வாதிகள் அது தொடர்பில் திடீரென்று அதிக அக்கறை காட்டத் தொடங்கினர். உண்மையில் குருக்கள் மடத்தில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக அறியப்படும் நிலையில், புதைக்கப்பட்டதாக நம்பப்படும் பிரதேசங்களை கண்டறிந்து, புதைக்கப்பட்ட உடல்களின் எச்சங்களையாவது தோண்டி எடுத்து மரபணு பரிசோதனை மூலம் அடையாளம் கண்டு, அவ்வாறு கொல்லப்பட்டு இறந்தோரின் உடல்களின் எச்சங்களை அவர்களின் குடும்பத்தினர் விரும்பியவாறு சமயக் கிரிகைகளைநிறைவேற்றி, மீள் அடக்கம் செய்வதும் குருக்கள் மட மனித புதைகுழிகளைத் தொடுவதன் முக்கியநோக்கமாகவிருந்தது. அதேவேளை முஸ்லிம்கள் மீதான புலிகளின் கொடூரத்தை தகுந்த ஆதாரத்துடன்மிகவும் வலுவாகபதிவு செய்வதுமாகும். குறிப்பாக புலிகளும் புலிகளின் மேற்குலக புலம் பெயர் ஆதரவாளர்களும், சர்வதேச அரங்குகளில் புலிகள் இழைத்த கொடுமைகளை முன்னிறுத்தாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மனித உரிமைச் செயற்பாடுகளில் பலவீனமான சமூகமாக திகழ்ந்த வடக்கு கிழக்கு முஸ்லீம் சமூகம் குருக்கள்மடம் போன்ற மனிதப் படுகுழிகளைத் தோண்டுவதன் ஊடாக புலிகளின் ஒரு வரலாற்றுக் கொடுமையினை மிகவும் காத்திரமாக பதிவு செய்ய முடியும். இறுதி யுத்தத்தின் பொழுது முள்ளிவாய்க்காலில் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலைகள் செய்யப்பட்டார்கள்

என்று ஜெனீவாவில் தீர்மானங்களை மேற்கொண்டு தனிநாட்டை கனவு காணும் புலிகளுக்கும், புலம்பெயர் தமிழ்த் தேசிய வாத சக்திகளுக்கும் முகங்கொடுக்கும் இலங்கை அரசுக்கும் குருக்கள்மட தோண்டுதல் மூலம்அனுகூலங்கள்கிடைக்கும் என்பதால் இலங்கை அரசும் குருக்கள்மட புதை குழிகளைத் தோண்டப்படுவதில் அக்கறை காட்டியது.

குருக்கள் மட புதைகுழியை தோண்டும் நிலவரங்கள் ஏற்பட்ட பொழுது, அது பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளியான பொழுது நான் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் என்பருடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர் மூலம் தோண்டுவது தொடர்பாக நடைபெறும் செயற்பாடுகளைப் பற்றி அறிந்து கொண்டதுடன் இங்கு இணைக்கப்பட்டுள்ள நீதிமன்ற அழைப்பாணை, காணாமல் போனோரின் பெயர் விபரநிரல் ஆகியற்றைப் பெற்றுக் கொண்டேன். எனது கட்டுரைகளை எழுவதில் அந்த தகவல்கள் உதவின என்ற வகையில் அவரையும் நன்றியுடன் நினைவு கூறுகிறேன். ஆனாலும் நான் இலங்கை சென்ற பொழுது, காத்தான்குடிக்கு சென்று அவரை சந்தித்த பொழுதும், தோண்டுதல் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைக்கு எனது துறைசார் உதவியை வழங்கத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டும். சிப்லி பாரூக்கின் அரசியல் நுழைவுக்கு காரணமான, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஹிஸ்புல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்பவேசிப்லி பாரூக் செயற்பட்டார். எனது உதவிகளை பெறுவதை ஹிஸ்புல்லாஹ் தனது அரசியல் காரணங்களுக்காக விரும்பமாட்டார் என்று எனக்கு நன்கு தெரியும். சிப்லி பாரூக் அந்த விடயத்தில் தனித்து செயற்படுவார் என்று எதிர்பார்த்தேன், அவ்வாறு நடைபெறவில்லை. பின்னர் குழிகள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பான சர்ச்சைகள் எழுந்த பொழுதுபொழுதுசிப்லிபாரூக், தனிப்பட்ட வகையில் சட்டத்தரணி ஒருவரை நியமித்து நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆயினும் இறுதியில் உள்ளூர் அரசியல்போட்டாபோட்டி காரணமாகவும், அக்கறை காட்டிய சிலரின் மறைமுகமான அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்பவும்குருக்கள் மடக் குழிகள் தோண்டப்படாமல் போனது மட்டுமல்ல, மறக்கடிக்கப்பட்டும் போனது. அந்த நிலையில் அது பற்றி நான் “தோண்டியவற்றை”, “கண்டு கொண்ட எச்சங்களை” எழுதி உள்ளேன். சர்வதேச உதவியுடன்

குருக்கள் மடத்தின் படுகுழிகளை தோண்டக் கிடைத்த சந்தர்ப்பம் கை நழுவிப் போய்விட்டது. இறுதியில் உள்ளூர் அரசியல்வாதிகள் "ஆண்டிகள் கூடி கட்டிய மடம்" போல குருக்கள் மட படுகுழிகளை தோண்டப்போவதாக வாய்ச் சவடால்கள் விட்டதைத் தவிர ஆனது ஒன்றுமில்லை.

2014 இல் தேனீ. காம், சலசலப்பு.காம், காத்தான்குடி இன்போ, போன்ற வலைத் தளங்களில் "குருக்கள் மடத்துப் பையன்" என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதி, முடிக்கப்படாமல் போன இறுதி அத்தியாயத்துடன் சேர்த்துஎனதாக்கங்களை "குருக்கள் மடத்துப் பையன்" ஆகநூலுருவாக்கம் செய்துள்ளேன். இக்கட்டுரைகளை எழுதியபொழுது தேனீ வலைத்தள நடத்துனர் ஜெமினி மிகுந்த ஊக்கம் அளித்தார். அவ்வாறே பலர் தனிப்பட்ட வகையிலும் என்னை தொடர்ந்தும் எழுதுமாறு அன்புடன் வேண்டிக் கொண்டனர். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக இக்கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்க வேண்டும் என்று பிரேரித்தவர், பிரான்சில் வதியும் தோழர் சுகன். வெறும் பிரேரணையுடன் நிறுவிடாமல் அதற்கான முயற்சிகளை தானே முன் வந்து மேற்கொண்டார். அவரே முன்னின்று நூலைப் பதிப்பிக்கும் பணியில் எனக்கு அறிமுகப்படுத்திய அவரின் உற்ற நண்பரான பதிப்பாளர் தோழர் சிராஜுதீன் (தமிழ் நாடு), சுகனின் விருப்புக்கு ஏற்ப "குருக்கள் மடத்துப் பையனுக்கு" நூலுயிர் அளித்துள்ளார்கள்.

மிகுந்த சிரமத்துக்கு ஆய்வுக்கும் பின்னரே "குருக்கள்மடத்துப் பையன்" என்னால் தொடர் கட்டுரைகளாக எழுதப்பட்டது. "குருக்கள்மடத்துப் பையன்" தொடர் கட்டுரைகளாக வெளிவந்த பொழுது, அக்கட்டுரைகள் குருக்கள் மடபடுகொலை நாளை மீள் உருவாக்கம் செய்கின்றதான உணர்வினை, பிரக்ஜையை ஏற்படுத்தியது என்பதை வாசகர்கள் மூலம் அறிந்து கொண்டேன். ஆனால் எனது கட்டுரைகளை தொகுத்து இந்நூலுக்கு முடிவுரை எழுதும் பொழுது, குருக்கள் மடத்தில் புதைக்கப்பட்ட குழிகளைத் தோண்டுவது என்பது ஒரு முடியாத கதை ஆகிவிட்டதே என்ற ஆதங்கத்துடன் எழுத வேண்டி நேரிட்டு விட்டது என்பது எனது முடிவுறாத கவலையாகும்.

குருக்கள்மட அரசியல் குழி தோண்டல் சலசலப்புகள் அடங்கி போய்விட்டன . அது பற்றி யாரும் இப்பொழுது பேசுவதில்லை, ஒருவேளை ஏதேனும் அரசியல் இலாபங்களுக்காக, அரசியல்வாதிகள் குருக்கள் மடத்துக்கு விஜயம் செய்வார்கள், வீராப்பு பேசுவார்கள். ஆனால் அந்தக் குழிகளுக்குள் புலிகளால் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட மனித உயிர்கள் எழுப்பிய ஈனக் குரல்கள், குருக்கள் மடத்து கடற்கரையில் இன்னமும் ஓயாது எதிரொலிக்கிறது. அந்த அலைகளின் எதிரொலியே எனது இந்த "குருக்கள் மடத்துப் பையன்"நூலாகும்.

எனது வேளைப் பளுவுக்கு மத்தியில் இக்கட்டுரைகளை திருத்தி ஒழுங்குபடுத்தி தோழர் சிராஜுதீனிடம் கையளிக்க எனக்கு சில மாதங்கள் எடுத்தன. எனினும் ஒரு நூலாக உங்களின் கைகளில் மிளிர செய்ய வேண்டிய பணியை அவர்கள் இருவரும் முன் வந்து மேற்கொண்டதால் அவர்கள் இருவருக்கும் எனது முதற் கண் நன்றிகள் உரித்தாகுக. இந்நூலில் ஒரு சில தகவல்களை உறுதி செய்ய நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் எனக்கு உதவிய காத்தான்குடி உவைஸ் மொஹிடீன், திருகோணமலை ஜெ எம். அஸார், பீ.ஏ ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரியவை. இந்நூலின் நூலின் அட்டைப்படத்தை வரைந்த எனது மகள், லினா பஷீருக்கும், அட்டைப்படம் தொடர்பில் ஆலோசனை வழங்கிய எனது பிள்ளைகள் அனைவருக்கும், பொதுவாகவே என்னை தொடர்ந்தும் எழுதுமாறு ஊக்குவிக்கும் எனது மனைவி, பிள்ளைகள் அனைவரையும் கனிவுடன் நினைத்து கொள்வது தவிர்க்க முடியாதது.

இலங்கை
01 .08. 2017

சட்டத்தரணி **எஸ்.எம்.எம். பஷீர்**

# அத்தியாயம் (1)

*மனிதர்கள் செய்யும் தீவினைகள் அவர்களின் மரணத்தின் பின்னரும் வாழும் ; மனிதர்கள் செய்யும் நன்மைகள் பலமுறை அவர்களின் எலும்புகளுடன் புதைக்கப்படுகிறது. ஜுலிய சீசர் (III.ii.77)*

எனது "குருக்கள் மடத்துப் பையன்" என்னவோ ஜெயகாந்தனின் "குருக்கள் ஆத்துப் பையன்" அல்லதான், எனது கதையும் அக்கிரஹாரக் கதையுமல்லதான், எப்போவோ விடலையில் வாசித்த ஜெயகாந்தனின் குருக்கள் ஆத்துப் பையன் பின்னாளில் எங்கேயோ மனதில் மறைந்தும் போனான். குருக்கள் மடம் மனிதக் குழிகள் பேசு பொருளாகி, மீண்டும் கண்களையும் காதுகளையும் ஆக்கிரமிக்க தொடங்க, எனது ஞாபகப் பதிவுகளை தூசு தட்ட, குருக்கள் மடத்தின் முன்னணி நிகழ்ச்சிகளின் இடைப்பதிவாய், சில ஞாபக அடுக்குகள் வெளிப்படுகின்றன.

அதோ, அந்தக் கூட்டத்துள், குருக்கள் மடத்து முருகன் கோயில் பக்கத்தே நெடிதுயர்ந்து நிற்கும் ஒற்றைக் கமுகு மரம் போல முருகுப்பிள்ளை, நெடிய உருவத்துடன் நிற்கிறான். எனது சமகாலப் பள்ளித் தோழன் குருக்கள் மடத்து முருகுப்பிள்ளை, அவனின் அசாதாரண வயசுக்கு மீறிய உயரத்துடன் நிறக் கருமையையும் மீறி பற்களின் வெளிச்சச் சிரிப்பில் இங்கிருந்தே தனியாகத் தெரிகிறான். சாதியும், மதமும் சங்கடங்களை சண்டைகளை உண்டாக்காத காலம் அது. ஒருவேளை முருகுப்பிள்ளையும் விவசாய சமூகத்தின் செட்டிகுடி வெள்ளாளர் பெரும்பாலும் குருக்கள் மடம் பகுதியில் வாழ்வதால், ஒருவேளை அவனும் ஒரு வெள்ளாளர் (விவசாயக் குடும்ப) பின்னணியைக் கொண்டிருந்தானோ என்னவோ தெரியாது. ஆனால் வெள்ளை வெளீரென்ற அரைக்கைச் சட்டையும் வேஷ்டியும் அணிந்த அவனை, அவனது அசாதாரண உயரத்துடன் கண்டால், மாணவத் தோற்றம் மறைந்து அவன் ஒரு விவசாயியோ என்று வியப்பதில் ஒன்றும் ஆச்சரியமே இல்லை.

*மாலைப் பொழுதில் கால்பந்து விளையாடிவிட்டு, அந்த வியர்வை கொட்டும் உடையுடன் பொடி நடையாக காத்தான்குடி வரை சென்று காத்தான்குடி சந்தியில் உள்ள குட்வின் ஹோட்டலில் மாட்டிறைச்சி கொத்துரொட்டி சாப்பிட்டு விட்டு நண்பர்கள் குழாத்துடன் மீண்டும் காலார நடந்து திரும்பியது, இப்பொழுதும் எப்பொழுதும்போல் வியர்ப்பது போல மனதில் ஈரலிப்பை உண்டாக்கும் பாடசாலைக் கால சிலிர்ப்புகள்.*

**திரும்பும் வழியில் வரம்புகள் அற்று கதையளந்த பொழுதுகள்;**

*ஞாபகத் தட்டுக்களின் அடுக்குகளில் சிக்கிக் கொண்ட சின்ன சின்ன சந்தோசங்கள்.*

*பள்ளிக்காலம், பகிடிகள் நிறைந்த மகிழ்சிக் காலம், எங்களின் பள்ளிக் கூடம் பாலுமகேந்திராவின் வீட்டுக்கு மிகத் தூரமில்லை, அவரின் அழியாத கோலங்களுக்கும் நெருக்கமாகவில்லை என்றாலும் சாதாரண பள்ளிவாழ்க்கையின் அனுபவங்கள் கூட தனிமனித நினைவுகளில் அசாதாரணமானவைதான், காலங்கள் எங்களை வக்கிரமாக உந்தித் தள்ளி உதைத்து வெளியேற்றிக் கொண்டே தனது பயணத்தை இடையறாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பள்ளிப் பருவங்கள், இளமைக் கனவுக் காலங்கள், தொழில், திருமணம், குழந்தைகள், குழந்தைகளின் பள்ளிக் காலங்கள் என்றெல்லாம் பல கட்டங்களைத் தாண்டி "எண்ணமே சுமைகளாய் இதயமே பாரமாய்", "இந்த நாள் அன்று போல் இன்பமாய் இல்லையே": என்று ஆதங்கக் கைத்தடியை ஊன்றும் காலம் நெருங்கும் பொழுதுதான் பல நூறு நினைவுகளுடன் குருக்கள் மடத்து முருகுப்பிள்ளை நிமிர்ந்து நிற்கிறான். நிச்சயமாக முருகுப்பிள்ளை, பிள்ளைவாள் அல்ல! ஒரு சாமான்ய குருக்கள் மடத்தான், அவ்வளவுதான்.*

*மனிதர்கள் இன வெறியை இரத்த நாளங்களுக்குள் ஓடவிட்டுக் கொண்டு, கரங்களில் ஆயுதங்களை இறுக்கிப்பற்றிக் கொண்டு அழிவுகளை ஏற்படுத்திய தசாப்தங்களுக்குள், குருக்கள் மடமும் சிக்கிக் கொண்டது.*

*இரண்டு தசாப்தங்களுக்கு மேல் இழவுப் பிலாக்கனங்கள் எல்லாத் திசையும் கேட்டது,எல்லைப் புறமெங்கும் கேட்டது,*

காத்தான்குடியிலும் கேட்டது, கள்ளியங்காட்டிலும் கேட்டது, கின்னையடியிலும் கேட்டது, கிரான்குளத்திலும் கேட்டது.

மீள்நினைவாய், அந்த பாடசாலை அனுபவங்கள், அதிலும் குருக்கள் மடத்து முருகுப்பிள்ளையின் நீண்ட அமைதியும் பின்னர் சிரிப்பூட்டும் கதைகள், அவனின் பற்பசை விளம்பரத்துக்கு சவால் விடும் பற்களை காட்டி அவனின் இயல்பு வெகுளித்தனத்தை காட்டி நிற்கும்.

குருக்கள் மடத்துக்கு முருகுப்பிள்ளையின் வெகுளித்தனம் போல் அமைதியான குருக்கள் மடத்துக்கு என்ன நடந்தது. வேதரானியத்தில் இருந்து வருகை தந்த உலக குருநாதர் குருக்கள் மடத்தில் வந்திறங்கி, மடம் அமைத்து வாழ்ந்து, கோவில் அமைத்து மக்களை நல்வழிப்படுத்தினார் அல்லவா, அங்கு எப்படி ஒரே மொழியைப் பேசிய சக மனிதர்கள் கூட்டம் கூட்டமாய் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டு புலிகளால் புதைக்கப்பட்டார்கள் !

இயக்கங்களில் சேர்ந்து ஆயுதம் தூக்கியவர்களை அதிகளவில் கொண்ட ஏனைய தமிழ் கிராமங்களால் சுற்றி வளைக்கப்பட்ட குருக்கள் மடத்தில் ஒப்பீட்டளவில் இயக்கங்களில் சேர்ந்தவர்கள் குறைவு. குருக்கள் மடத்தில் கல்வி கற்றவர்கள் பலர்; அவர்களுள் அரச பதவிகளை அலங்கரித்தவர்கள், தேர்ச்சிபெற்ற தொழில் புரிபவர்கள் அதிகமானோராகும்.

இந்தியப்படை மார்ச் 1990இல் வெளியேறியவுடன், புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்கும் இடையே யுத்த நிறுத்தம் 1990 ஜூனில் புலிகள் ஒரு தலைப்பட்சமாக மட்டக்களப்பு போலீசார்மீது மேற்கொண்ட தாக்குதலால் முறிவுற்றது. பரஸ்பர தாக்குதல்கள் பரவலாய் கிழக்கில் பரவத் தொடங்கியது.

தமிழர் முஸ்லிம்களுக்குள் தமிழ் ஆயுத இயக்கங்களாலும் குறிப்பாக புலிகளால் ஏற்படுத்தப்பட்ட தமிழ் முஸ்லிம் உறவின் விரிசல் துலாம்பரமாகவே வெளிப்படத்தொடங்கிய காலகட்டம். புலிகள் தங்களின் அதிகாரத்தை முஸ்லிம் பிரதேசங்களிலும் நிலைநிறுத்துவதில் காட்டிய இறுக்கம் தெறித்தது. இந்திய படை வெளியேற்றம் ஏற்படுத்திய பாதுகாப்பு இடைவெளியில், தமிழரின் போராட்டத்தின்மீது அக்கறையற்றிருந்த முஸ்லிம்

மட்டக்களப்பில் வாழும் அக்குழந்தையின் தாயின் சகோதரியும் அவரின் சின்னம்மாவும்மட்டக்களப்பில் இருந்து காத்தான்குடி சென்று அங்கிருந்து கொழும்பு செல்லும்தனியார் பஸ்ஸில் அக்குழந்தையுடன்பயணித்தார்கள்.

கொழும்பு உட்பட பல பாகங்களிலிமிருந்தும் கல்முனை வழியாக காத்தான்குடி திரும்பிய அவ்வூர் மக்கள் பயணித்த பல வாகனங்கள் இடை மறிக்கப்பட்டன, உணவுப் பொருட்கள் உட்பட பல வித பாவனைப் பொருட்களை ஏற்றி வந்த லாரி போன்ற வாகனங்கள் இடைமறிக்கப்பட்டு எரிக்கப்பட்டன, ஒரு புறம் கொள்ளையும் மறுபுறம் கொலையும் கட்டவிழ்த்து விடப்பட்ட 1990 ஜூலை மாதங்களில் இடம்பெற்ற புலிகளின் ஈனப் படுகொலைகளில் ஒரு நாளே குருக்கள் மட படுகொலை இடம்பெற்ற 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதியாகும்.

புலிகளில் சேர்ந்த குருக்கள் மடத்து இளைஞர்கள் குறைவு, இப்படி இவர்கள் இயக்கத்தில் சேராததால். இராணுவ தாக்குதல் கூடக் குறைவு, அதனால் மற்றத் தமிழ் கிராமங்கள் இவர்கள் மீது சந்தேகத் "தாக்குதல்" நடத்தினர் என்பதை அன்றைய சில அவதானிப்புகள் கவனிக்கத் தவறவில்லை.

1990 ஜூலை 12 அன்று காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த,பிரயாணிகளின் வாகனங்கள், சரக்கு லாரிகள் எதுவும் வந்து சேரவில்லை, ஆனால் இடையில் குருக்கள் மடத்தில் காணமல் போன வாகனங்கள் பற்றி செய்திகள் பயணிக்கத் தொடங்கின. அன்று இரவு காத்தான்குடி தூக்கத்தை இழந்தது, துயரத்தில் மூழ்கியது. காணாமல் போனோரும் தோற்றப்படவில்லை, காணாமற்போனோர் கொல்லப்பட்டு புதைக்கப் பட்டுப் போனார்கள் என்ற ஆறாத் துயரமும் தேற்றப்படவில்லை,

அன்றைய மாலைப் பொழுதில், காத்தான்குடியில் இருந்து பயணித்த வாகனங்கள் பற்றிய செய்திகள் எதுவும் வரவில்லை, கல்முனைக்கும் காத்தான்குடிக்கும் இடையில் உள்ள தமிழ் பிரதேசங்களின் ஊடாக பயணித்த வாகனங்கள் புலிகளால் கடத்தப்பட்டுள்ளன என்ற செய்தி விரைவாக காத்தான்குடி எங்கும் பரவத் தொடங்கியது, காத்தான்குடியில் இருந்து பயணித்த வாகனம் ஒன்றில் தங்களின் பிள்ளையும் சகோதரியும் வந்து சேரவில்லை என்பதால், அவர்களும் கடத்தப்பட்ட வாகனங்கள் ஒன்றில் அகப்பட்டு போயினரோ என்று அந்தக் குழந்தையின் பெற்றோர்

புதைக்கப் பட்டுப் போனார்கள் என்ற ஆறாத் துயரமும் தேற்றப்படவில்லை,

அன்றைய மாலைப் பொழுதில், காத்தான்குடியில் இருந்து பயணித்த வாகனங்கள் பற்றிய செய்திகள் எதுவும் வரவில்லை, கல்முனைக்கும் காத்தான்குடிக்கும் இடையில் உள்ள தமிழ் பிரதேசங்களின் ஊடாக பயணித்த வாகனங்கள் புலிகளால் கடத்தப்பட்டுள்ளன என்ற செய்தி விரைவாக காத்தான்குடி எங்கும் பரவத் தொடங்கியது, காத்தான்குடியில் இருந்து பயணித்த வாகனம் ஒன்றில் தங்களின் பிள்ளையும் சகோதரியும் வந்து சேரவில்லை என்பதால், அவர்களும் கடத்தப்பட்ட வாகனங்கள் ஒன்றில் அகப்பட்டு போயினரோ என்று அந்தக் குழந்தையின் பெற்றோர் குடும்பத்தினர் பதறிப் போயினர். மனசு மறுகினர், தூக்கத்தை துரத்தி கண்ணீரை நதியாக்கிய அக்குழந்தையின் பெற்றோர்கள், துயரத்தில் விடிந்த காலைப் பொழுதில், மெதுமெதுவாக வெயிலின் சூட்டை உணரப்பண்ணிய வேளையில் தமது பிள்ளையைக் கண்டனர். அக்குழந்தையும் பயணித்த பயணிகள் வாகனம் சில மணித்தியால வித்தியாசத்தில் குருக்கள் மடத்தில் புலிக் கொலைஞர்களின் இடைமறிப்பில் சிக்காது, அதிர்ஷ்டவசமாக குருக்கள் மடத்தை தாண்டி வந்திருக்க வேண்டும்.

ஆனால் இருபத்தி நான்கு வருடங்களின் (2014) பின்னரும் மனசை உருக்கி அழும் கொலையுண்டோர் குடும்பத்தின் சாட்சியங்கள் இன்றும் மனசை உலுக்குகிறது. இது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதே. இப்படியான புலிகளின் செயலுக்காய் பலி வாங்கும் நடவடிக்கையில் அப்பாவி தமிழ் மக்கள் சிலரும் முஸ்லிம் பிரதேசங்களில் பயணித்த பொழுது காணாமல் போயினர், அவர்களை இதுவரை யாரும் மீண்டும் காணவில்லை அவர்களின் குடும்பங்களும் மனித துயரத்தில் எல்லா மனிதர்களையும் போல் துயரத்தில் தோய்ந்தே இருக்கும்.

குருக்கள் மடத்தில் இந்த கொடூர செயல்களுக்கு காரணகர்த்தாவான புலிகளின் தலைமை எது?

# அத்தியாயம் (2)

*இலங்கையின் வடக்கு கிழக்கில் இந்திய சமாதானப்படையின் இறுதிப்படை அணியினர் மார்ச் மாதம் 1990இல் வெளியேறிய பின்னர் ஏற்பட்ட பாதுகாப்பு இடைவெளியை நிரப்ப முன்னரே முகாம்களுக்குள்ளும் காவல் நிலையங்களுக்குள்ளும் ஏற்கனவே இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் முடக்கிவைக்கப்பட்டிருந்த இலங்கையின் இராணுவமும் காவல்துறையும் பிரேமதாசாவின் அசட்டுத்தனங்களால் முறையே முகாம்களுக்குள்ளும், காவல் நிலையங்களுக்குள்ளும் தொடர்ந்தும் அடக்கி வைக்கப்பட்டனர்.*

*புலி பசித்தால் புல்லும் தின்ன வேண்டிவரும் என்று பிரேமதாசா நம்பினார் ஆனால் புலிகள் அரசபடைகள், காவல்துறையினர், ஏனைய தமிழ் இயக்கங்கள், முஸ்லிம்கள் என்று தங்களின் தாக்குதல்களை முடுக்கி விட்டனர். மீண்டும் புலிகளின் தாக்குதல்களுக்கு பதில் நடவடிக்கையாக இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு தமிழ் கிராமங்கள் உள்ளாகின.*

*புலிகள் குருக்கள் மடத்தில் முஸ்லிம் பிரயாணிகளை படுகொலை செய்து, அங்கு வீடுகள் கட்ட மணல் தோண்டி எடுக்கப்பட்டதனால், ஏற்படுத்தப்பட்டிருந்த பாரிய குழிகளுக்குள், கொல்லப்பட்ட முஸ்லிம்களைப் போட்டுப் புதைத்தனர். மூன்று வேன்களில் வந்த பயணிகளும், சாமான்கள் ஏற்றிவந்த ஒரு லாரியும் 12.07.1990 அன்று புலிகளால் இடை மறிக்கப்பட்டு, சாமான்கள் கொள்ளையிடப்பட்ட பின்னர் சகல பயணிகளும் ஒரு வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு அடைக்கப்பட்டனர், பின்னர் அங்கிருந்தே அவர்கள் பாரிய மண் தோண்டி எடுக்கப்பட்ட குழிகளுக்கு அருகாமையில் கொண்டு செல்லப்பட்டு, அங்கு வைத்து வெட்டிக் கொல்லப்பட்டு அக்குழிகளுக்குள் புதைக்கப்பட்டனர், வாகனங்களும் எரிக்கப்பட்டன. இந்த செய்தியினை 'மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) சங்கம்" பதிவு செய்யத் தவறவில்லை.*

அங்கு வாழ்ந்த தமிழர்கள் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதை அறிந்தும் ஒரு சிலரைத் தவிர பலர் மவுனம் காத்தனர். அக்காலகட்டங்களில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள சில தமிழ் கிராமங்கள் மீது இராணுவம் தங்களின் அழிச்சாட்டியங்களை நிகழ்த்தியதால் ஏற்பட்ட மனித இழப்புக்களாலும் துயரங்களாலும் தமிழ் மக்களில் பலர் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருந்தனர். புலிகளை தங்களின் ஆபத்பாந்தவர்களாக நம்பியிருந்தனர். எல்லாவற்றையும் விட புலிகளை எதிர்க்கும் துணிச்சல் அவர்களுக்கு இருக்கவில்லை.

ஆனாலும் தமிழர்களில் ஒரு சிலரே குருக்கள் மட படுகொலைகள் பற்றி இரகசியமாக கதைக்க முன் வந்தனர். பலர் அக்கொலைகள் பற்றி அறியாதவர்களைப்போல தங்களைக் காட்டிக் கொண்டனர். அதற்கான முக்கிய காரணம் என்னவெனில் புலிகள் முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் மக்களுக்குள் செய்த பிரச்சாரங்களுமாகும். குறிப்பாக முஸ்லிம் மக்கள் கிழக்கில் உள்ள தமிழ் கிராமங்களை ஆக்கிரமித்தவர்கள், அரச படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களை அழிப்பவர்கள் என்ற கருத்தினை புலிகள் மிக ஆழமாக தமிழ் மக்களுக்குள் விதைத்திருந்தனர்.

அதிலும் முக்கியமாக தமிழ் மக்கள் மீதான முஸ்லிம் ஊர்க் காவல் படையினரின் அத்துமீறல்களை சில தனி நபர்கள் சம்பந்தப்பட்ட விடயமாக அல்லது மொத்த இராணுவம் போலிஸ் என்ற அரச இயந்திரத்தின் பகுதிச் செயற்பாடாக கருதாமல், மொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதான பகை முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் உபாயமாக மிக தந்திரோபாயமாக பயன்படுத்தினர். முஸ்லிம் மக்கள் தொடர்பாக கற்பிதம் செய்யப்பட்ட கதைகளை வரலாறாக எழுதும் பணியினையும் புலிகள் கச்சிதமாக செய்தனர்.

ஆனால் இங்கு மிக முக்கியமாக குறிப்பிட வேண்டியது என்னவெனில் கிழக்கில் எங்காவது தமிழ் கிராமங்களில் அல்லது முஸ்லிம் கிராமங்களில் புலிகள் படுகொலைகள் புரிந்தால் இராணுவம் அல்லது இராணுவத்தின் உதவியுடன் தமிழ் கிராமங்களுக்குள் முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் நுழைவார்கள். அவர்கள் ஏதேனும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள், அதனால் தமிழ் மக்கள்

நிச்சயமாக பாதிக்கப்படுவார்கள் என்பது ஒன்றும் பொதுபுத்திக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம் அல்ல. என்றாலும் புலிகளைப் பொருத்தவரை இராணுவத்தின் மீதும் முஸ்லிம் மக்களின் மீதும் தமிழ் மக்கள் கொண்டுள்ள எதிர்ப்பினை, ஆத்திரத்தை வலுவூட்டுவதில்தான் தனித் தமிழ் ஈழ இலக்கை அடைய முடியும் என்பதில் புலிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்களைப் பொருத்தவரை எத்தனை தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதில் அவர்களின் "வெற்றியும்" தங்கி இருந்தது. தங்களின் படையணிக்கு ஆட் சேர்ப்பது, நிதி திரட்டுவது, என பல்வேறுபட்டவகையில் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளவும் புலிகளால் முடிந்தது.

உதராணத்துக்கு கிழக்கிலே, குறிப்பாக குருக்கள் மடத்தில் முஸ்லிம் பயணிகள் படுகொலை செய்யப்பட்ட பொழுது, ஏற்கனவே அங்கு பல தமிழ் அயல் கிராமங்களில் இருந்து தமிழ் அகதிகள் தஞ்சமடைந்திருந்தனர். புலிகளைப் பொருத்தவரை அவர்களின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் சரியானவையே என்ற மனப்பதிவினை ஏற்படுத்துவதில் அவர்கள் பெருமளவில் வெற்றி பெற்றிருந்தனர்.

புலிகள் திட்டமிட்ட வகையில் மிக நீண்ட கால நிகழ்ச்சி நிரலுடன் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் சிலவற்றை நான் தனிப்பட்ட வகையில் அறிந்து கொள்ள நேரிட்டது. சில தமிழ் கிராமங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் இராணுவத்துடன் முஸ்லிம்களும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று செய்திகள் பரவலாக பேசப்பட்டன என்பது மட்டுமல்ல மனித உரிமை நிறுவனங்கள் சிலவும் அவற்றைப் பதிவு செய்துள்ளன. குறிப்பாக நான் ஐக்கிய அமெரிக்காவில் சந்தித்த ஒரு பெண் பேராசிரியர் சத்திரகொண்டான் படுகொலைகள் பற்றிய ஆய்வுகளுக்காக அங்கு சென்று தமிழும் பேசக் கற்றுக் கொண்டவர், அவரும் புலிகளின் பக்க "மனித உரிமை" விவகாரங்களையும் பிரித்துப் பார்க்கத் தவறி இருந்தார். அவருடனான எனது மிக நீண்ட நேர சம்பாஷனை மூலம் பல விபரங்களை பேச நேரிட்டாலும், முஸ்லிம் தரப்பினர் மனித உரிமைச் செயற்பாடுகளில் மிக நீண்ட காலம் தகுந்த பயிற்சி பெற்றிருக்கவில்லை என்பதையே அவருடனான சம்பாஷனை எனக்கு உணர்த்தியது.முஸ்லிம்கள்

சர்வதேச அளவில் தங்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை முன்னெடுத்துச் செல்வதில் பின்தங்கியவர்களாகவே இருந்து வந்துள்ளனர் என்பதை யாழ் மனித உரிமை ஆசிரியர்கள் சங்கத்தின் மனித உரிமை அறிக்கைகள் சுட்டிக் காட்டி உள்ளன.

இது தொடர்பில் இராணுவத்தில் இருந்த சில சிங்கள தமிழ் பேசும் நபர்கள் முஸ்லிம்களாக தங்களைக் காட்டுவதிலும் பயிற்றப்பட்டிருந்தனர். மிகவும் பலராலும் குற்றம் சாட்டப்படும் “முனாஸ்” என்ற சிங்களவர் அந்த கால கட்டங்களில் கிழக்கு மாகாணமெங்கும் முஸ்லிம்களுக்குள் இஸ்லாமிய மத அடிப்படை விடயங்களைத் (சில அரபு வாசகங்களைக் கூடத்) தெரிந்து கொண்டு செயற்பட்ட அரச இராணுவ உளவாளி,1987 ஜனவரியில்கொக்கட்டிச்சோலை படுகொலைகள் சம்பந்தமாக காலஞ்சென்ற முன்னாள் இலங்கை ஜனாதிபதி பிரேமதாச ஜெ ஈ. ஏ. சோசா, தலைமையில் நியமித்த மனித உரிமை செயலணி தனது விசாரணை அறிக்கையில் கொக்கட்டிச்சோலை படுகொலைகளில் சம்பந்தப்பட்டவர்களின் நான்கு இராணுவ நபர்களை குறிப்பிட்டிருந்தனர். அதில் மட்டக்களப்பு தேசிய புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்த டயஸ் ரிச்சர்ட் எனும் நிஜப் பெயரைக் கொண்டவர், கேப்டன் மொஹமட் முனாஸ் என்ற முகமூடியுடன் செயற்பட்டார் என்று தெளிவாகவே குறிப்பிட்டுள்ளனர். அவரின் மீது தமிழ் கிராமங்களில் நடந்த பல அடாவடித்தனங்கள் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் பின்னர் சுமத்தப்பட்டன.

நான் ஒருதடவை ஒரு முஸ்லிம் கிராமத்தில் “முனாஸ்” என்று அழைக்கப்பட்ட அந்த சிங்கள இராணுவ உளவாளியை தற்செயலாக காண நேரிட்டது. ஒரு ஜீப் வாகனம் ஒன்றில் அவர் வந்து, அங்கு நின்றிருந்த மக்களை நோக்கிச் சென்ற பொழுது, அவர் யார் என்று விசாரித்து அறிந்து கொண்டேன். அவரின் முகம் இன்னமும் எனக்கு ஞாபகத்தில் உள்ளது.

அந்த வகையில் பொதுவாக முஸ்லிம்கள் மீதான குற்றச்சாட்டுக்களை புலிகளும் முதலீடு செய்து கொண்டனர். ஆகவே இராணுவத்தினர் தமிழ் மக்களைக் கொன்றனர் என்பதை அவர்களுடன் ஊர்க்காவல் படையினரும் சேர்ந்திருந்தனர் என்பதை குறிப்பிட்டு குருக்கள் மடப் படுகொலைகளை

*தமிழ் மக்கள் கண்டு கொள்ளத் தேவை இல்லை, அப்படியான தண்டனையே முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற விதத்தில் புலிகள் செயற்பட்டனர். மட்டக்களப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த, புலிகளை வெளிப்படையாக ஆதரித்த காலஞ்சென்ற ஜோசப் பரராஜசிங்கம், ஆரம்பத்தில் முஸ்லிம் ஊர்க்காவல் படை பற்றிய பரப்புரைகளை உலகெங்கும் மேற்கொண்டவர். ஆனாலும் பின்னர் முனாஸ் என்ற சிங்கள உளவாளிகள் பற்றிய செயற்பாடுகளை ஒத்துக் கொண்டார். அதற்கான காரணங்களில் ஒன்று கொக்கட்டிச்சோலை தமிழ் மக்கள் படுகொலை தொடர்பான விசாரணைக்கு கொமிசன் அறிக்கைகளும், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமை சங்க அறிக்கைகளுமாகும்.*

*தமிழ் மக்களின் மனதில் முஸ்லிம் விரோதப் போக்கிற்கு வித்திடும் ஒரு சதித் திட்டம் மிக நீண்ட காலமாகவே புலிகளின் நிகழ்ச்சி நிரல்களில் இருந்திருக்கிறது என்பதை அவர்களின் பிரத்தியேக பதிவுகள் சுட்டிக் காட்டுகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கல்வி அடிப்படையில் பின்தங்கிய நிலையில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் முஸ்லிம்கள் தமிழர்களின் விரோதிகள், சிங்களவர்களுடன் இணைந்து தமிழர்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் என்ற விஷக்கருத்தை விதைக்கும் வகையில் பல புனைவுகளை வரலாறாக எழுதி, தமிழ் மக்களை நம்பவைத்திருந்தனர். தமிழரசுக் கட்சியும் முஸ்லிம்கள் நம்பிக்கைக்குரியவர் அல்ல, தொப்பி புரட்டுபவர்கள் (தொப்பி புரட்டிகள்) என்று ஏற்கனவே தமிழ் மக்கள் மனங்களில் விதைத்த எதிர்க்கருத்தும் புலிகளின் முஸ்லிம் விரோத புனைவுகளை முன்னெடுக்க இலகுவாயிற்று.*

*புலிகளின் அவ்வரலாற்றுப் பதிவுகளில் சில குறிப்பிட்ட பகுதிகளை உங்களின் வாசிப்பிற்கு இங்கு பதிவிடுவதன் மூலம் புலிகள் சொல்லும் வரலாற்று மோசடியினை பகுத்தறிய முடியும். 1985 முன்னர், குறிப்பாக தமிழ் ஆயுத இயக்கங்களின் வருகைக்கு முன்னர் - கிழக்கில் நிலவிய தமிழ் முஸ்லிம் உறவுகள் பற்றிய ஆதாரப் பூர்வமான எந்தப் பதிவிலும் 1954ஆம் ஆண்டு வீரமுனை சம்பவம் ஒன்றினை மாத்திரம் தவிர, புலிகள் சொல்லும் சங்கதிகள் சொல்லப்பட்டிருக்கவில்லை. புலிகள்*

அந்த சம்பவத்திற்கு காது மூக்கு வைத்து பெரிய கதையையே சிருஷ்டித்திருந்தனர்.

அட்டப்பளம், வீரமுனை போன்ற கிராமங்கள் பற்றி புலிகள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்

“அட்டப்பள்ளத்தில் கலைந்துபோன அமைதி”

“அம்பாறை மாவட்டத்தின் வளங்கொழிக்கும் கிராமங்களில் அட்டப்பள்ளம் கிராமம் ஒன்று. மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால், மொழியால் ஒன்றுபட்ட முஸ்லிம் மக்கள் இனத்தின் மகிமையினையும் மொழியின் பெருமையினையும் சிங்கள இனவெறியர்களிடம் விலைபேசி விற்றுவிட்டார்கள். இனத்துவத்தை இழந்து மொழியின் மகத்துவத்தை மறந்து சிங்கள இராணுவத்தோடு சேர்ந்து தமிழ் மக்களை கொன்றுகுவித்தார்கள். நிலத்தையும், வீடுகளையும்,வியத்துளைத்த சொத்துக்களையும் பறித்தார்கள். அழித்து ஆக்கிரமித்தார்கள். ஏழாயிரம் விதவைகள் இன்று அம்பாறை மாவட்டத்தில் வாழ்கின்றார்களென்றால் அவர்களின் கணவன்மாரை கொன்றொழித்த கொடுமையில் சிங்களப்படையோடு பாதிப்பங்கு முஸ்லிம்களுக்குமுண்டு.

பணத்துக்காக இனத்தை மறந்துபோன முஸ்லிம் கொடூரவாதிகளின் கிராமங்களுக்கு நடுவே அமைந்துள்ளது.

அட்டப்பள்ளம். கிழக்கே கடலும்; மேற்கே ஆறும், வடக்கிலும் தெற்கிலும் முஸ்லிம் கிராமங்களையும் கொண்டது அட்டப்பள்ளம். வறுமை என்ற சொல்லை விரட்டிவிடும். வயல் நிலங்கள் நிறைந்து கிடக்கின்ற பூமி, கடல்வளமும், ஆற்று வளமும், இக்கிராமத்தின் பொருளாதாரவளம் குன்றாமல் காத்து நிற்கின்றன. இக்கிராமத்தின் வளந்தான் எதிரியின் கண்களை கவர்ந்தது. கொலை, தீவைப்பு, பாலியல் கொடுமை, கொள்ளை என தொடர் நடவடிக்கையால் இக்கிராமத்து மக்களை அடித்து அழித்து, விரட்டிவிட சிங்களப் படைகள் முடிவெடுத்தன. தங்கள் இன அழிப்புப் பசிக்கு முஸ்லிம்களையும் கரம்கோர்த்துக் கொண்டார்கள்.

ஞாயிற்றுக்கிமமை நாலு மணிக்கெல்லாம் போன ஆமியும் முஸ்லீமும் சேர்ந்து கடகடவென்று ஊரெல்லாம் சுத்தி

வளைச்சிட்டாங்கள். பனிச்சையடி, பிள்ளையாரடி ஆக்களெல்லாம் முதல் தாமே எழுப்பி குடியிருப்புப்பக்கம் போட்டாங்கள். ஆமி ஊருக்க புகுந்து எல்லாரையும் கொல்லப்போறானென்று கதையொன்று வந்தது. கேள்விப்பட்டவுடன் பயத்தில அவங்க எல்லாம் குடியிருப்புப் பக்கம் போனாங்கள். ஆனால் அவனுகள் குடியிருப்புக்கு போனவங்களையும் விடல்ல"

வீரமுனைக் கிராமம் தொடர்பில் முஸ்லிம்கள் 1954ஆம் ஆண்டிலிருந்தே அக்கிராமத்தை கையகப்படுத்த முயற்சிக்கிறார்கள் என்று குறிப்பிடும் புலிகள் ஒரு புதுக் கதையைக் கூட தங்களின் வரலாற்றில் பதிவு செய்துள்ளார்கள்.

"1954ஆம் ஆண்டு முஸ்லிம் காடையர்கள் இவ்வழகிய கிராமத்தை இரத்தக்களறியாக்கினார்கள். வாள் வெட்டுக்கும், கத்திவெட்டுக்கும் அஞ்சிய தமிழ்க்குடும்பங்கள் வீரச்சோலை,வளதாப்பிட்டிய, மல்லிகைத்தீவு, மல்வத்தை போன்ற கிராமங்களில் வாழத் தலைப்பட்டனர்.

1954ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏறக்குறைய முப்பத்தியாறு ஆண்டுகள் வீரமுனைக்கு வருவதும் தப்பி ஓடுவதுமாய் துன்பத்தையே சுமந்தனர். கொண்டவெட்டுவான் இராணுவ முகாமும், இக்கிராமத்தைச் சூழஇருந்த முஸ்லிம் கிராமங்களும் தமிழர்களை இங்கிருந்து அகற்றிவிடவேண்டுமென்ற திடமான முடிவுடன் செயற்பட்டனர். 1990ஆம் ஆண்டு ஆனி மாதமும், ஆடி மாதமும் இனிமேல் அங்கே தமிழ்மக்கள் வாழவோ, காலடிவைக்கவோ முடியாதென்ற நிலையை உருவாக்கியது. ஆனிமாதம் 20ஆம் திகதி வீரமுனை, வளத் தாப்பிட்டிய, வீரச்சோலைக் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டன. கொண்டவெட்டுவான் இராணுவமுகாமிலிருந்து வந்த இராணுவத்தினரும் அவர்களோடு இணைந்துவந்த முஸ்லிம் காடையர்களும் மக்களெல்லோரையும் வீரமுனைக் கோயிலடிக்கு செல்லுமாறு கட்டளையிட்டனர்

ஆனிமாதம் ஆரம்பித்த இனஅழிப்பு ஆடி மாதமும் தொடர்ந்து ஆவணிமாதத்தில் உச்சக்கட்டததை அடைந்தது. ஆவணி மாதம் 8ம் திகதி சிங்களப் படையினருடன் இணைந்து வந்த சிங்கள ஊர்காவற்படையினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும்,

எங்களாலும் தமிழர்களைக் கொல்லமுடியுமென்பதைக் காட்டினார்கள்."

என்றவாறெல்லாம் புலிகள் தமிழர் வரலாற்றை முஸ்லிம் விரோதத்துடன் எழுதி, 1985க்கு முன்னர் காணப்பட்ட தமிழர்-முஸ்லிம் உறவை திட்டவட்டமாக மறைத்து, இலங்கை இராணுவத்துடன் சேர்த்து தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் செயற்பட்டார்கள், செயற்படுகிறார்கள் என்றுஇனக் குரோதத்துடன் மிகப் பெரும் வரலாற்று திரிபினை செய்து தமிழ் முஸ்லிம் மக்களின் உறவை பகை முரண்பாட்டின் உச்சத்துக்கு நகர்த்துவதில் வெற்றியும் கண்டனர்.

ஒரு படி மேலே சென்று கிழக்கில் தமிழர்களின் குரல் நசுக்கப்பட்டிருந்ததாகவும், அதனாலேயே அவர்களின் கொலைகள் வெளிவரவில்லை என்றும் தாங்கள் எழுதிய "வரலாற்றை" பின்வருமாறு (கு) தர்க்க ரீதியாக நிரூபிக்க முயறசித்துள்ளார்கள். அந்த வகையில் கிழக்கில் செயற்பட்ட அனைத்து தமிழ் அரசியல் கடசிகள், இயக்கங்களையும் தேசத்து துரோகிகளாக, தமிழர்களின் எதிரிகளாக காட்டி, தமிழ் மக்களின் ஏகபோக பிரதிநிதித்துவத்தையும் புலிகள் உறுதி செய்து கொள்வதில் கவனமாக இருந்தனர்.

"யாழ்மண்ணில் நடந்த படு கொலைகளை மக்கள் துணிந்து வெளிக்கொண்டு வந்தார்கள். இதற்குக் காரணம் அங்குள்ள தமிழ்மக்களுக்கு இராணுவஅச்சுறுத்தல் மட்டுமே இருந்தது. ஆனால் மட்டக்களப்பு மக்களுக்கு இராணுவ அச்சுறுத்தல் சிங்கள காடையரின் பயமுறுத்தல் முஸ்லிம்களின் அச்சுறுத்தல், தேசத்துரோகிகளாய் நிற்கும் பலவேறு அமைப்புக்களின் பயமுறுத்தல் என பலபக்க அச்சங்களிருப்பதனால் பல்லாயிரக்கணக்கில் கொலை செய்யப்பட்ட தமிழர்களின் குரல் வெளிவராமலே அடங்கி அமுங்கிப்போய்விட்டது."

இந்த புலிகளின் "வரலாறுகள்" யாவும் புலிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் சிறார்களுக்கு சொல்லப்பட்டன. கிடைத்த தகவல்களின்படி புலிகளில் இணைந்து கொண்ட முஸ்லிம் இளைஞர்களுக்கு புலிகள் எழுதிய முஸ்லிம் விரோத "வரலாறுகள்" சொல்லப்பட்டிருக்கவில்லை என்ற முடிவுக்கு வந்தாலும்; சில புலி முஸ்லிம் இளைஞர்கள், தாம் சார்ந்த இனம், சமூகம்

*என்றில்லாமல் முஸ்லிம் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தியதுடன், அடாவடித்தனங்களையும் மேற்கொண்டுள்ளனர். அதன் காரணமாகவே சில முஸ்லிம் புலி உறுப்பினர்கள் 1990 ஆகஸ்து காத்தான்குடி ஏறாவூர் படுகொலைகளின் பின்னர், அவ்வப்பிரதேச முஸ்லிம்களாலே தண்டிக்கப்பட்டனர். சிலர் தலைமறைவாகிவிட்டனர். புலிகளும் தமது இயக்கத்தில் இருந்த புலி உறுப்பினர்களை கொன்றுள்ளனர் என்றும் தகவல்கள் உள்ளன. அவை பற்றிய செய்திகள் இந்நூலுக்கு அவசியமற்றவை எனக் கருதுகிறேன்.*

*அந்த வகையில் சிங்கள அப்பாவி மக்கள் மீதான வன்முறைகளுக்கு புலிகள் எப்படி தமது இயக்கத்தில் சேர்ந்த சிறுவர்களுக்கு மூளைச் சலவை செய்தார்கள் என்பதை அறிந்து கொளவதன் மூலம் முஸ்லிம் விரோத நிலைப்பாட்டிற்கும், அவர்கள் மீதான வன்முறைகளுக்கும் புலிகளில் சேர்வோர் எப்படி பயிற்றப்பட்டிருப்பார்கள் என்பதனை புரிந்து கொள்ள முடியும்.*

*யாழ்ப்பாண வைத்தியசாலையில் பனியாற்றிய உளவளத்துணை வைத்தியரான கலாநிதி. தயா சோமசுந்தரம் புலிகள் அதிகமாக விடலைப் பருவத்தினரை தமது இயக்கத்தில் சேர்த்ததைய்க் குறிப்பிட்டு; 11 வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து 15 வயதில் நான்கு வருடங்களாக புலிகளிலிருந்து "போராடிய" ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞர் பற்றி ஒரு பிரபல ஆங்கில பத்திரிக்கையாளருக்கு (தி தி இண்டிபெண்டன்ட் - இலண்டன்) குறிப்பிட்டதை இங்கு நினைவு கூர வேண்டியுள்ளது.*

*"தனது நண்பர்கள் பலரை இழந்த ஒரு தாக்குதலின் பின்பு அவனுக்கு பெண்களும் குழந்தைகளும் கொலை செய்யப்பட்ட வீடியோ ஒன்றினை காண்பிக்கப்பட்டு அக்கொலைகளை அவனது எதிரிகள் செய்ததாக சொல்லப்பட்டது" அவ் விடலைப் பருவத்தினன் ஒரு சிங்கள கிராமத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டான்.*

*அவன் எவ்வாறு மக்களை கொன்றான், எவ்வாறு ஒரு சிறு குழந்தையை அதன் கால்களை பிடித்து அக்குழந்தையின் தலையை சுவரின் மீது வீசி அடித்துக் கொன்றான், அப்போது அந்தக் குழந்தையின் தாய் கதறி அழுததை பார்த்து சந்தோசப்பட்டான்.*

அதன் பின்னர் அவனது தோழர்கள் அவனை கட்டுப்படுத்துவதை கடினமாக கண்டார்கள். அவன் திருமண விழாக்களில் கோவில் உற்சவங்களில் மக்கள் சந்தோஷமாக இருப்பதை காணும்போது ஆத்திரமும் அவமதிப்பும் கொண்டான்." என்றும் தனது உளநல வைத்திய அனுபவத்தை குறிபிட்டிருந்தார்.

எப்படி சிங்கள இராணுவ தமிழ் விரோத நடவடிக்கைகள் வீடியோ புகைப்பட ஆதாரங்களுடன் காண்பிக்கப்பட்டதோ,அவ்வாறே முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எதிராக 1950களில் இருந்தே செயற்பட்டு வருகிறார்கள், முஸ்லிம்கள் தமிழர்களின் விரோதிகள் என்ற கற்பிதங்களை எவ்வித வரலாற்று ஆதாரங்களுமின்றி புலிகள் தாம் எழுதிய "போராட்ட" கால வரலாற்றில் பதிவு செய்தனர். ஆனால் எந்த சந்தர்ப்பதிலும் புலிகள் அப்பதிவுகளை பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை.

# அத்தியாயம் (3)

*இந்திய சமாதானப்படிகளின் வெளியேற்றத்துடன், இலங்கை இராணுவத்துடன் முறுகல் ஏற்படுத்திய புலிகள் நாட்டின் ஏனைய பாகங்களுடன் இணைக்கும் பிரதான தரை வழிப்பாதை கி4 ஊடறுக்கும் நகரங்களான குருக்கள்மடம், ஓந்தாச்சிமடம், கிரான்குளம் போன்ற இடங்களில் வாகனக் கடத்தல்கள், பயணிகள் கடத்தல்களை மேகொண்டனர். லெப்டினன்ட் மணியின் தலைமையிலே முஸ்லிம்களுக்கு எதிரான கொடுமைகள் குருக்கள்மடத்தில் நடந்தேறின.*


*12.07.1990 கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் காரணம் மணிதான் என்று ஒரு மனித உரிமை அறிக்கையும் ஆதாரபூர்வமாக மணியின் பெயரை தமது மனித உரிமை மீறல் அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளனர். அன்றைய கிழக்கின் புலிகளின் தலைமையான கரிகாலனின் ஆமோதிப்பும் மணிக்கு கிடைத்தது.*

*புலிகளின் மாவீர் பதிவுகளில் லெப்டினன்ட் மணி என்பவரின் புகைப்படம் திட்டமிட்ட வகையில் தவிர்க்கப்பட்டுள்ளது. அதுவே மணியின் குருக்கள்மட பின்னணியை மேலும் நீருபணம் செய்கிறது.*

*ஆனால் லெப்டினன்ட் மணி பற்றி புலிகளின் பிரசுரிக்கப்பட்ட தகவல்களின்படி.*

*“லெப்டினன்ட் மணி,இயக்கப் பெயர்: மணி; இயற்பெயர்: சுந்தரம் லோகேஸ்வரன் பிறப்பு: 26.04.1973 - இறப்பு 04.07.1995, இவர் மட்டக்களப்பு கொம்மாதுறை, எனும் ஊரைச் சேர்ந்தவர்; யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் இவர் (வீரச்) சாவு அடைந்தார்.”*

*லெப்டினன்ட் மணி என்பவர் எப்படி இருப்பார் என்பதை அவரின் ஊர்வாசிகள், புலிகள், குருக்கள் மடத்து மக்கள் என பலர் அவரை நேரில் கண்டவர்கள் அறிந்திருப்பர். ஆனால்*




*புலிகள் இவற்றின் புகைப்படத்தை எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களின் பிரசுரங்களிலோ அல்லது இணையங்களிலோ எந்த சந்தர்ப்பத்திலும் வெளியிடவில்லை. புலிகள் மறைத்த, அவரின் நிழற்படம் ஒன்றை இங்கு பிரசுரிப்பதன் மூலம் இதுவரை காலமும் புலிகள் மறைத்து வந்த இவரின் முகமூடியை நீக்குகிறேன். இந்த மணிதான் குருக்கள்மட கடத்தலுக்கும் கொலைகளுக்கும் காரணமானவர் என்ற முடிவுக்கு வரக் கூடியதாக இதுவரை கிடைத்த சான்றுகள் உள்ளன.*

*கிழக்கில் முஸ்லிம் கிராமங்களில் படுகொலைகளை செய்த புலிகள் வடக்கிற்கு அழைக்கப்பட்டனர் அல்லது அனுப்பப்பட்டனர். அதற்கான காரணம் அவர்களை அப்பிரதேச தமிழ் மக்களில் ஒரு சிலர் சிலவேளைகளில் நன்கு அறிந்து கொள்ள நேரிட்டால், அதனால் ஏற்படும் பிரதிகூலங்கள் பற்றி புலிகள் எப்பொழுதும் கவனமாக இருந்தனர். அந்த வகையில் மணி எனும் சுந்தரம் லோகேஸ்வரன் பற்றி சிலர் அறிந்திருந்தனர், ஆகவே அவர் யாழ்பாணத்துக்கு அழைக்கப்பட்டார் என்பதும் அங்கு ஏற்பட்ட வெடி விபத்தில் 04.07.1995 அன்று அவர் கொல்லப்பட்டார். ஆனால் குருக்கள்மட படுகொலை குறித்து மாற்று இயக்க தமிழர் சாட்சியங்கள், மற்றும் தனிநபர்கள் சிலர் இன்றும் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பாக புலிகள் நாட்டுப்பற்றாளர்கள் என்ற பேரில் தங்களின் உளவாளிகளை முஸ்லிம் கிராமங்களுக்குள் பயன்படுத்தி இருந்தார்கள்,*

அவர்களில் ஒரு சிலரை இங்கு புலிகளின் இரகசிய தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

குறிப்பாக குருக்கள்மடப் படுகொலைகளைப் பொருத்தவரை அங்குள்ள சில தமிழர்கள் மனித உரிமை நிறுவனம் ஒன்றிற்கு சில செய்திகளை சொல்லி இருந்தனர். அவை யாவும் குருக்கள்மடப் படுகொலை எப்படி நடந்தேறியது என்பதை பதிவு செய்ய உதவியுள்ளன.

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கிடைத்த தகவல்களின் படி இன்னமும் உறுதி செய்யப்பட வேண்டியே உள்ளது. கடத்திக் கொல்லப்பட்டவர்கள் 160 பேர்கள் என்று அதற்கு சற்று மேற்பட்டவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆயினும் காணாமல் போனோர் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கிணங்க 69 பேர்களின் பெயர் விலாசங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பல்வேறு மனித உரிமை மற்றும் முஸ்லிம் சமூக அமைப்புக்களின் திரட்டல்கள் மூலம் பெறப்பட்ட குருக்கள்மடப் படுகொலைகள் பற்றிய தகவல்களை மீள் விஜயம் செய்யவேண்டிய தேவைஏற்பட்டுள்ளது, இதுவரை குருக்கள்மடம் தொடர்பில் பின்வருவோர் காணாமல் போயுள்ளதாக -கொல்லப்பட்டுள்ளதாக- முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1. எம்.ஐ.எம். ஜாபீர், இல.16,எம்.சி.எம். ஒழுங்கை, காத்தான்குடி – 05

2. எம்.ஐ.எம். பாயிஸ், இல. 16,எம்.சி.எம். ஒழுங்கை காத்தான்குடி – 05

3. எம்.எல்.எம்.ரபீக், இல.06, நூரானியா மாவத்தை, புதிய காத்தான்குடி.06

4. எம்.எல். அப்துல் சத்தார் இல.03,வீ எச் ஒழுங்கை,பழைய காத்தான்குடி.01

5. ஐ.எல்.எம். ஹைருதீன், இல.33, ஜாமியுள்ளாபிளூன் வீதி, காத்தான்குடி.06

6. பக்கீர் தம்பி மொஹிடீன் பாவா.இல.64, சுஹதா வீதி, காத்தான்குடி.01

7 எம்.ஐ.எம் சித்தீக் இல.20/2, ஹைராத் ஒழுங்கை, ஆரையம்பதி,,காத்தான்குடி

8 எஸ்.எம். வஹாப்பிடீன், அல் அமீன் வீதி, நியூ காத்தான்குடி.06

9.எஸ்.எம்.மன்சூர், விஸ்டம் அவென்யூ மாவத்தை, காத்தான்குடி

10. ஏ.எல்.எம். ஜலாலுதீன் இல.06, சீஈபீ. ஒழுங்கை, காத்தான்குடி.06

11. எம்.எம்.எம். ஜாபீர். இல. 03 வீ எச் ஒழுங்கை,பழைய காத்தான்குடி..01

12. எச்.எம்.பவுசுல் அமீன், இல.24/9, பவ்சி மாவத்தை,புதிய காத்தான்குடி.01

13. எம்.எம்.எம். அரூஸ் இல.05, பாவா ஒழுங்கை காத்தான்குடி.06

14. ஏ.எல். கச்சி மொஹமட், இல. 31, அன்வர் பாடசாலை வீதி,புதிய காத்தான்குடி.06

15. ஜெ.ஏ. பாயிஸ். இல. 34/11, தவ்ஜீத் கல்லூரி வீதி, காத்தான்குடி.02

16. வை. வீ, கச்சி மொஹமட்,இல. 44,ஷெரீப் புரொக்டர் ஒழுங்கை,

காத்தான்குடி.02

17. மொஹமட் பாரீட்,ஆபிதா மன்ஸில், மத்திய வீதி,காத்தான்குடி.03

18. ஏ.எல்.எம்.ஸலாம். இல. 17/1, அரபுக் கல்லூரி வீதி,காத்தான்குடி.01

19. எஸ்.எச். ஏ, ஹபீபுர் ரகுமான், இல.90/06, புதிய வீதி,காத்தான்குடி.04

20. ஏ. அபூபக்கர், இல. 13/5, அமானுல்லா வீதி, மொஹிடீன் ஒழுங்கை காத்தான்குடி.06

21. மீரா சாஹிப் அப்துல் அஸீஸ், பாரீட் நகரம் புதிய காத்தான்குடி –வடக்கு

22. ஏ. எல்.எம். ஹாரிப், ஹாஸ்டல் வீதி, ஏழாவதுஒழுங்கை, புதிய காத்தான்குடி.06

23. அஹமட் மொஹிடீன் கலீல்,ஹயாத்து மொஹமட், ஓடாவியார் ஒழுங்கை,காத்தான்குடி

24. அபூபக்கர் மொஹமட் நளீர்,ஷாஹுல் ஹமீது வீதி, காங்கேயனோடை.12 ஆரையம்பதி

25. நூர் முஹம்மட் அப்துர் ரகுமான்,காட்டுமாவடி வீதி,காங்கேயனோடை, 12 ஆரையம்பதி.

26. அப்துல் மஜீத் அப்துல் குத்தூஸ்,பாரீட் நகரம் புதிய காத்தான்குடி.02

27. முஹம்மட் அப்துல் ஹனீபா,எம்.சீ அப்துல் காதர் வீதி, கடாபி ஒழுங்கை,காத்தான்குடி.03

28. யு.சுபைர், வயோதிபர் விடுதி வீதி,காத்தான்குடி.01

29. யு எல்.எம். சமீம், பழைய வீதி,காத்தான்குடி.05

30. மொஹமட் லெப்பை மொஹமட் காசிம், ஜாமியுள்ளாபிரூன் வீதி, காத்தான்குடி.05

31. ஸஹாபிதீன் சுபைர்,சாவியா வீதி, காத்தான்குடி.01

32. எம்.பீ. ஹைதர், அலி ஜாமியா வீதி, காத்தான்குடி.01

33. எஸ்.ஹாலிதீன், மோதினார் ஒழுங்கை, காத்தான்குடி.01

34. எம்.எச்.ஜைனுலாபிதீன்,அல் அமீன் வீதி, புதிய காத்தான்குடி.06

35. எச்.எம்.ஏ.ரஹும்,ஹிலுரியா வீதி, மஞ்சந்தொடுவாய்.

36. யு.எல். அக்பர், ஹிலுரியா வீதி, மஞ்சந்தொடுவாய்.

37. சிந்தா சாஹிப் ஆதம் பாவா,நாகையடி அவ்லியா ஒழுங்கை,காத்தான்குடி.06

38. கே.எம். சீனி மொஹமட், ஹிலுரியா வீதி, மஞ்சந்தொடுவாய்.

39 ஷாஹுல் ஹமீது மொஹமட் மஹ்ரூப்,சாவியா வீதி, காத்தான்குடி.01

40 அப்துல் கரீம் அப்துல் மஜீத்,சாவியா வீதி,காத்தான்குடி–01

41 சம்சுதீன் அப்துல் ஸலாம்,சாவியா வீதி,காத்தான்குடி.01

42 சம்சுதீன் ஷபியுதீன்,சாவியா வீதி,காத்தான்குடி.01

43 எம்..எம். ஆலிம் ஹபீப் மொஹமட், சாவியா வீதி,காத்தான்குடி 01

44. பள்ளித் தம்பி கலீலுர் ரகுமான். வீ எச். ஒழுங்கை, காத்தான்குடி.01

45. எம்.எல்.எம் ஹனீபா,ஏ. பீ.எம். ஒழுங்கை காத்தான்குடி.03

46. அசனார் மொஹமட் பாரூக், கப்பல் ஆலிம் ஒழுங்கை,பழைய வீதி,

காத்தான்குடி.03

47. ஹயாத் மொஹமட் சுபைதீன்,எஸ்.பீ. ஒழுங்கை. காத்தான்குடி.02

48. ஆதம் பாபா சுல்தான் இப்ராஹிம், கிராமோதய வீதி,புதிய காத்தான்குடி.03

49. எம்.ஐ.எம். ரபீக். அல் அமீன், இரண்டாம் குறுக்குத் தெரு,

புதிய காத்தான்குடி.06

50. அலியார் லெப்பை அப்துல்காதர். ஜின்னா ஹாஜியார் ஒழுங்கை காத்தான்குடி.06

51. எம்.எல்.எம்.ரபீக், கோர்னி ஒழுங்கை, காத்தான்குடி.05

52. கச்சி மொஹமட் நசுருதீன்,கர்பலா வீதி, புதிய காத்தான்குடி.06

53. எம்.சி.எம். உவைஸ், ராசா ஆலிம் வீதி, காத்தான்குடி.06

54. மொஹமட் மீராசாஹிப் மொஹம்மதலிவா,மெயின் ஸ்ட்ரீட், காத்தான்குடி.06

55. ஏ.எல்.எம். அலாவுதீன், பீஜே.எம் வீதி,காத்தான்குடி.05

56. ஆதம் லெப்பை அன்சார்,நாகையடி அவ்லியா வீதி காத்தான்குடி.06

57. மொஹமட் முஸ்தபா கஸ்ஸாலி,கல்லேல, பொலன்னறுவை

58. மொஹமட் காசிம் ரமலான், 19 வட்டாரம், மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு.

59 மொஹமட் காசிம் அப்துல் மஜீத், 19 வட்டாரம், மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு.

60. மொஹமட் ஹனீபா மொஹமட் லாபிர்,மெத்தைப் பள்ளி வீதி,

காத்தான்குடி.03

61. அப்துல் ஹாமீம் சைனம்பூ உம்மா,எஸ் என் டி ஒழுங்கை நூரானியா மாவத்தை, புதிய காத்தான்குடி.06

62. மொஹமட் மன்சூர் எஸ் என் டி ஒழுங்கை நூரானியா மாவத்தை,புதிய காத்தான்குடி.06

63. மொஹமட் இஸ்மாயில் அமானுல்லாஹ் நாகையடி அவ்லியா வீதி,காத்தான்குடி.06

64. மொஹமட் மீரா சாஹிப் மொஹமட் சமீம்,மெயின் ஸ்ட்ரீட், காத்தான்குடி.06

65. நூர் முஹம்மட் பாரூக்,காட்டுமாவடி வீதி, காங்கேயனோடை.12 ஆரையம்பதி

66. நூர் மொஹமட் நசார்,காட்டுமாவடி வீதி, காங்கேயனோடை.12 ஆரையம்பதி

67. மொஹமட் இஸ்மாயில், அப்பாசியர் ஒழுங்கை,டீன் வீதி, காத்தான்குடி 06

68. அலியார் அப்துல் மஜீத், சீனி ஹாஜியார் ஒழுங்கை, பாலமுனை ஆரையம்பதி.

69. அபூபக்கர் ஜுனைதீன்,டீன் வீதி, காத்தான்குடி.06

சுமார் இருபத்தி நான்கு வருடங்களுக்கு பின்னர் (2015) குருக்கள்மட மனிதப் புதைகுழிகள் விவகாரத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான சிப்லி பாரூக் என்பவர் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு புதைகுழிகள் தோண்டப்படும் என்று நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட காரணாமாயிருந்தார் என்று சொல்லப்படுகிறது. இது தொடர்பில் முயற்சிகளை மேற்கொள்ள முயன்ற இன்னுமொரு காத்தான்குடியைச் சேர்ந்த பிரபல வணிகர் ஒருவர் என்னிடம் இலண்டனில் சந்தித்து தனது குடும்பத்தினர் சிலர் குருக்கள்மடத்தில் புலிகளால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டதாகவும், அது தொடர்பில் கண்கண்ட சாட்சியான ஒரு தமிழர் தன்னிடம் அந்த இடத்தை அடையாளம் காட்டியதாகவும் குறிப்பிட்டார். அவர் இலங்கை சென்றதும்அது தொடர்பில் துரிதமாக செயற்படப் போவதாக என்னிடம் உறுதி அளித்தார். தேவைப்படின் நானும் சட்ட ரீதியாக உதவுவதற்கு தாயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டேன்.

அது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகைகள் எடுப்பது பற்றி நாங்கள் இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாற நேரிட்டது.


குருக்கள்மடத்தில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட முஸ்லிம்களின் உடலங்களின் எச்சங்களையாவது தோண்டி எடுத்து மத அடிப்படையில் அடக்கம் செய்ய வேண்டும் என்பதும், புலிகளின் மிலேச்சத்தனமான படுபாதகச் செயலை ஆதாரங்களுடன் பதிவு செய்வதும் குருக்கள்மட புதை குழி தோண்டுதலின் நோக்கம்ஆகும் என சம்பந்தப்பட்ட குடும்பத்தினர்களும் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளில் சிலரும் அறிக்கைகளும் விட்டனர்.


# அத்தியாயம் (4)


சமூகத்தின் பல மட்டங்களிலும் புலிகளுக்காக விசுவாசமாக செயற்பட்ட புலி ஆதரவாளர்கள் "நாட்டுப்பற்றாளர்கள்" என்று புலிகளால் அவர்களின் மரணத்தின் பின்னர் வெளிப்படையாக பிரகடனப்படுத்தப்பட்டனர் என்பது சகலரும் அறிந்த செய்திதான். அத்தகையோர் புலிகளின் ஆதரவாளர்களாக செயற்படுகிறார்கள் என்று குற்றம் சாற்றப்பட்டவர்களாக இருந்தவர்கள், அவர்களின் மரணத்தின் பின்னர் புலிகளினால் ஏதோ ஒரு விதத்தில் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

நோர்வே அனுசரணையுடன் அமுலுக்கு வந்த சமாதான கால அந்திம பகுதியில் வீதிகண்ணிவெடியில் கொல்லப்பட்ட முன்னாள் தமிழர் கூட்டமைப்பு எம்.பீ. சந்திரநேரு அரியேந்திரன்
08/02/2005 (2/8/1995), பிரபாகரனின் மாமனார் எனப்படும் கந்தையா ஏரம்பு ("ஏரம்பு ஐயா"), பத்திரிக்கையாளர் ஐயாத்துரை நடேசன் (31.05.2004) உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த மட்டக்களப்பு அன்னை பூபதி (19 March 1988 )..ஆகியோர் பலருக்கும் தெரிந்த புலிகளால் அதிகம் கொண்டாடப்பட்ட சில நாட்டுப்பற்றாளர்கள் ஆகும்.

நாட்டுப்பற்றாளர் என்று புலிகளால் வெளிப்படையாக பிரகடனப்படுத்தப்படாமல், பகிரங்கமாகக் கொண்டாடப்படாமல் புலிகளின் உளவாளிகளாக சிலர் செயற்பட்டு புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளின் பொழுது, அல்லது புலிகளின் மீது இராணுவம் நடத்திய தாக்குதல்களின் பொழுது இறந்துள்ளனர். இவர்கள் மாவீரர்கள் என புலிகளால் அழைக்கப்படவில்லை. இவர்கள் புலி சீருடை அணிந்தவர்கள் அல்லர். நாட்டுப்பற்றாளர்கள் என்று பகிரங்கமாக வெளியிடப்பட்ட எந்த நிரலிலும் இவர்களின் பெயர்களை புலிகள் கச்சிதமாக தவிர்த்து வந்துள்ளனர். அவர்களில் சிலருள் சந்திரபோசும் (Photo) ஒருவர், அவரைப் போலவே மக்களுக்குள் மக்களாக கலந்து செயற்பட்ட புலிகளுள் "நாட்டுப்பற்றாளர்" கிருஷ்ணகுமார் மற்றும் "நாட்டுப்பற்றாளர்"




தயாபரன் ஆகியோரின் உளவு மற்றும் இயக்கச் செயற்பாடுகள் தேடுதலுக்கு உரியவை.

புலிகளுக்காக உளவுப் பணி புரிந்து, இறந்து போன புலிகள் சிலரை, புலிகள் திட்டமிட்டு மறைத்துள்ளனர் என்பதற்கு ஆதாரமாகவே, அப்படி மறைக்கப்பட்ட சிலரின் புகைப்படங்களை இந்நூலில் பிரசுரித்து, அதன் மூலம் அவர்களை தெரிந்தவர்கள் ஞாபகத்தில் கொண்டு வர முடியும் என்று நினைக்கிறேன். அதன் மூலம் பல சந்தேக முடிச்சுக்கள் அவிழ்க்கப்பட ஏதுவாக இருக்கலாம். இவர்களின் புகைப்படங்களை இந்நூலில் பிரசுரிப்பதன் மூலம்

- இப்பொழுது குருக்கள்மட மனிதப் படுகுழிகள் தோண்டப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டு திடீரென்று அவை யாவும் அரசியல் போட்டாபோட்டி காரணமாக இடை நிறுத்தப்பட்டிருப்பினும்- குருக்கள் மடம் பற்றியது மட்டுமல்லால் புலிகளின் வேறு பல படுகொலைகள், மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இவர்களைப் பற்றிய தகவல் திரட்டல்கள் உதவக் கூடும்.

அப்படியான இன்னுமொரு முக்கியநாட்டுப்பற்றாளரேவசந்தன் (போட்டோ) ஆகும். இவர் 1998இல் இறந்துள்ளார். ஆனால் இவரின் பெயரையோ புகைப்படத்தையோ புலிகள் வெளிப்படுத்தவில்லை. அந்த வகையில் “ மாவீரரது நினைவுகள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் “ என்று கூறி வந்த புலிகளின் தலைவர் பிரபாகரன் இவர்களை மாவீரர்கள் என்று கருதினாரா இல்லையா என்பதற்கப்பால், இவர்களை மறைப்பதில் திட்டமிட்டு செயற்பட்டுள்ளார் என்பது புலனாகிறது. புலிகள், தங்களுக்குள் இரகசியமாக பாதுகாத்த இவர்களின் பெயர்கள் உட்பட்ட சகல விபரங்களும் பல சந்தேகங்களை எழுப்புகின்றன. இவர்களில் சிலர் குறிப்பிட்ட தனிநபர் படுகொலைகளிலும்கூட சம்பந்தப்பட்டிருக்கலாம்.

குருக்கள் மடத்தில் காணாமல் போன -கொல்லப்பட்ட- முஸ்லிம்கள் பற்றி ஜனாதிபதி ஆணைகுழுவில் முறையிட்டவர்கள், மற்றும் அங்கு மனிதப்படுகுழிகள் தோண்டப்படுவதை குறித்து போலீஸ் முறைப்பாடுகளை செய்தவர்கள் பலரின் முயற்சிகள் வியர்த்தமாகிவிடுமோ என்ற சந்தேகம் முதன் முதலில் புதை குழிகளை அடையாளம் காட்டுவதில் ஏற்பட்ட அரசியல் போட்டாபோட்டி காரணமாக ஏற்பட்டது.

முதலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கடசியின் காத்தான்குடி நகர சபை உறுப்பினர் றஊப் ஏ மஜீத், கிழக்கு மாகான சபை உறுப்பினர் சிப்லி பாரூக் ஆகியோர் மனிதப் புதை குழிகள் எங்கு அமைந்துள்ளது என்று அடையாளம் காட்டப்பட்ட இடங்களுக்கு சட்ட மருத்துவ அதிகாரிகளும், புதைபொருள் மற்றும் மண்ணியல் ஆய்வுத்துறை நிபுணர்கள் குழுவும் நீதிமன்ற கட்டளைப்படி குருக்கள் மடத்துக்கு விஜயம் செய்து, அங்கு குழிகளினை அடையாளம் காண்பதில் இவ்விரண்டு

அரசியல்வாதிகளுக்குமிடையில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக குழிகளைத் தோண்டும் முயற்சியைக் கைவிட்டனர்.

மீண்டும் மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் நீதி மன்றத்தை அணுக வேண்டிநேரிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன் பயனாய் மீண்டும் மனிதப் படு குழிகளை தோண்டுவதற்கான முயற்சிகள் முனைப்பு பெற்றன என்று செய்திகள் உலா வந்தன. இந்த மனிதப் படுகுழிகள் தோண்டப்படல் வேண்டும், அதிலும் குறிப்பாக கருணா, பிள்ளையான் போன்றோர் விசாரணைக்கு உட்படுத்தப்படல் வேண்டும் என்று நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் காத்தான்குடி மாநகரசபையில் முன் மொழிந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. தமிழர் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் கூட்டமைத்துக் கொள்ள முயறசிக்கும் வகையில் செயற்பட்ட நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம், தமிழர் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படையாக கருனாவையோ பிள்ளையானையோ விசாரிக்க கோரிக்கை விடுக்காத பொழுதும், தமது தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தமது உறவினை உறுதி செய்வதற்கு உதவும் என்பதால், தாங்கள் அரசியல் ரீதியில் அங்கத்துவம் வகிக்கும் காத்தான்குடி நகரசபையில் கருணா, பிள்ளையான் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டு ஒரு முன் மொழிவினை நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலை அனுசரித்தே மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்த பின்னணியில், என்னை இலண்டனில் சந்தித்த காத்தான்குடி வணிகர்;, அவரின் குடும்பத்தினர் சிலர் குருக்கள் மடத்தில் கொல்லப்பட்டிருந்தும், குருக்கள் மடத்தை சேர்ந்த ஒரு தமிழர் மனிதப் படுகுழிகள் உள்ள இடத்தை அவருக்கு அடையாளம் காட்டியிருந்தும், அதே ஊரைச் சேர்ந்த இரண்டு அரசியல்வாதிகள் புதைகுழிகள் உள்ள இடம் பற்றிய சர்ச்சையை திடீரெண்டு கிளப்பிய வேளையில், காணாமல் போய்விட்டார். இந்நிலையில் என்னிடம் குருக்கள்மட புதைகுழி விவகாரத்தில் செயற்பட உறுதி வழங்கியவர் என்ற வகையில், குருக்கள்மட விவகாரம் தொடர்பாக - அவருடன் மீண்டும் பேச விரும்புவதாக அவருடன் சம்பந்தப்பட்டவருக்கு நான் அறிவித்தும்- அவர் என்னை தொலைபேசியிலும் கூட தொடர்பு கொள்ளவில்லை..

ஆயினும் நான் அந்த வணிகரைச் சந்தித்து இரண்டு மாதங்களின் பின்னர் இலங்கைக்கு சென்று, அவரைச் சந்திக்க பல தடவை முயற்சித்தும் முடியவில்லை. ஆரம்பத்தில் எனது தொலைபேசி அழைப்பிற்கு (எனது இலங்கை தொலைபேசி இலக்கம் தெரியாதபடியினால்) பதில் அளித்தார்; சந்திப்பது பற்றியும் சிலாகிக்கப்பட்டது. ஆனால் பின்னர் அவருக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்த முடியவில்லை, இந்த நிலையில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் காட்டிய ஆர்வத்தினால், குருக்கள்மட படுகுழிகளை தோண்டுவதில் நடைபெற்று வரும் சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஆணைக்குழு விசாரணைகள் பற்றிய பல தகவல்களை அறிய முடிந்தது. காத்தான்குடியைச் சேர்ந்த வணிகரின் குருக்கள் மடம் பற்றிய தகவல் சிப்லி பாரூக்கின் முயற்சிக்கு மிகவும் உதவி இருக்கும், ஆனாலும் அந்த வணிகரைச் சந்திப்பதற்கான எனது எல்லா முயற்சிகளும் வியர்த்தமாகின, திட்டமிட்ட வகையில் சந்திப்பதை அவர் புறக்கணிக்கிறார் என்ற முடிவுக்கே தீர்க்கமாக என்னால் வர முடிந்தது.

இந்த பின்னணியில், அந்த வணிகருக்கு சொந்தமான மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாதுறு ஓயா குடியேற்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ரெதிதென்ன எனப்படும் இடத்தில் உள்ள பண்ணையில் ஒரு விருந்துபசாரம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்க பிரமுகர்கள் கலந்து கொண்டதாகவும் எனது காத்தான்குடி தொடர்புகள் தெரிவித்தன. அப்படியாயின் முதன் முதலில் குருக்கள் மட விவகாரத்தை முன்னெடுத்தவர்கள் தாங்களே என்று கூறும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தினர் (தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலை அனுசரித்து கருணாவையும் பிள்ளையானையும் தண்டிக்க கோரியாயினும்,) படுகுழிகள் பற்றிய இடத்தை சரியாக அடையாளம் கண்ட (ஒரு தமிழரையும் இடம் குறித்து சாட்சியமாகக் கொண்ட) ஒருவரை தன்னகத்தே கொண்டிருந்திருந்தால் குருக்கள் மட விவகாரத்தில் ந. ம. இயக்கம் ஏன் ஈடுபட வில்லை என்ற கேள்வி எழுகின்றது!

இந்த மாதுறு ஓயா பகுதியில் புலிகளின் அடாவடித்தனங்களால் விவசாய நிலங்களை கால்நடைகளை இழந்து போன முஸ்லிம்கள் 1990 களின் பின்னர் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ்

அமைக்கப்பட்ட முஸ்லிம் கிராமமே ரெதிதென்ன எனப்படும் கிராமமாகும். ஒருபுறம் புலிகள் கிழக்கில் முஸ்லிம்களை அவர்களின் வயல் நிலங்களில் இருந்து விரட்டி அடித்து துரத்தியதால் அவர்களுக்கு பிறிதொரு இடத்தில் விவசாயக் குடியிருப்புக்களை அமைக்க இலங்கை அரசு உதவியது. அது பற்றி புலிகள் தங்களின் பதிவுகளில் பின்வருமாறு எழுதி உள்ளார்கள்.இதுவே முஸ்லிம்கள் மீது புலிகள் கொண்டிருந்த எதிர் நிலைப்பாட்டை நன்கு தெளிவுபடுத்துகிறது.

"மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கென கால்நடைப் பண் ணையபிவிருத்தி நிலத்திலிரு ந்து ஒரு பகுதி ஒதுக்கி கொடுக்கப்பட்டது. வளமான தமிழ்க்கிராமத்தை கூறுபோட்டு தமிழர்களை இல்லாதொழிக் கும் திட்டம் மெதுமெதுவாக நிறைவேறத் தொடங்கியது. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமாக மட்டுமல் லாமல் செல்வச் செழிப்பு குன்றாத தமிழ்க்கிராமமாகவும் இது விழங்கியதால் சிங்களவர் ஒருபுறமாகவும், முஸ்லிம்கள் ஒருபுறமாகவும் இக்கிராமத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கினர். பொலநறுவை மாவட்டத்தோடு இக்கிராமத்தின் பெரும் பகு தியை இணைக்கும் முயற்சி யில் சிங்களவர் முயற்சிக்க, முஸ்லிம்கள் வகைதொகையின் குடியேறி முஸ்லிம் கிராமமாக்கும் முயற்சி இன்னுமொரு பக்கமாக நடந்தேறியது.

500 ஏக்கர் நிலத்தை சிங்களவர் அபகரிக்க 650 முஸ்லிம் குடும்பங்கள் இன்னுமொருபக்கத்தால் குடியேறி நிலத்தைப்பிடித்தனர். இன்று முஸ்லிம்களுக்கு அங்கு தனிமையான கிராம சேவகர் பிரிவு வேண்டுமென்று கேட்குமளவிற்கு இக்கிராமம் பறிபோய் விட்டது."

இங்கிலாந்தில் உள்ள புலிகள் புலி சார்பு நிறுவனங்கள், செய்தி இஸ்தாபனங்கள் ஐ. நா சபையின் மனித உரிமை-யுத்தக் குற்ற - விசாரணைகளில் குருக்கள்மடக் குழிகளைத் தோண்டுவதன் மூலம் அரசாங்கம் முஸ்லிம்களை பயன்படுத்தி புலிகளுக்கு எதிராக செயற்படுகிறது என்று தீவிர செய்திப் பிரச்சாரங்களை செய்த வேளையில்,அந்த வணிகர் குருக்கள்மட படுகுழிகளை அடையாளம் காட்ட முன் வந்திருந்தால் இடம் பற்றிய அடையாள சிக்கல்களைத் தவிர்திருக்கலாம்,

மனிதப் புதை குழிகள் இதுவரை தோண்டப்பட்டிருக்கலாம் ; புதைக்கப்பட்ட உண்மைகள் எப்பொழுதோ மனித எச்சங்களுடன் வெளிவந்திருக்கலாம். தனிமனித அரசியல் போட்டா போட்டியினால் குருக்கள்மடத்தில் நடந்த புலிகளின் கொடூரங்கள் தோண்டப்படாமல், புதைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏதோ ஒரு விதத்தில் துணை போயிருக்கிறார்கள். புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் எதனை நினைத்தார்களோ, அதனையே உள்ளூர் அரசியல்வாதிகள் செய்துள்ளார்கள்.

மேலும் குருக்கள்மட விவகாரத்தின் மூலம் ஹிஸ்புல்லா (இவரும் தனது உயிருக்கு பாதுகாப்பு புலிகளிடம் உள்ளது என்று நம்பி ஒரு கால கட்டத்தில் மறைமுகமாக புலிகளுக்கு உதவும் வகையில் செயற்பட்டவர் என்பது இன்னுமொரு விவகாரம்) குருக்கள் மடத்தை தோண்டி அரசியல் செல்வாக்கு பெற்று விடலாம் என்ற காரணத்துக்காக அவருக்கு எதிரான அரசியல் சக்திகள் செயற்படுவதாக ஒரு கருத்தும் காத்தான்குடியில் நிலவியது. ஆனால் ஹிஸ்புல்லாவே முதன் முதலில் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு குருக்கள்மடம் தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்ததாக செய்திகள் வெளிவந்தன. தமிழருடனான அரசியல் உறவுகள் அண்மைக்காலமாக காத்தான்குடியை மையமாகக் கொண்ட முஸ்லிம் அரசியல் இயக்கத்துடன் பலம் பெற்று வருகிறதும், வடக்கு மாகாண சபை அங்கத்துவம் பெற்றுள்ள முஸ்லிம் இயக்கத்தினர் எதிர்கால தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற நியமன உறுப்பினர் பதவி ஒன்றினையும் பெறும் வாய்ப்பு உள்ள நிலையில், குருக்கள்மட விவகாரம் உட்பட புலிகளால் புதைக்கப்பட்ட பல சடலங்களை மட்டுமல்ல, வரலாற்றையும் புதைக்கவே விரும்புவார்கள்.! (இந்தக் கட்டுரைகளை நான் 2014ஆம் ஆண்டில் எழுதிய பொழுது குறிப்பிட்டவாறு பின்னர் நடந்த வட மாகாண சபைத் தேர்தலில் நல்லாட்சிக்கான இயக்க உறுப்பினர் ஒருவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கீழ் -சின்னத்தில்- போட்டியிட அனுமதிக்கப்பட்டு, தேர்தலில் தோல்வியுற்ற பொழுதும், வட மாகாண சபையில் நியமன அங்கத்துவம் அவருக்கு வழங்கப்பட்டது.

# அத்தியாயம் (5)

*நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் முதன்முதலில் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவினரை தொடர்பு கொண்டனர் என்று சொல்லப்படுகிறது. கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் ஆணைக்குழுவுக்கு மகஜர் அனுப்பினார் என்று சொல்லப்படுகிறது. ஆணைக்குழுவில் கடத்தப்பட்டோர் புதைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் இடங்களை அடையாளம் கண்டு தோண்ட வேண்டும் என்றும், அவ்வாறு தோண்டப்பட்ட மனித எச்சங்ககளை அடையாளம் கண்டதன் பின்னர் (மரபணு பரிசோதனை மூலம்), அவ் மனித எச்சங்களை உறவினர்களிடம் மார்க்க கிரிகைகளை நிறைவேற்றி மீளடக்கம் செய்ய வழங்கப்பட வேண்டும், குற்றமிழைத்தோரை நீதியின் முன் நிறுத்த வேண்டும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்பதெல்லாம் நல்லாட்சிக்கான மக்கள் இயக்க கோரிக்கையாக இருந்தது,.*

*அவ்வாறுதான் ஸ்ரீ.ல.சு.கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர், காத்தான்குடியின் நகரசபை உறுப்பினர் ரவூப் ஏ மஜீதும் குருக்கள் மட மனித புதை குழிகளை தோண்டுவதில் முதலில் தனது உறவினரின் சார்பில் ஏப்ரல் மாதம் 2014 இல் போலீஸ் முறைப்பாட்டை செய்தவராகும். முந்திய அத்தியாயத்தில் குறிப்பிட்டவாறு ரெதிதென்ன எனும் இடத்தில் உள்ள விவசாய கால்நடைபன்னையில் குருக்கள் மட புதைகுழி தொடர்பில் இடங்களை அடையாளம் கட்டக் கூடிய உத்தியோகபூர்வமாக தன்னை வெளிப்படுத்தாத காத்தான்குடி வணிகரும் நல்லாட்சிக்கான இயக்க பிரமுகர்களும் சந்தித்து விருந்து உண்டு மகிழ்ந்துள்ளனர். அந்த நிகழவில் இன்னுமொரு பிரபல காத்தான்குடி வணிகரும். அரசியல்வாதியும் கலந்து கொண்டிருந்தார். அவர் வேறு யாருமல்ல நகைக்கடை நடத்தும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும்,*

காத்தான்குடியின் நகரசபை உறுப்பினருமான ரவூப் ஏ மஜீத் என்று எனது காத்தான்குடி தகவல்கள் உறுதி செய்தன.

மொத்தத்தில் முதன் முதலில் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஒரு சமூக செயற்பாட்டு இயக்கம் என்ற வகையில் (அரசியல் இயக்கம் என்ற தோரணையில் அல்லாமல்) பொத்தாம் பொதுவாக காணாமல் போனோர் தொடர்பில் முறைப்பாடு ஒன்றினை செய்த நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தினரும், குருக்கள்மடம் மனித புதைகுழிகள் தொடர்பில் தன்னை தகுந்த சாட்சியத்துடன் இதுவரை எந்தவிதத்திலும் பகிரங்கமாக வெளிப்படுத்தாமல் புதைகுழி இடங்களை அடையாளம் கண்டவர் எனப்படுபவரும், காணாமல் போன குடும்பத்தினருக்காக முதன் முதலில் போலீசில் முறைப்பாட்டை செய்தவரும், இடங்களை அடையாளம் காட்டியவரும் என்று பெருமிதம் கொள்ளும் ரவூப் ஏ மஜீதும் குருக்கள்மடம் தொடர்பில் எப்படி செயற்பட்டு இருக்கிறார்கள் என்ற கேள்விக்கான விடையை இப்பொழுது வெளிப்படையாகவே காணக் கூடியதாக உள்ளது.!

இவர்களில் குறிப்பாக ஸ்ரீ.ல.சு.கட்சிக் கெதிராகவும், குறிப்பாக மஹிந்த அரசுக் கெதிராகவும் வெளிப்படையாக செயற்படும், தமிழர் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் கூட்டும் வைத்துள்ள ஒரு அரசியல் இயக்கமாக செயற்படும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் நிகழ்ச்சி நிரலுடன், ஸ்ரீ.ல.சு.கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ஆக உள்ள ரவூப் ஏ மஜீத் என்னவிதமான உறவினைப் பேணி ரெதிதன்னவில் நடைபெற்ற அவர்களின் உயர்மட்ட (சூரா) இயக்க (கட்சி) விருந்துபசார கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார் என்ற கேள்வி எழுகிறது. இந்த வேளையில் குருக்கள்மடபடுகொலைகளை முன்னின்று நடத்திய புலி லெப்டினன்ட் மணியின் சொந்த ஊரான கொம்மாதுறையை சேர்ந்த, எனக்கு இளமையில் இருந்தே நட்புடன் பழகி வரும் ஒருவரை மணி பற்றிய தகவல்களை வழங்க கோரிக்கை விடுத்தும், என்னை அவர் , இதுவரை தவிர்த்தே வருகிறார். அவரைப் பற்றி சொல்வதானால், அவர் கருணா புலிகளின் நீண்ட போராட்டத்தை குலைத்தவர் என்று கருணாவுக்கு சாப அர்ச்சனை செய்பவர், தமிழர் கூட்டமைப்பு ஆதரவாளர், முஸ்லிம்கள் தமிழர் கூட்டமைப்புடன் சேர்ந்து சிங்கள அரசுக்கு

*பாடம் புகட்ட வேண்டும் என்று "உன்னதமான" கோட்பாட்டு அரசியல் பேசுபவர்.*

*இந்த பின்னணியில் ந.ஆ.ம. இயக்கத்தின் குருக்கள்மட தோண்டுதல் தொடர்பான முன்னெடுப்பு பற்றிய ஒரு விசாரணை அவசியமாகிறது. ஏனெனில் அவர்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவை சந்தித்த பொழுது, ஆணையாளர் UNDP உதவி மூலம் மரபணு பரிசோதனைக்கு உதவி செய்யப்படும் என்று கூறி, ந.ஆ.ம. இயக்கம், தோண்டுவது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை வழங்கி இருந்தார்கள். ஆனால் எந்தவித சட்ட நடவடிக்கைகளையும் ந.ஆ.ம.இயக்கம் இன்றுவரை மேற்கொள்ளவில்லை என்பது ஒருபுறம் இருக்க சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட (ரவூப் ஏ மஜீத், சிப்லி பாரூக்), சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய (அவர்களின் ஆதரவாளரான வணிகர்) ஆகியோரின் சட்ட நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணாமல் சங்கடங்களை ஏற்படுத்த எத்தகைய அரசியல் சூட்சுமத்தை பிரயோகித்தனர் என்ற கேள்வியும் இங்கு எழுகிறது.!. இதுவரையும் அவர்கள் முதலில் முறையிட்டது என்று அறிக்கை இட்டது தவிர எந்த துரும்பைத் தன்னும் அசைக்கவில்லை. இந்த நிலையில் சென்ற 19ம் திகதி களுவாஞ்சிகுடி போலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அப்துல் மஜீத் முஹம்மத் ரவுப் எனப்படும் ரவுப் ஏ மஜீத்தை உரிய இடத்தை தீர்க்கமாக அடையாளம் காட்டுமாறு கூறி, அது தொடர்பில் அழைப்பாணை ஒன்றை அனுப்புமாறு நீதிமன்றத்தை கோரி உள்ளார். ( அழைப்பாணையின் பிரதி இங்கு பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது), ரவுப் ஏ மஜீத்தை அவரால் சரியாக அடையாளம் கட்டப்பட்ட இடம் ஏன் கேள்விக்குள்ளானது? சிபிலி பாரூக் புதிய இடங்களை ஏன் அடையாளம் காட்ட முயன்றார். இந்த அழைப்பாணை சொல்லும் சங்கதி என்ன என்பதையும் இங்கு ஆராய வேண்டி உள்ளது.!*

*மொத்தத்தில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் குருக்கள்மடம் என்ற சொல்லை தவிர்த்தே பொத்தாம் பொதுவாக காணாமல்போனோரை கண்டுபிடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டே அறிக்கைகளை வெளியிட்டனர். அதிலும் அவர்கள் மிகக் கவனமாகவே தமது சார்பு அரசியல் நிகழ்ச்சி நிரலை*

வெளிப்படுத்தினர் என்றே கொள்ள வேண்டி உள்ளது. சமூகம் சார்ந்த விடயங்களில் மிகத் தெளிவாக சொல்லப்படவேண்டிய செய்தியை ஏன் அவர்கள் இருட்டடிப்பு செய்தனர்?. காணாமல்போனோர் என்பதில் முஸ்லிம்,பிரதேசங்களுக்குள் இன முறுகல், கலவர காலங்களில் காணாமல் போன தமிழர்களையும் தேட வேண்டும் என்று வரும் பொழுது, ந.ஆ.ம.இயக்கம் காணாமல் போனோர் என்று பொதுவில் சொல்லி இருப்பதால், அப்படிக் காணாமல் போன தமிழர்கள் தொடர்பில், அவர்களின் உடல்களைத் தேடுவதில் என்ன தகவல்களை (ந.ஆ.ம.இயக்கம் ஒரு சமூக செயற்பாட்டு இயக்கம் என்ற வகையில்) சேகரித்திருக்கிறதுஅல்லது அறிந்து வைத்திருக்கிறது. அப்படிக் காணாமல் போன தமிழர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலராக இருக்கலாம், அது பற்றிய தகவல்களை, தமிழர்கள் வழங்கும் பொழுது, காய்தல் உவத்தல் இன்றி நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் செயற்பட வேண்டும்!. இந்த குருக்கள்மடம் பலருக்கு அரசியல் சதுரங்கம். இதுவே "செத்தவன் வாயில் மண்ணு இருப்பவன் வாயில் அரிசி" என்ற அரசியல் பித்தலாட்டமாகும்.

2009ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் மூலம் ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதாயின் பதிய நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும்.


நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தேர்தல் கட்சியாக பதிவு செய்யப்பட ஏற்படுத்தப்பட்டுள்ள நிபந்தனைகளை திருப்திப்படுத்த, தேர்தல் ஆணையாளரைத் திருப்திப்படுத்தும் அரசியல் நடவடிக்கைகளை முடக்கி விடுவது அவசியமாகிறது. அவ்வாறான செயற்பாடுகளை அரசியல் வீரியம் கொண்டதாக மாற்றுவதற்கு தேர்தல் ஆணையாளரை திருப்திப்படுத்த அரசியல் கூட்டணி அமைப்பதும், மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதும் அங்கத்துவம் வகிப்பதும், நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதும் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதும், என அமைகிறது. எனவேதான் படுபிற்போக்குத்தனமான அரசியல் சிந்தனையும் செயற்பாடும் கொண்ட தமிழர் கூட்டமைப்புடன் இணக்க அரசியல் செய்து தங்களை நிலை நிறுத்திக் கொள்ள நல்லாட்சிக்கான மக்கள்

இயக்கம் முயன்று வருகிறது. இந்த தொடர் கட்டுரைகள் எழுதப்பட்ட காலத்தில் எதிர்வு கூறப்பட்டுபோல நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் ஒரு அரசியல் கடசியாக ஜூலை மாதம் 2017இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தங்களின் தமிழரசு, தமிழர் கூட்டணி பிதாமகர்களின் சுவட்டில் புலிகள் எப்படி தமிழ் மக்களுக்குக்குள் முஸ்லிம்களுக்கு எதிராக பல அரசியல் சூழ்ச்சிப் பணிகளில் ஈடுபட்டார்களோ, அவ்வாறே ஒருபுறம் தமிழ்-முஸ்லிம் ஐக்கிய முகம் காட்டிக் கொண்டு முஸ்லிம் எதிர்ப்பு பிரச்சாரங்களை, கருத்துக் பதிவுகளை அவ்வப்பொழுது பல தமிழ் தேசியக் கூட்டணி உறுப்பினர்கள் கிழக்கிலே முன்னெடுத்து வருகிறார்கள். அந்த வகையில் அண்மைக் காலமாக, அரியேந்திரன், கிழக்கு மாகாண சபையின் தமிழ் தேசியக் கூட்டணி உறுப்பினர்களான ஜனா, மற்றும் துரைரெட்ணம் ஆகியோர் உமிழும் இனவாதக் கருத்துக்களை கேட்டும் கேட்காமல் செயற்பட சூடு சுரணையற்ற ஒரு முஸ்லிம் புத்தி ஜீவிக் கூட்டம் இயக்கம் அமைத்து அரசியல் செய்யப் புறப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு அவர்கள் மீது சுமத்தப்படுகிறது. அதுபற்றிய ஒரு விரிவான பார்வையும் முஸ்லிம் சமூக அரசியல் சிந்தனைத் தளத்தில் அவசியமாகிறது.

புலிகள் தங்களின் பதிவேட்டில் குறிப்பிடும் முகம்மது அலியார் - முகம்மது சலீம், காங்கேயன்ஓடை ஆரையம்பதியைச் சேர்ந்தவர் என்று குறித்துள்ளனர். அவரின் வீரத்தை முஸ்லிம்கள், குறிப்பாக இந்திய அமைதிப்படை காலத்தில் வழங்கிய உதவி ஒத்தாசைகளை எல்லாம் அவர் பற்றிய பதிவில் சுட்டிக்காட்டுகின்றனர். அந்த வகையில் கபூர் எனப்படும் சலீமின் இறந்த திகதி 11/06/1990 என்று புலிகள் குறிப்பிடுகின்றனர் ஆனால் புகைப்படம் எதனையும் அவர்கள் இதுவரை பிரசுரம் செய்யவில்லை. ஆனாலும் புலிகளின் மாவீரகள் பற்றிய புகைப்படச் சேகரிப்புக்களில் லெப்டினன்ட் சலீம் எனும் ஒருவரின் புகைப்படம் காணப்படுகிறது. அவர் மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்த குமாரசிங்கம் ரவிச்சந்திரன் என்பவராகும். அவரின் இயக்கப் பெயர் சலீம், அவரின் புகைப்படத்தையும் புலிகள் பிரசுரம் செய்யவில்லை என்றே அறிகிறேன். ஆனாலும் அவரின் புகைப்படம் ஒன்றை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. அவரின் புகைப்படத்தில் அவருடன் சேர்ந்து காணப்படுபவர்

ஒரு முஸ்லிம் புலி இயக்க உறுப்பினராக இருக்கலாம் என்ற ஊகம் எழுகிறது.ஆனால் அதை உறுதி செய்ய முடியவில்லை.




# அத்தியாயம் (6)

*முஸ்லிம் பெயர்களை தங்களின் இயக்க உறுப்பினர்களுக்கு அடையாளப் பெயராக வழங்கிய புலிகள் பின் வந்த காலங்களில் கொழும்பில் மற்றும் தெற்கின் பல பிரதேசங்களில் செய்யப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களுக்கு, அரசியல் சதிக் கொலைகளுக்கு, அதிகாரிகளுக்கு கையூட்டு வழங்கி,போலி ஆவணங்களை வழங்கி, முஸ்லிம் பெயரில் அடையாள அட்டைகளை பெற்றுப் பயன்படுத்தி உள்ளனர். இந்த முஸ்லிம் முக மூடி அணிந்த புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னர் இடம்பெற்ற விசாரணைகளில் இலஞ்ச வலையில் சில முஸ்லிம் உத்தியோகத்தர்கள் கூட கைதாகினர். ஆகவே சில முஸ்லீம் புலிகள், முஸ்லிம்களின் பெயர்களை இயக்கப் பெயராக மட்டுமல்ல, உண்மைப் பெயர் என்று நம்பும் வகையிலும் பயன்படுத்தி உள்ளனர். அதன் மூலம் இலங்கை அரசினையும் சிங்கள மக்களையும் முஸ்லிம்களுக்கு எதிராக திருப்பும் வகையில் தந்திரோபாயமாக புலிகள் செயற்பட்டுள்ளார். ஆனால் புலிகளின் தந்திரோபாயங்கள் வெற்றி அளிக்கவில்லை. அதற்கான காரணம் இலங்கை அரசின் உளவுத் துறையில் வடக்கு கிழக்கை சேர்ந்த முஸ்லிம்கள் சிலர் பணியாற்றியதால். புலிகளின் மோசடிகள் விரைவிலேயே கண்டுபிடிக்கப்பட்டன. உதாரணமாக முன்னாள் இராணுவ உயர் அதிகாரியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் பின்னரான (25.04.2006) விசாரணைகளில் இருந்து, முஸ்லிம் பெயரில் போலி அடையாள அட்டையை பாவித்த ஒரு புலி உறுப்பினர் சம்பந்தப்பட்டிருந்தார் என்பது தெரிய வந்தது. அவ்வாறே 1ஆம் திகதி டிசம்பர் மாதம் 2006ஆம் ஆண்டு, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலிலும் முஸ்லீம் பெயரில் போலி அடையாள அட்டையைப் பாவித்த புலி உறுப்பினர் ஒருவரும் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதும் விசாரணைகளில் கண்டு பிடிக்கப்பட்டது.*

அவ்வாறாக முஸ்லிம்களின் பெயர்களில் போலி அடையாள அட்டையைப் பெற்று புலிகள் மேற்கொண்ட தக்குதல்களுக்கு உதாரணமாக 16 மே மாதம் 2008ஆம் ஆண்டு, கொழும்பில் உள்ள லோட்டஸ் வீதியில் பயணித்த போலீஸ் வாகனத்தின் மீது புலி உறுப்பினர் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலைக் குறிப்பிடலாம். அத்தாக்குதலில் 8 ஆண் போலீசாரும் 9 பெண் போலீசாரும் கொல்லப்பட்டனர். மேலும் 100 பேர் காயமுற்றனர். இத்தாக்குதலை நடத்திய புலிகளின் தற்கொலைதாரி கிண்ணியாவைப் பிறப்பிடமாகக்கொண்ட இப்ராஹிம் லெப்பை என்று தாக்குதல் நடந்த பின்னர் கிடைத்த அடையாள அட்டையையும் ஆரம்பகால விசாரணைகளையும் கொண்டு அறிவிக்கப்பட்டது. ஆயினும் தொடர்ந்த விசாரணைகளின் மூலம் தாக்குதல் நடத்தியவரின் உண்மைப்பெயர், சுதன் என அழைக்கப்பட்ட வேலாயுதன் சுதர்சன் (பிறந்த திகதி: 30.09.1985) என்று கண்டறியப்பட்டது. தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அவரின் உண்மையான அடையாள அட்டையில் காணப்பட்ட புகைப்படத்தையும், அவர் முஸ்லீம் பெயரில் பாவித்த அடையாள அட்டையில் காணப்பட்ட புகைப்படத்தையும் இங்கு பின்னிணைப்பில் சேர்த்துள்ளேன்.

அந்த வகையில்புலிகளில் இணைந்த முஸ்லீம் இளைஞர்கள் பற்றிய எனது தேடலில்குருக்கள் மடத்துப் பையன் கட்டுரை தொடராக 2014ஆம் ஆண்டு இறுதி பகுதியில்எழுதப்படும் வரைஎனது தேடுதலுக்குள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராடிமரணித்த முஸ்லிம்களின் பெயர் விபரங்கள் புலிகளின் அல்லது அவர்களின் ஆதரவு வலைத் தளங்களில் முழுமையாக வெளியிடப்படவில்லை. ஆங்காங்கே சிலரின் பெயர்களை மாத்திரம் தேவைக்கேற்றவாறு வெளிப்படுத்தினர். ஆனால் எனது கட்டுரைகளின் பின்னர் 12ஆம் திகதி மாசி மாதம் 2016 ஆம் ஆண்டு " ஈழமலர்" எனும் வலைத் தளத்தில் 36 முஸ்லீம் இளைஞர்களின் பெயர்களை இயக்கப் போராளிகளாக உயிர் நீத்த "மாவீரர்களான எமது முஸ்லீம் இளைஞர்கள் சிலரது பெயர்கள்" என்று குறிப்பிட்டுள்ளனர். அதிலும் ஒருவரின் பெயர் விபரம் இருதடவை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால்அவர்களின் புகைப்படங்கள் எதுவும்பிரசுரிக்கப்படவில்லை. ஆனாலும் புலிகளின் இரகசிய புகைப்படக் கோவை ஒன்று எனது வசம் உள்ளதால், அதில் உள்ள

வேலாயுதன் சுதன் (இப்ராஹிம் லெப்பை)


புகைப்படங்கள் சில முஸ்லீம் பெயரைக் கொண்டிருப்பதால் அவற்றினையும் இங்கு பின்னிணைப்பாக இணைத்துள்ளேன். அவர்களின் பெயர்களைக் கொண்டு, அப்பெயர்கள் அவர்களின் உண்மைப் பெயர்களா அல்லது இயக்கப் பெயர்களா என்பதை உறுதி செய்ய முடியவில்லை. ஆனாலும் இந்நூல் கைவசம் கிடைக்கப் பெற்றவர்கள் நிச்சயமாக அறிந்து கொள்ள மிகுந்த வாய்ப்புண்டு என்று நம்புகிறேன்.

புலிகளில் சேர்ந்திருந்த முஸ்லீம் இளைஞர்களில் பெரும்பாலானோர் தமது சொந்த முஸ்லீம் சமூகத்திற்கெதிராகவே செயற்பட்டார்கள், முஸ்லிம்களை துன்புறுத்திய வகையில் அவர்களுக்கும் இவர்களுக்குமிடையில் வேறுபாடு இருக்கவில்லை. அந்த வகையில் அநேக உதாரணங்கள் உண்டு. என்றாலும் ஓரிரு சம்பவங்களை இங்கு சுட்டிக் காட்ட வேண்டி உள்ளது. குறிப்பாக காத்தான்குடி புலி உறுப்பினரான நசீர் என்பவர், தமது சொந்த ஊர் மக்கள் மீது மேற்கொண்ட அடாவடித்தனங்களை பொறுக்க முடியாத நிலையிலேயே அவ்வூர் இளைஞர்கள் தங்களை ஜிஹாத் இயக்கத்தினர் என்று குறிப்பிட்டு சுட்டுக் கொன்றனர். அது போல கந்தளாய் பகுதியைச் சேர்ந்த புலி உறுப்பினரான கப்டன் (தினேஷ்) முகமது அலிபா முகமது ஹசன் என்பவர், கந்தளாயைச் சேர்ந்த முஹமது ஷரீப் முஹமது சுல்தான்என்ற ஒரு முஸ்லீம் சமூக சேவகரை

*பகிரங்கமாகவே வீதியில் சுட்டுக் கொன்றார். பின்னாளில் கப்டன் (தினேஷ்) முகமது அலிபா முகமது ஹசன் முஸ்லீம் ஊர் காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக புலிகள் பதிவு செய்துள்ளார்கள். ஆக மொத்தத்தில் முஸ்லீம் சமூகத்தில் இருந்து புலிகளில் இணைந்து முஸ்லிம்களுக்கு துன்பம் இளைத்தவர்கள் சிலரை முஸ்லீம் இளைஞர்களே சுட்டுக் கொன்ற சம்பவங்களும் நடந்தேறியுள்ளன.*

*அது போலவே புலிகள் எழுதிய "மாவீரர்களின்" பதிவுகளில் தங்களின் இயக்கத்தில் இணைந்து போராடி மரணித்த சில முஸ்லீம் இளைஞர்களை "மாவீரர்களாக" போற்றி பதிவு செய்துள்ளதுடன், பொதுவாகவே முஸ்லீம் மக்கள் தொடர்பாக நல்லெண்ண அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் வகையில் அப்பதிவுகள் எழுதப்பட்டுள்ளன. அதேவேளைஅதற்கு எதிர்மாறாககிழக்கில் தமிழ் மக்களின் வரலாறு தொடர்பான பதிவுகளில், புலிகள் முஸ்லிம் மக்களை பரம வைரிகளாகக் காட்டும் வகையில் வரலாற்றுத் திரிபுகளை மிகவும் நாசூக்காகவும் எழுதி, இரண்டு வகையான பதிவுகளை சம காலத்தில் பதிவு செய்துள்ளனர். முன்னைய அத்தியாயங்களில் எடுத்துக் காட்டிய புலிகளின் சில முஸ்லீம் விரோதவரலாற்றுத்திரிபுகளுக்கும், முஸ்லிம் "மாவீரர்கள்" பற்றி எழுதிய பதிவுகளில் சிலாகித்து சொல்லப்படும் பதிவுகளுக்கும் உள்ள வேறுபாட்டினை புரிந்துகொள்வதற்காக 1987இல் மரணமடைந்த அக்கரைபற்றைச் சேர்ந்த கப்டன் பாறுக் அகமது லெவ்வை முஹம்மது ஹனிபா, மற்றும் 1990 ஜூனில் மரணமடைந்த காங்கேயன்ஓடை ஆரையம்பதி (மட்டக்களப்பு) சேர்ந்த கபூர் முகம்மது அலியார் - முகம்மது சலீம் ஆகியோரைப்பற்றிய புலிகளின்பதிவுகளை இந்நூலில் பின்னிணைப்பாக இணைத்துள்ளேன்.*

*"வட கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு" 1999ஆண்டு சுவீடனில் நடைபெற்ற சமாதானத்துக்கான மாநாட்டில் "முஸ்லீம் தேசத்தின் ஓர் அறிக்கை என்ற பெயரில் சமர்ப்பித்த அறிக்கையில்" காத்தான்குடி பள்ளிவாசல்களில் 122 அப்பாவி முஸ்லிம்கள் தொழுது கொண்டிருக்கும் பொழுது சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு புனித ஹஜ்ஜுக்கு சென்று வந்த ஹாஜிகள் உட்பட 150ற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் மட்டக்களப்பு குருக்கள்*




மடத்தில் வைத்து கடத்தப்பட்டு பின் கொல்லப்பட்டனர்.'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "வட கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு'' என்பது யார், அவர்களின் புளொட் இயக்கத்துடனான தொடர்பு எத்தகையது, முஸ்லீம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரின் முஸ்லீம் தேச அரசியல் பின்னணி என்ன என்பதை இந்நூலிலின் மூல நோக்கம் கருதி தவிர்த்துக் கொண்டுள்ளேன்.

அந்த வகையில் காத்தான்குடியில் புலி உறுப்பினரான நசீர் உட்பட இன்னும் நான்கு தமிழர்களை (புலிகளின் அறிக்கைப்படி) காத்தான்குடி ஊர் காவல் படை குழுவினரால் கொல்லப்பட்டதை அடுத்து புலிகள் ஒரு பத்திரிக்கை அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கையில்'' இந்த ஏற்றுக்கொள்ள முடியாத, வருந்தத்தக்க நடத்தை அப்பிரதேச முஸ்லீம் மக்களின் கோபத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது. ஊர்காவல் படைக் குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வற்புறுத்தினாலும் மேலும் பதற்றம் அதிகரிப்பதை குறைப்பதற்காக எல்.ரீ ரீ.யீ பெரும் கட்டுப்பாட்டை பேணியது. முஸ்லீம் மக்கள் புலிகளின் நிலைப்பாட்டை நன்கு புரிந்துள்ளார்கள், எங்களுக்கு ஆதரவளித்துள்ளனர். மிகப் பெரும் எண்ணிக்கையில் முஸ்லீம் இளைஞர்கள் எங்களின் விடுதலை இயக்கத்தில் இணைந்துள்ளார். அவர்களின் வற்புறுத்தலினாலும்

நேரடி பங்கேற்றலினாலும் நாங்கள் ஆயுதம் தரித்த முஸ்லீம் ஊர் காவற்படை குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். அதன் விளைவாய் காத்தான்குடியில் 30ஆம் திகதி டிசம்பர் 1988இல் 30 நபர்களையு , ஓட்டமாவடியில் 9 நபர்களையும் கொன்றோம்,.

தமிழ் பேசும் முஸ்லீம் மக்களிடம் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வதாலும், மக்களுக்கு கிடையில் பதற்றத்தையும் பிரிவினையையும் உருவாக்கும் துரோகத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதனாலும்புளொட் (PLOTE); ஈ.பீ.ஆர்.எல்.எப், (EPRLF); டெலோ (TELO) ஆகிய குழுவினரை எல்.ரீ.ரீ.யீ தடை செய்துள்ளது.''

''என்று குறிப்பிட்டிருந்தனர். இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கு வாழ் மக்களை கைவிட்ட நிலையில், இந்திய சமாதானப்படை, வடக்கு கிழக்கை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலையில், ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்கள் முஸ்லிம்கள் மீது தமது அடாவடித்தனங்களை கட்டவிழ்த்துவிட்ட நிலையில் முஸ்லிம்கள் புலிகளுக்கு உதவினர். அந்த கால கட்டங்களில் முஸ்லீம் இளைஞர்கள் பலர் புலிகள் இயக்கத்திலும் இணைந்தனர். ஆனாலும் புலிகளின் நிகழ்ச்சி நிரல் வேறொன்றாக இருந்தது. புலிகள் முஸ்லிம்கள் மீது தமிழ் மக்கள் நீண்ட பகைமை கொண்டிருந்தார்கள் என்ற ''வரலாற்றை'' சமகாலத்தில் எழுதி வந்துள்ளனர். முஸ்லீம் மக்கள் மீதான வெறுப்புணர்வை தமிழ் மக்கள் மனதில் வேரூன்றச் செய்வதினூடாக தமிழ்-முஸ்லிம் மக்களை பிரித்து கையாளுவதில் ஒரு தந்திரோபாய அணுகுமுறையை கையாண்டு வந்துள்ளனர்.

புலிகளின் இரட்டை நியமத்தை கோடிட்டுக் காட்டவே புலிகளின் இந்த அறிக்கையினை இங்கு பதிவிட வேண்டி உள்ளது.

இன்னொருபுறத்தில், புலிகளில் சேர்ந்திருந்த முஸ்லீம் இளைஞர்களில் பெரும்பாலானோர் தமது சொந்த முஸ்லீம் சமூகத்திற்கெதிராகவே செயற்பட்டார்கள், முஸ்லிம்களை துன்புறுத்திய வகையில் அவர்களுக்கும் தமிழ்ப் புலிகளுக்குமிடையில் வேறுபாடு இருக்கவில்லை. அந்த வகையில் அநேக உதாரணங்கள் உண்டு. என்றாலும் ஓரிரு

சம்பவங்களை இங்கு சுட்டிக் காட்ட வேண்டி உள்ளது. குறிப்பாக காத்தான்குடி புலி உறுப்பினரான நசீர் என்பவர், தமது சொந்த ஊர் மக்கள் மீது மேற்கொண்ட அடாவடித்தனங்களை பொறுக்க முடியாத நிலையிலேயே அவ்வூர் ஊர் காவல் படையினராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அப்பொழுது பரவலாக சொல்லபப்ட்டது. புலிகளும் அவ்வாறே சொன்னதுடன் பின்னர், அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக ஊர்காவல் படையினரை கொன்றதாக புலிகள் அறிக்கை இட்டனர்.

## முடிவுரை

குருக்கள் மடத்தில் கொல்லப்பட்ட எண்ணிக்கை விடயத்தில் உள்ள சந்தேகத்தையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டி உள்ளது. காது வழியாகவும், எழுந்தமானதாகவும் பல செய்திகள் புலிகளின் தொடர்ச்சியான கடத்தல், ஆட்கொலை காரணமாகவே வெளி வந்தன. நான் ஏற்கனவே சொல்லியுள்ளதுபோல முஸ்லிம்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தகவல்களை திரட்டுவதில், அவற்றினை பகுப்பாய்வு செய்வதில் போதிய பயிற்சி பெறாத காரணத்தினாலும், முஸ்லிம்களுக்குள் நிறுவன மயப்படுத்தப்பட்ட மனித உரிமை நிறுவனங்கள் செயற்படாத காரணத்தினாலும் கடத்தப்பட்டோர் எண்ணிக்கை தொடர்பாகவும், சரியான இடம் தொடர்பாகவும் குளறுபடிகள் காணப்பட்டன. பின்னர் அவை அவ்வப்பொழுது ஒழுங்குபடுத்தப்பட்ட போதும். சில தகவல்களை சரியான முறையில் பதிவு செய்வதில் பல கேள்விகளும் எழும்புகின்றன. உதாரணமாக குருக்கள்மடத்தில் கொல்லப்பட்டவர்களில் எத்தனை ஹஜ்ஜாஜிகள் (ஹஜ்ஜுக்கு சென்று திரும்பிய பயணிகள்) இருந்தனர் என்பதை உறுதி செய்ய முடியவில்லை. அதுபோலவே குருக்கள்மடம் பற்றிய பிந்திய தகவல்கள், ஓந்தாச்சிமடத்தில் ஹாஜிகள் கொல்லப்பட்டார்கள் என்பது குருக்கள்மடத்தில் கொல்லப்பட்டதையே குறிக்கின்றதுஎன்ற முடிவுக்கு வர வேண்டி உள்ளது. கொல்லப்பட்டோரில் ஹாஜிகளும் அடங்குவார்கள் என்ற முடிவுக்கு வந்தாலும். அந்த ஹாஜிகள் ஜுலை மாதம் நான்காம் திகதி (4/7/1990) ஹஜ்ஜை முடித்து விட்டு பன்னிரெண்டாம் திகதி காத்தான்குடிக்கு குருக்கள்மடம் ஊடாக வந்தவர்களாக இருக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக எனது காத்தான்குடி தொடர்புகள் யாவும் குருக்கள்மடத்தில் கொல்லப்பட்டோரில் அந்த வருடம் ஹஜ் சென்று திரும்பியவர்கள் என்பதையோ, ஓந்தாச்சிமடத்தில் ஹஜ்ஜாஜிகள் வேறு ஒரு சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பதையோ உறுதி செய்ய முடியவில்லை. அந்த வகையில் பொதுவாகவே அக்காலகட்டத்தில் இடம்பெற்ற சகல ஆட் கடத்தல், ஆட்கொலை சம்பவங்கள் யாவும், அச்சம்பவங்கள் நடைபெற்ற இடங்கள் எண்ணிக்கை, திகதிகள் என்பன குறித்தும் மீண்டும் ஒரு முறையான விசாரணை அவசியம் என நான் கருதுகிறேன். அதேவேளை அவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்த இடங்கள் குறித்து தகவல்களை அறிந்த தமிழர், அது பற்றி சாட்சியம் வழங்க முன்வருவார்களா என்ற மிகப் பெரும் ஐயமும் இங்கு உண்டு என்பதையும் மறுக்க முடியாது. புலிகள் தொடர்பாக குருக்கள்மடத்தில் சாட்சி சொல்ல முன்வந்த ஓரிரு தமிழர்களாயினும் அவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். அதேவேளை, அக்காலகட்டங்களில் தமிழ் பிரதேசங்களில் புலிகளின் முஸ்லீம் மக்கள் மீதான இடம்பெற்ற கடத்தல்கள் கொலைகள் காரணமாக, கருக்கொண்டிருந்த இன விரோத சூழலில், முஸ்லீம் பிரதேசங்களுக்கூடாக பயணிக்க நேரிட்டு காணாமல் போன தமிழர்களை பற்றி முஸ்லிம்கள் யாரும் சாட்சியம் சொல்ல முன் வருவார்களா என்பதும் ஒரு மிக முக்கிய கேள்வியாகும்.

குருக்கள் மடத்தை அடுத்துக் காணப்பட்ட கிராமங்களான கிரான்குளம், ஒந்தாச்சிமடம், அம்பிளாந்துறை, களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களை யாழ் ஆசிரிய மனித உரிமை சங்கம் பதிவு செய்துள்ளது. யாழ் ஆசிரிய மனித உரிமை சங்கம் சுமார் 60 - 80 வரையானோர் குருக்கள்மடத்தில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என்று அறிக்கையிட்டுள்ளது. அதேவேளை பல்வேறுபட்ட ஊடகங்களும் செய்திகளும் அறிக்கைகளும் காணாமல் போனோர் 150க்கும் மேற்பட்டோர் என்று குறிப்பிடுகின்றன. ஆனாலும் குருக்கள் மடத்தில் காணாமல் போனோர் பற்றி காணாமல் போன நபர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகளின்படி கடத்தப்பட்டு கொல்லப்பட்டோரின் தொகை 69 நபர்களாகும். அதேவேளை பல கடத்தல்கள் அதே மாதத்திலும் அதற்கு முந்திய பிந்திய மாதங்களிலும் இடம்

பெற்றுள்ளன என்ற போதும், 100 பேர் வரை காணாமல் போன நபர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் செய்ததாக செய்திகள் வலியுறுத்திய பொழுதும். குருக்கள்மட மனிதப் புதைகுழிகள் விவகாரத்தில் ஆர்வத்துடன் செயற்பட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் மூலம் கிடைத்த பெயர்ப்பட்டியலில் 69 பெயர்களே உள்ளன. அதே காலகட்டத்தில் புலிகளால் கடத்தப்பட்டு காணாமல் போனோரின் தொகையயும் செய்திகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது காணமல் போனோரின் குடும்பத்தினர் யாவரும் முறைப்பாடுகள் செய்யத் தவறி இருக்க வேண்டும். எவ்வாறெனினும் மனித உரிமை மீறல் தொடர்பாக, கிடைக்கும் தகவல்களை நன்கு தீர விசாரித்து அதற்கான ஆதாரங்களுடன் உறுதி செய்கின்ற பொழுது மாத்திரமே அவற்றினை பொது வெளிக்கு சமர்ப்பிப்பது முறையாகும். அந்த வகையில் 69 பேரின் புதைகுழிகள் பற்றியே இங்கு குறிப்பிடுவது அவசியமாகும் எனக் கருதுகிறேன்.

குருக்கள்மடத்தில் புலிகளால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட முஸ்லீம் பயணிகளின் உடல்களை தோண்டி எடுத்து அவர்களுக்கு சமய கிரிகைகளுடனான ஒரு கௌரவ அடக்கத்தை செய்ய வேண்டும் என்று இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஏங்கிக் கொண்டிருக்கும், கொல்லப்பட்ட பயணிகளின் குடும்பத்தினரின் ஏக்கம் தீர்க்கப்படவில்லை. ஆனாலும் எதிர்காலத்தில் குருக்கள்மட படுகுழிகள் தோண்டப்படும் சாத்தியங்களும் இப்பொழுது தென்படவில்லை.

ஆயினும், அந்த துயரம் மிகுந்த இரவில் மட்டக்களப்பில் இருந்த பயணிகள் வாகனத்தில் கொழும்பு நோக்கி வந்த குழந்தை பயணம் சென்ற வாகனமும் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற செய்தி கேட்டு மிகுந்த மனக் கிலேசமும் துயரமும் கொண்டிருந்த அக்குழந்தையின் பெற்றோர், மறுநாள் காலையில் தங்களின் குழந்தையை கண்டனர் என்று மேலுள்ள அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் குழந்தையின் தகப்பனே இந்நூலின் ஆசிரியராக, ஒரு துயர சம்பவத்தின் நினைவுகளுடன், குருக்கள் மடத்துப் பையனை உங்கள் முன் கொண்டு வந்துள்ளேன். எனது பாடசாலைக்கால நண்பர்களில் ஒருவரான குருக்கள்மடத்தை சேர்ந்த முருகுப்பிள்ளையின் நட்பையும், பின்னரான காலத்தில்,

*அந்தப் பிரதேசத்தினூடாக பயணிக்க நேரிட்ட, குருக்கள்மடப் படுகொலைகளிலிருந்து உயிர் தப்பிய எனது மகனையும் "குருக்கள் மடத்துப் பையன்" என்ற தலைப்பினை குறியீடாக தேர்ந்ததன் மூலம் தமிழ் ஆயுத இயக்கங்கள் வருவதற்கு முன்பாக, (1985க்கு முன்னர் ) தமிழ்-முஸ்லீம் மக்களுக்கிடையிலே நிலவிய அந்நியோன்யத்தையும், அந்த விரிசல் நாளடைவில் அகன்று புலிகளின் அக்கிரமங்கள் மூலம், எப்படி சமூக நல்லுறவு சீர் குலைந்தது என்பதையும், புலிகளின் முஸ்லிம் விரோத வரலாற்றுத் திரிபுகளையும், மறைமுக நிகழ்ச்சி நிரல்களையும், அதனால் ஏற்பட்ட இரு தலைமுறை இடைவெளியையும் இந்நூல் நிச்சயம் பதிவு செய்யும் என்று நம்புகிறேன்.*

*புலிகளின் காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள் (3/08/1990), ஏறாவூர் மிச் நகர், சதாம் ஹுசைன் கிராமம் உள்ளடங்கிய படுகொலைகள் (12/08/1990) காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் முஸ்லீம் இன முறுகல் காரணமாக வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் பலரை புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கை இராணுவம் விசாரனைக்கென பிடித்துச் சென்றனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை யாருக்கும் தெரியாது. ஆனால் அவர்களை இலங்கை இராணுவம் கொன்று புதைத்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. அது தொடர்பில் புலிகள் எழுதிய குறிப்புக்களில் முஸ்லீம் விரோதம் விரவிக் கிடந்தாலும், வந்தாறுமூலப் படுகொலைகள் பற்றிக் குறிப்பிடும்பொழுது "என்றோ ஒருநாள் மட்டு நகர் மண்ணில் மனிதப்புதைகுழிகள் தோண்டப்படும். அப்போது மாபெரும் உண்மைகள் வெளிவரும் ஆனால் இழந்து போன உயிர்களை கொண்டு வரமுடியுமா?...... போன உயிர்கள் போய்விட்டாலும் சிங்கள அரசு தமிழர்களுக்கு இளைத்த கொடுமைகளின் பக்கம் வெளி வருமென்பது உண்மை." என்று குறிப்பிட்டுள்ளார்கள். அந்த வகையில் எப்படி புலிகளின் எதிப்பார்ப்பு இருந்ததோ, அப்படியே குருக்கள்மடப் படுகொலைகள் குறித்து முஸ்லிம்களின் எதிர்பார்ப்பும் இருந்தது. புலிகள் முஸ்லீம்களுக்கு "இளைத்த கொடுமைகளின் பக்கம்" வெளிவராமல் குருக்கள் மடக் புதைகுழியை உள்ளூர் முஸ்லீம் அரசியல்வாதிகள் மேலும் மண்மூடி புதைத்துள்ளார்கள் என்பது துரதிஷ்டமானதே! வந்தாறுமூலைப் படுகொலைகள் தொடரபாக*

நான் எழுதிய கட்டுரை ஒன்று இங்கு பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

புலிகளின் குரலாய், புலிகளுக்கு தகவல் வழங்கிகளாய் தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலர் செயற்பட்டுள்ளார், மேலும் அவர்களில் சிலர் புலியின் வரலாற்றுத் திரிபினை அல்லது மெருகூட்டலினை ஒத்ததான வரலாற்று வியாக்கியானங்களை முஸ்லிம்களுக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்து வந்துள்ளார்கள், இன்றும் செய்து வருகிறார்கள். அந்த வகையில் புலிகள் கிழக்கு மாகாண வந்தாறுமூலை சம்பவங்களை சுமார் பத்தாண்டுகளுக்கு பின்னர் (2001) தொகுத்த பொழுது வந்தாறுமூலை பல்கலைக்கழக சிரேஷ்ட புவியியல் விரிவுரையாளர், புலிகளுக்கு வழங்கிய தகவல்களில் ஓட்டமாவடி முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டதாக, தான் கேள்வியுற்ற சங்கதிகளையும் அவர் "சரித்திரமாக்க" புலிகளுக்கு உதவியுள்ளார் என்பதை கண்டு கொள்ள முடிந்தது. அவருடனான சந்திப்பு பற்றி "அன்றைய நாளில் மக்களைப் பாதுகாக்க முயன்று தோற்றுப் போன விரிவுரையாளர் வர்ண குணசிங்கம் (புவியியற்துறை) அவர்களைச் சந்தித்தேன். பதினொரு ஆண்டுகள் மறைந்து போனாலும் மனதில் ஆறாதவடுவாய் பதிந்துவிட்ட அந்தக் கொடிய நினைவுகளை அவர் அப்படியே எடுத்துக்கூறினார்." என்று புலிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதுபோலவே வீரமுனை எனப்படும் தமிழ் கிராமத்தில் 1954ஆம் ஆண்டு புலிகளின் குரலாய், புலிகளுக்கு தகவல் வழங்கிகளாய் தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலர் செயற்பட்டுள்ளார், மேலும் அவர்களில் சிலர் புலியின் வரலாற்றுத் திரிப்பினை அல்லது மெருகூட்டலினை ஒத்ததான வரலாற்று வியாக்கியானங்களை முஸ்லிம்களுக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்து வந்துள்ளார்கள். இன்றும் செய்து வருகிறார்கள்.

ஏற்கனவே புலிகளின் குறிப்புக்களில் இருந்து சுட்டிக் காட்டியபோல வீரமுனைக் கிராமம் பற்றிய இன்னுமொரு பார்வையையும் இங்கு எடுத்துக் காட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். வீரமுனை எனப்படும் தமிழ் கிராமத்தில் 1954ஆம் ஆண்டு தொடக்கம் மிக நீண்ட காலமாக தமிழ் முஸ்லீம்

பகைமை நிலவி வருவதாக புலிகள் குறிப்பிடுவதை, முன்னாள் "த ஐலண்ட்" (The Island) எனும் ஆங்கிலப் பத்திரிகையின் அம்பாறை நிருபராக செயற்பட்ட கே.என். தர்மலிங்கம் என்பவர் தனது கட்டுரைகளிலும் குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் அவர் 1954ஆம் ஆண்டில் வீரமுனை-சம்மாந்துறை தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில் ஏற்பட்ட இன முறுகளுக்கான அரசியல் காரணத்தையும், அதில் முஸ்லிம்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதையும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கண்ணீர் சிந்திய, உதவிய முஸ்லீம் மக்கள் பற்றியும் (There were of course Muslims who shed tears at the misery of the Tamils and provided relief lavishly). குறிப்பிட்டுள்ளார் .அத்துடன் சம்மாந்துறை-வீரமுனைக் கிராமங்களில் வாழ்ந்த முஸ்லிம் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அவர்களின் உறவுகளில் நெருக்கடி இருப்பினும், 1990ஆம் ஆண்டு வன்முறைகள் கிளெர்ந்தெழும் வரை அடுத்தடுத்து ஒன்றாக வாழ்ந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இதுவே புலிகளின் "வரலாற்றை" வேறுபடுத்திப் பார்க்க உதவும். (Muslims and Tamils at Sammanthurai and Veeramunai continued to exist side by side despite strains in their relationship until 1990, when a spate of violent incidents was to flare up.)

மேலும் அவரின் (கே. என்.தர்மலிங்கம்) எழுத்துக்களில் பொதுவாக முஸ்லீம் விரோத போக்கு காணப்பட்டாலும், அவரின் எழுத்துக்கள் புலிகளின் மேல்நாட்டு பிரச்சாரங்களுக்கு உதவினாலும், இது போன்ற சில தகவல்கள் எமது ஆய்வுப் பார்வைக்கு துணை புரிகின்றன என்பதில் ஐயமில்லை.

ஆனால் அவ்வறிக்கையை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது. அவ்வறிக்கையினை வெளியிட்ட "வட கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு" 150 பெயர்களின் விபரங்களை வெளியிடவில்லை. ஆனால் அவர்களில் ஹஜ்ஜாஜிகள் (மக்காவிற்கு புனித யாத்திரை சென்று ஊர் திரும்பியவர்கள்) உட்பட கடத்தப்பட்டு கொல்லப்பட்டவர்களில் இருந்தனர் என்று சுட்டிக் காட்டுகிறது. அதேவேளை இலங்கையின் இனப் பிரச்சினை மற்றும் சிறுபான்மை சமூகப் பிரச்சினைகள் தொடர்பான பல ஆய்வுகளில் ஹஜ் பிரயாணிகள் குருக்கள்மடத்தில் கொல்லப்பட்டனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குருக்கள் மடத்தில்

கொல்லப்பட்டவர்களில் ஹஜ்ஜாஜிககளும் இருந்துள்ளார்கள் என்று அக்கால கட்டத்திலும் பரவலாக பேசப்பட்டது. ஆனால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை விடயத்தில், அவர்களில் எத்தனை பேர் ஹஜ்ஜாஜிகள் என்பனவும் இன்னமும் முறையான ஆய்வுகளுக்கு உரியன . முன்னர் சொன்னதுபோல கடத்தல்களும் கொலைகளும் 1990 ஜூன், ஜூலை, ஆகஸ்து மாதங்களில் அதிகளவில் இடம்பெற்றன என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

# பின்னிணைப்பு (1)

*தமிழீழ விடுதைப் புலிகள் இயக்க போராளிகளாக உயிர் நீத்து மாவீரர்களான எமது முஸ்லிம் இளைஞர்கள் சிலரது பெயர்கள்.*

**எமது மாவீரர்கள் இவர்கள்**

1 வீரவேங்கைசாபீர், சரிபுதீன் முகமட் சாபீர் தியாவெட்டுவான், மட்டக்களப்பு. நிலை: வீரவேங்கை இயக்கப் பெயர்: சாபீர், இயற்பெயர்: சரிபுதீன் முகமட் சாபீர் பால்: ஆண் ஊர்:தியாவெட்டுவான், மட்டக்களப்பு. மாவட்டம்: மட்டக்களப்பு வீரச்சாவு: 13.05.1988, நிகழ்வு: நாசிவன்தீவில் ரெலோ கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் வீரச்சாவு

2 வீரவேங்கை ரகீம்; நிலை: வீரவேங்கை இயக்கப் பெயர்: ரகீம் வீரச்சாவு: 08.05.1986

3 வீரவேங்கை உஸ்மான் கிழங்கு அப்துல்காதர் சாதிக், யாழ்ப்பாணம். நிலை: வீரவேங்கை இயக்கப் பெயர்: உஸ்மான்கிழங்கு, இயற்பெயர்: அப்துல்காதர் சாதிக் பால்: ஆண் ஊர்: யாழ்ப்பாணம், வீரப்பிறப்பு:10.05.1966 வீரச்சாவு: 25.08.1986, நிகழ்வு: யாழ்ப்பாணம் கோட்டையில் சிறிலங்கா படையினருடன் சமரில் வீரச்சாவு

4 வீரவேங்கை லத்தீப் முகமது அலியார் முகமது லத்தீப் ஒல்லிக்குளம், காத்தான்குடி, மட்டக்களப்பு. நிலை: வீரவேங்கை இயக்கப் பெயர்: லத்தீப், இயற்பெயர்: முகமது அலியார் முகமது லத்தீப் பால்: ஆண், ஊர்: ஒல்லிக்குளம், காத்தான்குடி, மட்டக்களப்பு. மாவட்டம்:மட்டக்களப்பு வீரப்பிறப்பு: 16.11.1962 வீரச்சாவு: 24.12.1986 நிகழ்வு:மட்டக்களப்பு தாழங்குடாவில் ஈ பி ஆர்எல் எப் கும்பல் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு

5 கப்டன்பாறூக் அகமது லெப்பை முகமது கனீபா, அக்கரைப்பற்று, அம்பாறை. வீரச்சாவு: 07.01.1987

6 கப்டன் குட்டி (தினேஸ்) முகமது அலிபா முகமது ஹசன், பேராறு, கந்தளாய், திருகோணமலை. நிலை: கப்டன் இயக்கப் பெயர்: குட்டி (தினேஸ்) இயற்பெயர்: முகமது அலிபா முகமது ஹசன், பால்: ஆண் ஊர்: பேராறு, கந்தளாய், திருகோணமலை. மாவட்டம்: திருகோணமலை, வீரச்சாவு: 28.04.1987 நிகழ்வு: திருகோணமலை கந்தளாயில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு

7 வீரவேங்கை ரகுமான் நிலை: வீரவேங்கை இயக்கப் பெயர்: ரகுமான், வீரச்சாவு: 08.05.1986

8 கப்டன் குட்டி (தினேஸ்) முகமது அலிபா முகமது ஹசன் பேராறு,கந்தளாய், திருகோணமலை. நிலை:கப்டன் இயக்கப் பெயர்:குட்டி (தினேஸ்) இயற்பெயர்: முகமது அலிபா முகமது ஹசன், பால்: ஆண் ஊர்: பேராறு, கந்தளாய், திருகோணமலை. வீரச்சாவு: 28.04.1987, நிகழ்வு: திருகோணமலை கந்தளாயில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு

9 வீரவேங்கை சலீம் வீரச்சாவு: 03.07.1987, நிகழ்வு: அம்பாறை மாவட்டம் தாண்டியடி பகுதியில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு

10 வீரவேங்கை நசீர்; இயக்கப் பெயர்: நசீர் இயற்பெயர்: முகமட் நசீர், பால்:ஆண் ஊர்:காங்கேயன்ஓடை, மட்டக்களப்பு. வீரப்பிறப்பு: 15.03.1963 வீரச்சாவு: 30.12.1987 நிகழ்வு: மட்டக்களப்பு காத்தான்குடியில் ஜிகாத் கும்பல் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவு

11 வீரவேங்கை நகுலன்; இயக்கப் பெயர்: நகுலன் இயற்பெயர்: யுனைதீன், பால்: ஆண் ஊர்: அட்டாளைச்சேனை, காரைதீவு, அம்பாறை. வீரச்சாவு: 26.06.1988 நிகழ்வு: அம்பாறை அக்கரைப்பற்றில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவு

12 வீரவேங்கை நசீர், இயக்கப் பெயர்: நசீர் இயற்பெயர்: சம்சுதீன் நசீர், ஊர்: ஒலுவில், அம்பாறை. வீரப்பிறப்பு 19.02.1960 வீரச்சாவு: 17.02.1989 நிகழ்வு: மட்டக்களப்பு நிந்தவூரில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கும்பலினால் பிடிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கோரத்தாக்குதலில் வீரச்சாவு

13 வீரவேங்கை ஜெமில் ஜெயாத் முகமது உசைதீன், இயற்பெயர்: ஜெயாத் முகமது உசைதீன், ஊர்: ஓட்டமாவடி, மட்டக்களப்பு. வீரப்பிறப்பு: 28.03.1968 வீரச்சாவு: 05.08.1989, நிகழ்வு: மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவு

14 வீரவேங்கை சியாத், நிலை: வீரவேங்கை, இயக்கப் பெயர்: சியாத் இயற்பெயர்: மீராசாகிபு காலிதீன், ஊர்: சாய்ந்தமருது, அம்பாறை. வீரப்பிறப்பு: 18.08.1972 வீரச்சாவு:06.12.1989, நிகழ்வு: பழுகாமத்தில் ஈ.என்.டி.எல்.எவ் கும்பல் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவு

15 2ம் லெப்டினன்ட் சாந்தன் நைனா முகைதீன் நியாஸ், இயக்கப் பெயர்: சாந்தன் இயற்பெயர்: நைனா முகைதீன் நியாஸ், ஊர்: நிலாவெளி, திருகோணமலை. வீரப்பிறப்பு: 17.05.1972, வீரச்சாவு: 06.02.1990, நிகழ்வு: திருகோணமலை மாவட்டம் ஜமாலியா பகுதியில் அமைந்திருந்த ஈ என் டி எல் எவ் கும்பலின் முகாமைத் தாக்கிவிட்டு தளம் திரும்பும்போது ஏற்பட்ட படகு விபத்தில் வீரச்சாவு

16 வீரவேங்கை அலெக்ஸ், இயக்கப் பெயர்: அலெக்ஸ், இயற்பெயர்: அகமட் றியாஸ், ஊர்: மருதமுனை, நீலாவணை, மட்டக்களப்பு. வீரப்பிறப்பு: 23.01.1970, வீரச்சாவு: 04.05.1990

17 வீரவேங்கை சுந்தர் (சந்தர்) அகமட் லெப்பை செப்லாதீன், இயக்கப் பெயர்: சுந்தர் (சந்தர்), இயற்பெயர்: அகமட் லெப்பை செப்லாதீன், ஊர்: வேப்பானைச்சேனை, அம்பாறை வீரப்பிறப்பு: 25.02.1973, வீரச்சாவு: 25.05.1990

18 வீரவேங்கை கமால், மட்டக்களப்பு, வீரச்சாவு: 07.06.1990

19 வீரவேங்கை தாகீர்; இயக்கப் பெயர்: தாகீர் இயற்பெயர்: முகைதீன்பாவா அன்சார், ஊர்: திருகோணமடு, பொலனறுவை, சிறிலங்கா வீரப்பிறப்பு: 29.04.1972, வீரச்சாவு: 11.06.1990, நிகழ்வு: மட்டக்களப்பு கல்குடா பகுதியில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு

20 வீரவேங்கை கபூர்; இயற்பெயர்: முகமதுஅலியார் முகமதுசலீம் ஊர்: காங்கேயன் ஓடை, மட்டக்களப்பு. வீரச்சாவு: 11.06.1990, நிகழ்வு: மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியில் வைத்து சிறிலங்கா படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவு

21 லெப்டினன்ட் ஜெமில், இயற்பெயர்: கரீம் முஸ்தபா. ஊர்: ஓட்டமாவடி, மட்டக்களப்பு. வீரச்சாவு: 12.06.1990 நிகழ்வு: திருகோணமலை கும்புறுமூலை பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா படைமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு

22 வீரவேங்கை தௌபீக்; இயற்பெயர்: இஸ்மாயில் ஊர்: ஓட்டமாவடி, மட்டக்களப்பு, வீரச்சாவு: 12.06.1990, நிகழ்வு: திருகோணமலை கும்புறுமூலை பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா படைமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு

23 வீரவேங்கை ஜிவ்றி; இயற்பெயர்: முகம்மது இலியாஸ் ஊர்: 4ம் வட்டாரம், மீராவோடை, வாழைச்சேனை, மட்டக்களப்பு, வீரப்பிறப்பு: 05.03.1974 வீரச்சாவு: 13.06.1990, நிகழ்வு: திருகோணமலை கும்புறுமூலையில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு

24 வீரவேங்கை தர்சன், இயற்பெயர்: அப்துல்காதர் சம்சி, வீரச்சாவு: 13.06.1990

25 வீரவேங்கை கலையன்; இயக்கப் பெயர்: கலையன் இயற்பெயர்: கச்சுமுகமது அபுல்கசன், ஊர்: 1ம் வட்டாரம், புல்மோட்டை, திருகோணமலை. வீரச்சாவு: 14.06.1990, நிகழ்வு: சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு

26 வீரவேங்கை அன்வர், வீரச்சாவு: 15.06.1990, நிகழ்வு: பாணமையில் சிறிலங்கா படையினர் விடுதலைப் புலிகளின் முகாமை முற்றுகையிட்டபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவு

27 வீரவேங்கை ஜெகன், இயற்பெயர்:ஆப்தீன் முகமட் யூசுப், ஊர்: குச்சவெளி, திருகோணமலை. வீரப்பிறப்பு: 08.04.1972 வீரச்சாவு: 15.06.1990, நிகழ்வு:

திருகோணமலை கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு

28 வீரவேங்கை குபீர், ஊர்: அக்கரைப்பற்று, அம்பாறை. வீரச்சாவு: 15.06.1990 நிகழ்வு: பாணமையில் சிறிலங்கா படையினர் விடுதலைப் புலிகளின் முகாமை முற்றுகையிட்டபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவு

29 வீரவேங்கை ராவ்; இயக்கப் பெயர்: ராவ், இயற்பெயர்: முகமது ரபீக், ஊர்: பொத்துவில், அம்பாறை. வீரச்சாவு:15.06.1990, நிகழ்வு: லகுகலவில் சிறிலங்கா படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு

30 வீரவேங்கை நியாஸ், ஊர்: மூதூர், திருகோணமலை, வீரச்சாவு: 17.06.1990, நிகழ்வு: மட்டக்களப்பு மட்டக்களப்பில் சிறிலங்கா வான்படையின் உலங்குவானூர்தி மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு

31 வீரவேங்கை மஜீத், இயற்பெயர்: முகமது இஸ்காக் கூப்சேக் அலி, ஊர்: மீராவோடை, மட்டக்களப்பு. வீரச்சாவு:18.06.1990, நிகழ்வு: வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு

32 வீரவேங்கை ஜின்னா; இயற்பெயர்: லெப்பை தம்பி, செய்னூர் ஊர்: ஓட்டமாவடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு. வீரப்பிறப்பு: 20.10.1970 வீரச்சாவு: 19.06.1990 நிகழ்வு: அம்பாறை பொத்துவில் கொட்டுக்கலவில் பகுதியில் சிறிலங்கா படையினர் பதுங்கித் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு

33. வீரவேங்கை டானியல்; இயற்பெயர்: கனீபா முகமது ராசீக், ஊர்:திருகோணமலை. வீரப்பிறப்பு:23.06.1970, வீரச்சாவு:22.06.1990, நிகழ்வு: திருகோணமலை திருமலை 2ம் கட்டை பகுதியில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு

34 வீரவேங்கை ஹனியா; இயற்பெயர்: அபுசாலி புகாரி ஊர்: அக்கரைப்பற்று, அம்பாறை. வீரச்சாவு:15.07.1990

35 வீரவேங்கை நிர்மல், இயற்பெயர்: அப்துல நசார் ஊர்:புடவைக்கட்டு, திருகோணமலை. வீரப்பிறப்பு: 19.01.1972 வீரச்சாவு: 27.07.1990, நிகழ்வு: திருகோணமலை திருமலை திரியாயில் ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவு

மூலம்: வீரர்களான முஸ்லிம் போராளிகளின் பெயர்கள் Posted by "eelamalar" *February 12th, 2016).*

# பின்னிணைப்பு (2)

*அக்கரையூர் தந்த அல்லி கப்டன் பாறூக், அகமது லெவ்வை முஹம்மது ஹனிபா, அக்கரைப்பற்று -06 அம்பாறை, வீர உயிர்ப்பு 06.12.1959. வீரச்சாவு 07.01.1987*

*தென்னை இளநீரும் தேங்கியோடும் வாய்க்காலின் அருகில் வளர்ந்திருக்கும் நாணல் பற்றைகளில் கூடுகட்டிவாழும் வயலான், தேனோடு பாலும், தெவிட்டாத அழகும; கலையோடு பின்னிப்பிணைந்து மாறாத வீரமும் கானான், கொக்குக் குருவிகள் ஒலிக்கும் ஒலியோடு சேர்ந்து இனியகானமாக தினம் ஒலித்து மெய்சிலிர்க்க வைக்கும் கவிகளும் வயல்களில் இருந்து பாட்டமாய் பறந்துவரும் வயல் குருவிகளை களிமண் உருண்டை கொண்டு கவிக்கு இசை சேர்க்குமாப்போல் கலைக்கும் ஆடவர்களும் அந்த அக்கறைப்பற்று வயலுக்கும், நகருக்கும் தனியழகைத் தரும்சுற்றி வளைக்க விரும்பாமல் சுருக்கமாகச் சொல்லப்போனால் விடுதலை வேண்டிப் புறப்பட்டு இருந்த இடம் தெரியாமல் தமிழீழத்திலிருந்து சிதறிப்போன விடுதலை இயக்கங்கள் முப்பத்தெட்டு என்றாலும் அக்கரைப்பற்று மண்ணில் மிக ஆழமாக முளைத்ததில் வியப்பில்லையல்லவா.*

*நீண்டுயர்ந்து நிற்கும் பெரியதொரு ஆலமரம். அதில் பல விழுதுகள் அங்கே ஒரு விழுதுதான் இந்த முகமது கனிபாவை 06.12.1959 தனில் ஈன்றெடுத்த அகம்மது லெவ்வை எனும் பெரு விருட்சம்.வாணிபத்தால் மட்டுமல்லஇ கமத்தொழிலிலும் சிறந்து விளங்கிய தனிப்பெரும் குடும்பம் இது. 1985ம் ஆண்டு இறுதிமாதப் பகுதியில் விடுதலைப் புலிகள் பற்றிய கருத்துகளை மக்கள் மனங்களில் விதைப்பதற்காக அம்பாறை மாவட்ட அரசியல் வேலைக்கென்று தேசியத் தலைவர் அவர்களால் யாழ் மண்ணிலிருந்து தென் தமிழீழ மண்ணுக்கு அனுப்பட்டவர்தான் மேஜர் டயஸ்.*

*"தங்கத் தமிழீழத் தானைத் தலைவனின்" கருத்துகளை மிக உன்னிப்பாக கேட்ட மேஜர் டயஸ் அப்படியே அம்பாறை வாழ்*

தமிழ் பேசும் இளைஞர்களின் மனங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு பற்றிய கருத்துக்ககளை மிக ஆழமாக விதைத்தான்.

முத்தமிழை மிக முதன்மையாகப் பேசியும் அதற்கு விழாவெடுத்தும், கவி, கதைகள் அடங்கிய நூல்கள் பலதை வெளியிடுவதிலும் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருந்த அந்த அக்கரைப்பற்று மண்ணிலிருந்து விடுதலை வேண்டிப் புறப்பட்ட முஸ்லிம் புலிவீரர்கள் பலர். அதில் முதன்மையானவன்தான் இந்த முகம்மது கனிபா. ஏனென்றால் இவரது சகோதரன் விடுதலைப் புலிகளில் இணைந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டதன் பின் தானும் இயக்கத்தில் இனைந்து தனது சகோதரனின் பெயரையே தனக்கு வைக்க வேண்டும் என்று கூறி அதன்படியே செயற்பட்டு வந்தவன் இந்த கனிபா என்னும் பாறுக்.

மாண்பில் முஸ்லிம் என்றாலும் மேஜர் டயசின் கனல் கக்கும் கருத்துகளைக் கேட்டு இந்த கதாநாயகன் மேஜர் டயஸ், மேஜர் அன்ரனி, கப்டன் டேவிட் ஐயா, நியூட்டன்,கப்டன் நகுலன் இன்னும் பல விடுதலை வீரர்கள் தனது உம்மா வாப்பா உறவினர்களுக்கு அறிமுகம் செய்துவைத்து இன்னமுதூட்டிப் பொருளுதவிகளும் தன் வாப்பாவால் உதவச் செய்த இஸ்லாமியத் தமிழனிவன்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கொப்ப இந்த கப்டன் பாறுக்கின் குணாதிசையங்களை நன்கு புரி;ந்துகொண்ட விடுதலைப் புலிவீரர்கள் இவன் தம்பியின் பெயரான பாறுக் எனப் பெயரிட்டனர்.

அதுஇ அம்பாறை கஞ்சிகுடிச்சாறு விடுதலைப் புலிவீரர்களின் பயிற்சிமுகாம், இருந்தாலும் சில புலிவீரர்கள் யாழ் மண்ணை நோக்க வேண்டியிருந்தது. பாறுக் படிப்பிலும் மிக கவனம் செலுத்தியவன். அக்கரைப்பற்று முஸ்லிம் மகாவித்தியாலயம் க.பொ.த.சாதாரணதரம் வரை படித்தவன; பரிச்சைக்காலவேளை இருந்தும் இவனது யணம் யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது.

யாழ் மண்ணில் முதலாவது பயிற்சிப் பாசறையில் இந்த பாறுக் புகுந்தான். சுருண்டிருக்கும் கொறுக்காய் போன்ற

தலைமுடி, பூரண சந்திரனையும் மிஞ்சிவிடுமாப்போன்ற அழகிலும் அழகான வட்டமுகம் கரியவிழிகள், அரும்பு மீசை குறும்புப் பார்வை கம்பீரமான தோற்றம் எத்தனை அழகு எப்படிச் சொல்வது.பயிற்சி என்ன பாராட்டுகள்தான் அதிகம் சோர்வையே காட்டிக் கொள்ளாத சிவந்த மேனி அந்த ஏ.கே 47 துப்பாக்கியை தூக்கிக் கொண்டு சிங்கநடைபோட்டுவரும் அழகைக் கண்டு லெப். கேணல் ராதா அவர்களே பாராட்டிய பைந்தமிழ் வேங்கையன்றோ.

இவனது வீரச் செய்தி கேட்டு மட்டக்களப்பு அம்பாறை மக்கள் தும்பக் கடலில் மூழ்கியது, ஆனாலும் வீரச்சாவுச் செய்தி மட்டக்களப்பு அம்பாறை மண்ணில் குறிப்பாக அக்கரைப்பற்றை எட்டியதும் கப்டன் டேவிட் ஐயாவால் வெளியிட்ட சுவரொட்டிகள் அக்கரைப்பற்று மதிற் சுவர்களை அலங்கரித்ததும் மாவிலைத் தோரணங்களும் வாழை மரங்களும் வீரப்புலிகளின் அரைக்கம்ப கொடிகளும் அக்கரைப்பற்றுவாழ் முஸ்லிம் மக்களின் கண்களைக் குளமாக்கத் தவறவில்லை.

உண்மைதான்! யாழ் மண்ணில் முதலாவது பயிற்சிப் பாசறையை தன் விடாமுயற்சியினால் சிறப்பாகச் செய்து ஒன்பது மாத காலத்துக்குள் முடித்தவன். அன்று நடந்த சிறுசிறு தாக்குதல்களில் கலந்துகொண்டவன். பாறுக் ஒரு முஸ்லிம் இளைஞன் என்று சொல்லாது தன் குடும்ப உறவினன் என்றே அனைவரும் அழைத்தனர். அதைவிட மேலான அன்பையும், பாசத்தையும் அண்ணன் (தலைவர்) மீது பொழிந்தவன் அதனால் தேசியத் தலைவர் அம்பாறை மண்ணைப்பற்றியும் அங்கு போராட்ட நிகழ்வு பற்றியும் வழிமுறைகளைச் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்;டவன்.

யாழ் மண்ணில் தனது போராட்ட வாழ்க்கையை ஆரம்பித்தாலும; மட்டு - அம்பாறையில் இருந்து போராடிய புலிவீரர்கள் இந்த வீரனின் இல்லம் செல்லத் தவறுவதில்லை. அப்படி தவறும் பட்சத்தில் தந்தை அகமது லெவ்வை புலிவீரர்கள் யாரையாவது அக்கரைப்பற்று நகரினுள் கண்டால் உடனே தன் இல்லம் அழைத்துச் சென்று அன்னமிட்டு பல உதவிகளையும் வழங்கி வழியனுப்பத் தவறுவதில்லை. அந்த பாசமழையில்

நனைந்த புலிவீரர்கள் யாராக இருந்தாலும் வாப்பா உம்மா தங்கச்சி தம்பி போறன் வாறன் என்று சொல்லிப் புறப்படுவார்கள்

வந்து போய்ப் பழகிச் சென்ற வீரர்களின் வீரச்சாவுச் செய்தி கேட்டாலும் இந்த பைந்தமிழ் உரைக்கும் வாப்பா உம்மாக்களின் கண்களும் குளமாகும். பல களங்களைப் பல முனைகளில் இவன் யாழ் மண்ணில் கண்டாலும் தன் தாய் மண்ணில் காலூன்றி களங்காணப் பல முஸ்லிம் இளைஞர்கள் திரட்ட தங்கத் தலைவனிடம் கேட்டுப் பதில்வரும் நாளையும் பார்த்துக் கிடந்தான். 07.01.1987ம் ஆண்டு காலை பத்து முப்பது மணிபோல் யாழ் கோட்டையில் குடிகொண்டிருந்த சிங்களக் கூலிப் பட்டாளங்கள் யாழ் மண்ணை அழிக்க படைகொண்டு வந்தனர். விடுதலைப் புலிவீரர்கள் எதிர்கொண்டனர். துப்பாக்கி ரவைகளும் எறிகணைகளும்தான் அன்று பொழிந்தது. புலிவீரர்கள் எதிர்த்தனர். எதிரிகளை அழித்தனர். அவன் போட்டுவந்த திட்டத்தினை முறியடித்தனர். பகைவன் கோட்டையை நோக்கி ஓடினான்.

வீறுகொண்ட வேங்கை கப்டன் பாறுக்கின் விரிந்த நெஞ்சிலிருந்து சுதந்திரம் தேடிய குருதி பெருக்கெடுத்தது. "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று அவனது நாவிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன. ஆனால் அந்தக் கப்டன் பாறுக் என்றும் எங்கள் தானைத் தலைவனின் மனங்களில் வாழ்கிறான்.

கபூர்முகம்மது அலியார் - முகம்மது சலீம், காங்கேயன்ஓடை ஆரையம்பதி மட்டக்களப்பு.வீர உயிர்ப்பு: 1972. வீரச்சாவு: 1990.06.11.

"மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் இணைந்து கொண்டவன் வீரவேங்கை கபூர்

முகம்மது அலியார் - முகம்மது சலீம், காங்கேயன்ஓடை ஆரையம்பதி மட்டக்களப்பு.

வீர உயிர்ப்பு: 1972. வீரச்சாவு: 1990.06.11.

மதம் இனம் இவைகள்தான் எங்களைப் பிரித்திருக்கின்றது. ஆனால் மொழியால் இணைக்கப்பட்டவர்ளாகின்றோம். அதனால் இலங்கைவாழ் இனங்களுக்கிடையில் இஸ்லாமியத் தமிழர்களே

அவர்களின் தாய்மொழி அரபு மொழியாக இருந்தாலும் பேச்சு மொழியாக தமிழையே கொண்டவர்கள்.

இலங்கை சுதந்திரம் அடையவேண்டும் எனக் குரல் எழுப்பியவர்களில் தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லிம்களும் அடங்குவர் இருந்தபோதிலும் தமிழ் முஸ்லிம்களுக்கு இலங்கைச் சுதந்திரத்தினால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. மேலும் வெள்ளையர்களுக்கு அடிமைப்பட்டுக் கி;டந்த இனங்கள் சிங்களவர்களுக்கும் அடிமையாக வாழவேண்டி ஏற்பட்டது.

உலக நாடுகளில் வாழ்ந்த இலங்கையர்கள் உரிமைக்காகவும் மொழிக்காகவும் போராடினார்கள். வென்றார்கள் இது வரலாறு சொல்லும் பாடங்கள் ஆனால் இலங்கையில் குறிப்பாக தமிழீழத்தில் வாழ்ந்த இஸ்லாமியர் “விடுதலை உணர்வோடு விடுதலைப் புலிகளில் இணைந்து போராடி மாண்டனர்” என்றால் அது ஆச்சரியப்பட வேண்டிய விடயம் என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழ் இளைஞர்கள் சிங்கள இராணுவத்தால் மட்டுமல்ல இந்திய இராணுவத்தால் மட்டுமல்ல இனத்துரோகிகளாலும் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் நிறைய உண்டு. அதேபோன்றுதான் இந்தியப்படைகள் நேசக்கரம் நீட்டி தமிழீழ மண்ணில் அராஜகம் நடாத்திக் கொண்டிருந்த வேளைகளில் இந்தியச் சிப்பாய்களினாலும் இனத்துரோகிகளினாலும் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டார்கள்.

அடி, உதை பட்டு எத்தனை காலம் எவன்தான் வாழுவான் ஆக மானமே பெரிதெனக் கொண்டவன் அடிமையாக வாழ விரும்பமாட்டான் அதற்கு இந்த முகம்மதி அலியார் முகம்மது சலீம் மட்டும் சளைத்தவனாக இருக்கமாட்டான்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க இந்தியப்படைகளும் இனத்துரோகிகளும் செயற்படுகின்றார்கள். ஒரு லெட்சம் இந்தியத் துருப்புகள் தமிழீழ மண்ணில் வந்து இறங்கிவிட்டது. வீதிக்கு வீதி தெருவுக்குத் தெருவாகவும் படையினர் வருகின்றார்கள். சந்தேகம் கொண்டவர் யாராக இருந்தாலும் இந்தியச் சிப்பாயின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாவான். வுஜீடுதலைப் புலிவீரர்கள்

அன்று மட்டக்களப்பு அம்பாறை மண்ணிலிருந்து உயிர் தப்பிப் பிழைப்பதென்பது மிக அரிதிலும் அரிது.

அதனால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் வாழ்ந்த இஸ்லாமியத் தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலி போராளிகள் மீது இரக்கம் காட்டத் தொடங்கினார்கள். பகல்வேளைகளில் முஸ்லிம் வீடுகளில் தங்குவதும் இரவுவேளைகளில் ஆயுதங்களுடன் தங்கள் கடமைக்குச் செல்லப் புறப்படுவதும் புலிவீரர்களின் செயற்பாடாக இருந்தமையினால் இஸ்லாமியத் தமிழர் மனங்களில் விடுதலைப் புலிகள் போராட்டம் சம்பந்தமான கருத்துக்கள் விதைக்கப்படலானது.

1988ம் ஆண்டு மட்டக்களப்பு ஆரையம்பதி தமிழர் வாழ்ந்த பகுதி, இடையிடையே முஸ்லிம் குடும்பங்களும் தமிழர்களுடன் ஒட்டி உறவாடி வாழத் தொடங்கினார்கள். அந்த வேலையில்தான் மேஜர் வள்ளுவன் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம், வளர்ச்சி மக்களின் பங்களிப்பு இருந்தும் இஸ்லாமிய இளைஞர்களின் பங்களிப்பு சம்மந்தமான கருத்துகளை இஸ்லாமிய இளைஞர்களின் மனங்களில் விதைத்தார்;.

மட்டக்களப்பு ஆரையம்பதி மறக்கமுடியாத கிராமம்;. தமிழர்களும் முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்த் துருவலும்போல் வாழ்கின்றாலீகள்;. கைத் தொழிலுக்கே முதன்மையான இடம். கல்வியிலும் சளைத்தவர்கள் அல்லர்;. வெள்ளிக்கிழமைகளில் மதிய வேளைத் தொழுகை முடிந்ததும் அந்தக் காத்தான்குடி ஆரையம்பதிப் பிரதான பாதையில் தமிழ் முஸ்லிம் இளைஞர் யுவதிகளோடு பெரியோர்கள் சிறியோர்களும் நின்று கூடிக் கதைத்துப் பேசி அன்பை பரிமாறிக் கொள்வார்கள். இடையிடையே மனக் கசப்புக்கள் வந்து இரு இனங்களுக்கிடையிலான கலவரங்களாக. மாறிவிடுவதும் உண்டு. சூறாவழியடித்து ஓய்ந்ததுபோல் மீண்டும் அன்பைப் பரிமாறுதல் தொடரும்.

இப்படியான பாசப் பிணைப்புகளின் வலையில் பின்னப்பட்டுக் கிடக்கும் வேளையில்தான். மேஜர்வள்ளுவனின் கருத்தில் இணைந்து விடுதலைப்புலிகளின், அவர்களுக்கான செயற்திட்டங்களில் இந்த முகம்மது சலீம் செயற்பட்டுக் கொண்டிருந்தான்.

எப்படியான வேலைகள் இருந்தாலும் மதம் என்ற ஒன்றை உயிரெனக் கொண்டிருப்பவன். இறைவணக்க வேளை வந்ததும் பள்ளிவாசலை நாடத் தவறாதிருந்தான். புலிகளின் செயற்திட்டங்களையும் மறைமுகமாகக் செய்துவந்தான். இரகசியங்களைக் கையாழுதல் அக்கால வேளைகளில் இந்தியப்படையினதும்இ இனத்துரோகிகளினதும் நடமாட்டங்களை வேவுப்பணிமூலம் ஊருக்குள் நின்று கண்காணித்து செயற்படுத்துபவன்.

அதுமட்டுமின்றி இவனால் பல முஸ்லிம் இளைஞர்கள் விடுதலைப் புலிகளின் பாசறையில் புகுந்து கொள்வதற்கு வழிகாட்டியாக இருந்தவன். இரவுவேளைகளில் துப்பாக்கியைத் தோளில் சுமந்துகொண்டு இந்தியப்படைகளுக்கு எதிராகப் போரிட்டவன். அன்று அவை சிறுசிறு தாக்குதல்களாக இருந்தாலும் அது பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்ததென்றே சொல்லலாம்.

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பமானதும் இந்தியப்படைகள் தமிழீழ மண்ணைவிட்டு வெளியேறிய வேளைகளில் புலிகள் அமைப்பில் இனைந்திருந்து பல முஸ்லிம் புலிவீரர்கள் தாங்களாகவே ஓய்வு எடுத்திருந்தனர். ஆனால் இந்த சலீம் மட்டும் புலிகள் இயக்கத்தைவிட்டோ, புலி உறுப்பினர்களைவிட்டோ விலகிச் செல்லாதிருந்தது களமாடுவதற்காகவன்றோ.

விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசபடைகளுக்குமிடையில் போர் மூண்டது. தமிழீழ மண்ணில் குண்டு வீச்சு விமானங்களாலும் துப்பாக்கிச் சன்னங்களினாலும், எறிகணை வீச்சுகளினாலும் தாக்கித் தகர்த்தான் தமிழீழ மண் ரணகளமாக மாறியது. மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ்நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. அடுத்துள்ள விசேட அதிரடிப்படை முகாம்மீது 10.06.1990 அன்று புலிவீரர்கள் மனோ மாஸ்ரரின் தலைமையில் தாக்குதலைத் தொடுக்கின்றார்கள். சங்கரின் திட்டப்படி இந்த வீரவேங்கை கபூரும் தாக்குதலை மேற்கொள்ளுகின்றான். சென்றல்கேம்ப் பொலிஸ் நிலையத்திலிருந்து சிங்கள இராணுவத்தினர். வீசும் ஆட்லறி எறிகணைகள் பதுங்கிக்கிடந்து தாக்குதலைத் தொடுக்கும் புலிகள்

பக்கம் வீழ்ந்து வெடிக்கின்றது. கப்டன் சங்கரின் அணியில் நின்று இந்த கபூர் மிக வேகமாகச் செயற்படுகின்றான்.

11.06.1990 அன்று களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படைமீது மிக வேகமான தாக்குதல்கள் புலிவீரர்களினால் தொடுக்கப்படுகின்றது. நேரத்திற்கு உணவு கிடைத்தாலும் உறக்கமின்றி எதிரியை விரட்டத் தாக்குதலை மேற்கொள்ளுகின்றனர்.

அளவான உடலோடு பின்னால் வாரி விடப்பட்ட தலைமுடிக்கு அழகைக் கொடுக்கும் அந்த வட்டமுகம் சிவந்த மேனி கூரிய விழி கொண்ட வேங்கையாக கபூர் தாக்கினான் தாக்கிக் கொண்டே சென்றான் முகாமினுள் இருந்த பகைவனுக்கு மிக அருகில் நின்று தாக்கினான். அது அவனுக்கு மிக இலகுவாக இருந்தது.

இருந்தபோதிலும் அன்று அனைத்தும் மிக வேகமாக செயற்பட்டு முன்னேறி இவன் தாக்குதலைத் தொடுத்தான். அந்தவேளை தம்பலவத்தையைச் சேர்ந்த வீரவேங்கை சபேசன், கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த நவயுகன,; கொத்தியாபுலையைச் சேர்ந்த கீறோ, கோயில் போரதீவைச் சேர்ந்த வீரவேங்கை வசந்தராஜ், மகிழவட்டுவானைச் சேர்ந்த வீரவேங்கை விமலநாதன் ஆகியோர்களுடன் இந்த வீரவேங்கை கபூரும் வீரச்சாவைத் தழுவிக் கொள்ளுகின்றான்.

# பின்னிணைப்பு (3)

## வந்தாறுமூலை அகதிகளும் வந்தாறாத மன வடுக்களும்!

**- எஸ்.எம்.எம்.பஷீர்**

*“உலகத்தில் நாட்டில் சமூகத்தில் மனிதர்கள் படும் துயரை நினைத்து இரங்கி ஒரு துளி கண்ணீர் உன்னிடம் வராவிடின்;;எதற்காக நான் பாடிகொண்டிருக்கிறேன்.*

*என் பாடல் உன்துயரை துடைக்காது மேலும் மூட்டி விடுமாயின் நான் பாடாமல் ஊமையாக இருந்து விடுகிறேன்” குணதாச கபுகே (மறைந்த பிரபல சிங்கள பாடகர்)*

*1990ஆம் ஆண்டு போரர்ச் சூழலின் காரணமாக பாதுகாப்பு கருதி மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ் குடும்பங்களின் 174 இளைஞர்கள் அவ்வாண்டு செப்டெம்பர் 5ஆம் திகதியும் 23ம் திகதியும் சீருடை அணிந்தவர்களால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை. இச்சம்பவங்களின் நினைவாக சென்ற ஐந்தாம் திகதி இருபது ஆண்டு நிறைவு நிகழ்வு மத வழிபாடுகளுடன் இடம்பெற்றன என்ற செய்தி பல ஊடகங்களில் வெளிவந்தது. அவ்வாறு கடத்தி செல்லப்பட்ட குடும்பத்தினரில் சிலர் இன்றும் தமது குடும்பத்தில் கடத்தி செல்லப்பட்டவர்கள் உயிருடன் இருப்பதாக நம்புவதாகவும் வேறு சிலர் அவர்கள் உயிருடன் இருப்பதாக நம்பும் காலம் கடந்துவிட்டதாகவும் துயரத்துடன் சொன்ன வார்த்தைகள் இரு தசாப்தங்கள் கடந்துவிட்டபோதும் குடும்ப உறவுகளின் அசம்பாவித இழப்புக்கள் ஆறாத துயராக அக்குடும்பத்தினரை வாட்டிவருவதை கோடிட்டு காட்டுகிறது.*

*புலிகளுக்கு முன்பே கிழக்கில் ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்கள் முஸ்லிம்கள் மீது தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கினர் அதனால் முஸ்லிம்கள் தமிழ் ஆயத இயக்கங்கள்*

மீது வெறுப்பு கொண்டனர் அந்நிலையிலே 1985 ஏப்ரல் இன வன்முறைகள் இரண்டு இனங்களுக்குமிடையிலான உறவில் ஏற்பட்ட விரிசலின் வெளிப்பாடாக வெடித்தது. ஆனால் புலிகளின் பரந்துபட்ட முஸ்லிம் மக்களை கிழக்கிலிருந்து இனசுத்திகரிப்பு செய்யும் முயற்சிகளை முடுக்கிவிட்டாலும் கிழக்கின் திகாமடுல்லை மாவட்டம் புலிகளுக்கு சவாலாக அமைந்ததால் மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கில் இலகுவாக முஸ்லிம்களை வெளியேற்றும் தங்களின் முதல் மூலோபாய புள்ளியாக புலிகளால் திட்டமிடப்பட்டது அதற்கிணங்க 1990ஆம் ஆண்டு முஸ்லிம் இனப்படுகொலைகளை திட்டமிட்டு கிழக்கு மாகாணமெங்கும் மட்டுமல்ல அதன் வட எல்லைப்புறத்தில் அமைந்த வட மத்திய மாகாணத்திலுள்ள முஸ்லிம் கிராமமான அளிஞ்சிப்போத்தானையிலும் புலிகள் மேற்கொண்டனர். ஆயினும் இதனால் பரஸ்பரம் தமிழ் முஸ்லிம் உறவு விரிசல் கண்டாலும்.

அதன் வெளிப்பாடாக பல தொடர்ச்சியான படுகொலைகள் அச்சறுத்தல்கள் ஆக்கிரமிப்புகள் என பலவகையான அழுத்தங்களை ஏற்படுத்தி முஸ்லிம்களை கிராமம் கிராமமாக வெளியேற்றும் தங்களின் திட்டத்தில் வெற்றிபெறுவதையும் அவர்கள் கண்டுகொண்டனர். அதற்கான சூழலை ஏற்படுத்தும் நோக்கில் தமிழ் முஸ்லிம் பகைமை தூண்டப்பட வேண்டிய தேவையும் அவர்களுக்கு ஏற்பட்டது. கிழக்கில் தீராத தமிழ் முஸ்லிம் பகைமை ஏற்படுத்துவதனால் தமது தமிழீழ இலக்கை அடைவதற்கான முக்கிய தடைகளில் ஒன்றை நீக்கலாம் என்ற அடிப்படையில் செயற்படுவதற்கு முஸ்லிம் ஊர்காவல் படை இலங்கை இராணுவம் என்பற்றின் தமிழர் மீதான எதிர்வினைச் செயற்பாடு மூலமாக தங்களின் “பங்களிப்பை” செய்வார்கள் என்பதை புலிகள் உணர்ந்து திட்டமிட்டே இதனை செய்தார்கள். அதிலும் இவாறான தமிழ் முஸ்லிம் பகை முரண்பாடு வட மாகாணம் போல் அல்லாது தமிழ் முஸ்லிம் சமூகங்களுகிடையிலே உருவாக்கப்படுவது புலிகளுக்கு மூலோபாய தேவையாகவிருந்தது.

ஆயினும் 1990 ஏறாவூர் படுகொலைகளை செய்ய முன்னர் ஏறாவூர் பிரதேச சபைக்குட்பட்ட தமிழ் பகுதிகளான ஏறாவூர் நான்காம் ஐந்தாம் குறிச்சிகளில் மற்றும் குடியிருப்பு எல்லைப்புற

தமிழ் கிராமத்தில் வாழ்ந்த தமிழ் மக்களை அங்கிருந்து சென்றுவிடுமாறு வேண்டுகோள் விடுத்த பின்னரே புலிகள் தமது தாக்குதல்களையும் செய்தனர் என்று சொல்லப்படுகிறது. ஆனாலும் இந்தப்படுகொலைகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் ஆத்திர உணர்வு இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டது அதனால் ஏறாவூர் தமிழ் பிரதேசத்தில் தமிழ் மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டன இக்கால கட்டங்களில் இரு பிரதேசங்களுக்குள்ளும் இடையில் பிரயாணம் செய்ய நேரிட்ட மக்கள் பரஸ்பரம் புலிகளின் மிலேச்சத்தனமான படுகொலையால் உருவாக்கப்பட்ட இன வெறிக்கும் குரோதத்துக்கும் பாரிய விலையை வழங்க வேண்டி நேரிட்டதுடன் ஒரு நீண்டகாலத்துக்கு பகைமையும் திரட்சி கொண்டது. ஒரு புறம் புலிகள் மிருகத்தனமாக முஸ்லிம் மக்களை படுகொலை செய்தபோதும் அவர்களின் சமூகப் பிரமுகர்களை கடத்தியபோதும் இரரணுவம் கொண்ட "அனுதாபம்" புலிகளால் நசுக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குள் ஒரு சிறு குழுவினரின் தமிழ் எதிர்ப்பு நடவடிக்கைக்கு வழிகோலிற்று.

அதுபோலவே தமிழ் மக்களுக்குள்ளும் தமது குடும்பத்தினரை தமிழ் முஸ்லிம் வன்முறைகளால் மற்றும் கடத்தல்களால் இழந்தவர்கள் புலிகளின் அனுசரணையுடன் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் முன்னின்றனர். இதனால் புலிகள் இருக்கும் வரை பதிலுக்கு பதில் நடவடிக்கையாக பல அசம்பாவித சம்பவங்கள் இரண்டு இனத்தவரிடையேயும் நடைபெற்றுள்ளன என மனித உரிமை அமைப்புக்களின் சில பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன 1990 அழிஞ்சிப்பொத்தானை முஸ்லிம் படுகொலைகளுக்கு எதிர் விளைவாக முத்துக்கல தமிழ் கிராமம் தாக்கப்பட்டது. புலிகள் தமது தேவைகேற்ப முஸ்லிம் உறவை ஒருபுறம் மேல்மட்டத்திலும் கீழ் நிலையிலும் ஒரு குறிப்பிட்ட தரப்பினருடன் வெவ்வேறு காலகட்டங்களில் வைத்துக் கொண்டதுடன் சாதாரண தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான சமூக பொருளாதார நடவடிக்கை காரனமான நல்லுறவு நிகழ்வதையும் தந்திரோபாயமாக தடுத்து வந்தனர். இதற்கான பிரச்சாரங்களை தமிழ் மத்திய தர உத்தியோகத்தர்கள் பலரின் அனுசரணையுடனும் தமது கட்டுப்பாடு பிரதேச கண்காணிப்பு நடவடிக்கை மூலமாகவும் செய்து வந்தனர். இதன் தொடர்ச்சியாகவே பின்னர் கூட்டமைப்பு

அரசியல் ரீதியாகவும் புலிகளின் இனவாத தமிழ் வகுப்புவாத கருத்தியல்களை முன்கொண்டு செல்ல உதவினர்.

1990 ஆகஸ்து இன வன்முறைகள் ஏற்பட்டு பல அனர்த்தங்கள் நடந்த பின்னர் அவ்வாண்டு இறுதிப் பகுதியில் கொழும்பிலிருந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிகள் மற்றும் அப்பிரதேச சமூக பிரதிநிதிகள் சிலரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளாக உள்ள தமிழ் முஸ்லிம் அகதிகளையும் மற்றும் வன்முறைகளால் மட்டக்களப்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் தமிழ் மக்கள் சிலரையும் பார்வையிடுவதற்காக ஒரு விடயம் அறியும் குழு ஒன்று (Fact Finding Group) விஷேட இராணுவ விமானத்தில் சென்றது. அதில் நானும் பிரயாணம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது அக்குழுவில் அரசியல் கட்சி பிரமுகர்களில் அணில் முனசிங்க புளொட் சித்தார்த்தன் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். ஏறாவூர் பிரதேச தமிழ் மக்கள் அகதிகளாகவிருந்த வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதி முகாமுக்கு சென்ற போது என்னைக்கண்டு எனக்கு மிகவும் தெரிந்த நெருக்கமான குடும்பத்தினர் சிலர் என்னிடம் தங்களின் பிள்ளைகளை குடுபத்தினரை இராணுவத்தினர் விசாரணைக்கு கொண்டு சென்றதையும் அவர்களை கண்டுபிடித்து தர உதவுமாறும் என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதிலும் உருக்கமான ஒரு சம்பவம் அங்கிருந்து இராணுவத்தால் விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்ட பலரின் பெற்றோர்கள் உறவினர்களின் மனக் கிலேசங்களை புட்டுக்காட்ட போதுமானது. நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களில் எனது நெருங்கிய நண்பரின் சின்னம்மாவின் ஒரே ஒரு மகனும் அவ்வாறு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டவர்களுள் ஒருவர். இவரின் தாயும் தந்தையும் என்னை நெருங்கி குழந்தை போல் அழுதது இன்றுவரை எனது நெஞ்சில் ஆழமாக பதிந்திருக்கிறது. அவர்களுக்கு குழந்தை கிடைக்காமல் பலவருடங்களின் பின்னரே அவர்கள் வழிபடும் கதிர்காம கந்தனை வேண்டி வழிபட்டு (தவமிருந்து என்று சொல்வதுபோல்) பெற்ற குழந்தை தான் அப்பையன் என்று அவ்விடலைப் பருவத்து சிறுவன் சிறு பிள்ளையாக இருந்தபோது எனது நண்பர் சொல்லுவார். இவரதும் மற்றும் என்னிடம் கேட்டுக்கொண்ட சிலரதும் இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டவர்கள் குறித்து

அப்போது இராணுவ குடிமக்கள் ஒன்றிணைப்பு (Co-ordinating Officer) உத்தியோகத்தராகவிருந்த அங்கு பிரன்சனமாகவிருந்த முன்னாள் எஸ்.பி (போலீஸ் அத்தியட்சகர்) அப்துல் மஜீதிடம் நான் வேண்டுகோள் விடுத்தபோது அவர் அதுபற்றி மேலிடத்துக்கு அறிவிப்பதாகவும் விசாரிக்க உதவுவதாகவும் கூறினார்.

ஆனால் அந்த வேண்டுதல்களை அவர் விடுத்தாரா அல்லது அவர் அன்றைய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் என்ற வகையில் ஏதேனும் விசாரணைகளை தனக்கு கிடைத்த முறைப்பாடுகள் மீதோ அல்லது தனக்கிருந்த உத்தியோக அதிகாரத்தை கொண்டோ மேற்கொண்டாரா அல்லது அவ்வாறு கடத்தப்பட்ட சிலரின் குடும்பத்தினர் நம்புவதுபோல் அவர்களில் யாரேனும் இன்றுவரை உயிருடன் இருக்கிறார்களா என்ற கேள்விக்கு முன்னாள் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் இப்போது மாகாண சபையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியாகவிருக்கும் அப்துல் மஜீத் (பொத்துவில்) ஏதாவது புகாரை மேலிடத்துக்காயினும் அப்போது செய்திருந்தால் அது பற்றி ஏதேனும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அவர் தானாக முன்வந்தேனும் தான் அறிந்த செய்திகளை சொல்வதற்கு இனிமேலும் தாமதிக்கமுடியாது அந்த சிறுவனின் தாய் பின்னர் நான் அவரை இராண்டாயிரத்தி இரண்டில் சந்திக்கும்வரை அவர் மனம் பேதலித்த நிலையிலே காணப்பட்டார், அதே மனநிலையுடன் விரக்தியுடன் என்னிடம் பேசினார். சில வருடங்களுக்கு முன்னர் அவரை சந்திக்க விரும்பி, அவரை பற்றி விசாரித்தபோது அவர் இறந்துவிட்டார் என்று கேள்வியற்று வருத்தமுற்றேன்

மேலும் அதே தினத்தில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் கொக்கட்டிசோலை போன்ற இடங்களில் வாழ்ந்த தமிழர்கள் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததையும் பார்வையிட்டபோது ஜோசெப் பரராஜசிங்கம் அங்கு காயமுற்றோரின் உறவினர்கள் முறைப்பாடுகளை தமிழ் முஸ்லிம் விரோத உணர்வுகளை ஒரு பிரச்சாரமாகவும் அதனை மேலும் எதிர்கால சமூக மீளிணக்கம் கருதி அறிவுபூர்வமாக அணுகாமல் எதிரிடையான அணுகுமுறையுடன் அங்கு அவர் விளக்கமும் வியாக்கியானமும் அளித்தார். மிக தீவிர முஸ்லிம் எதிர்ப்புணர்வு அங்கு காணப்பட்டது. மேலும் ஏறாவூர் முஸ்லிம் அகதி முகாமுக்கு

சென்றபோதும் அவர்கள் புலிகளின் படுகொலைகளால் தாம் இழந்த குடும்ப உறுப்பினர்கள் பற்றிய சோக உணர்வுகளை தாம் எல்லைப்புரங்களிலிருந்து புலிகளின் பயத்தால் அகதியாக வாழும் துன்பங்களையும் இக்குழுவினருடன் பகிர்ந்து கொண்டனர். மொத்தத்தில் புலிகளின் அட்டூழியங்களின் அவலங்களை இன விரோத விளைவாக இருபுறமும் காணக்கூடியதாகவிருந்தது இந்த நிலையில் இலங்கை இராணுவ பிரிவின் ஒரு பகுதியினரும் இந்த சூழ்நிலையை தமக்கு ஏதுவாகவும் பயன்படுத்திக்கொண்டனர்.

புலிகள் இயக்கம் கிழக்கில் சிதைவுறும் வரை புலிகள் அவ்வப்போது இராணுவ பிரசன்னத்தின் காரணமாக முஸ்லிம்களுடன் உறவை பேணுவதுடன் அவர்களை தமது ஆயுத பலத்தால் தமது பிரதேச கட்டுப்பாடுகளால் முஸ்லிம் சமூக அரசியல் சமூகக் குரல்களாக செயற்பட்டோரை இனம் கண்டு கடத்தியது படுகொலை செய்ததன் மூலமாக முஸ்லிம்களை எப்போதும் ஒரு அச்ச நிலையில் வைத்துமிருந்தனர். புலிகள் கிழக்கு புலிகளாக பிளவுபட்டதும் ஒரு சுவாச இடைவழி ஏற்பட்டதுடன் முஸ்லிம் தமிழ் உறவு ஆமை கதியிலே நகரத்தொடங்கியது பின்னர் இராணுவ வெற்றிமூலம் புலிகள் கிழக்கில் முழுமையாக தோ தொல்வியுறம் வரை அத்துடன் கிழக்கிலே தமிழ் முஸ்லிம் உறவுக்கு கிழக்கு மாகாண சபை ஊடாக அதன் முதலமைச்சர் போன்றோர் தமது நேர்மையான பங்களிப்பை செய்ததன் ஊடாக இன்று அங்கு மீண்டும் சுமுக நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இனவாத அரசியல் சக்தியாக தமிழ் அரசுக்கட்சி இன்றுவரை தமிழர் தாயகம் வட கிழக்கு இணைப்பு என்ற தமிழ் தேசிய கட்டுமானங்களை கைவிடாததால் தனித்து எழும் கிழக்கு தமிழ் முஸ்லிம் அரசியலுக்கு பெருத்த சவால்கள் இருக்கின்றன என்பதால் முஸ்லிம் மக்களை தேவைகேற்ப பயன்படுத்தும் தமது அரசியல் தந்திரோபாயங்களில் ஒன்றாகவே பிரதான முஸ்லிம் அரசியல் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுடனான உறவை பலப்படுத்தும் தேவை அதற்கு கிழக்கிலே உள்ளது அதற்காக கிழக்கின் முஸ்லிம் அரசியல் அபிலாஷைகளில் சவாரிவிடும் இன்றைய முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்தின் சற்று தினங்களுக்கு முன்னர் வரையான அரச எதிர்ப்பும் கிழக்கின் தனித் தமிழ் அரசியல் தலைமத்துவத்திற்கெதிராக முஸ்லிம்களை

உருவேற்றும் செயற்பாடுகளும் தமிழ் தேசிய தலைமைகளுக்கு மிகுந்த தேவையாக இருக்கிறது. அதனால் தான் தற்போது அரசு சார்பாக 18வது அரசியல் அமைப்பு திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக மாறியும் சம்பந்தன் தனித்து ஜனாதிபதியை சந்தித்தது, இந்தியா சென்றது வட கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சேபனை இல்லை என்று பிரச்சாரம் பண்ணிய சூழலிலும் மீண்டும் தாங்கள் சந்தித்து பேசப்போவதாக கூறுவது தமது பரஸ்பர அரசியல் நிகழ்சி நிரல்களில் காணப்படும் ஒற்றுமையை கோடிட்டு காட்டுகிறது. ஆனால் கூட்டணியின் தமிழ் தேசிய அரசில் கிழக்கு முஸ்லிம்களின் தேசிய அரசியலுக்கு என்றுமே ஆபத்தானது. எனவே இன்று மீண்டும் துளிர்த்துவரும் தமிழ் முஸ்லிம் உறவு பொறுப்பற்ற தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமைகளால் மீண்டும் எதிர் நிலைக்கு இட்டுச் செல்வதனை மக்களே மாற்றியமைக்க வேண்டும்.

1990 ஆகஸ்து மாதம் புலிகளின் முஸ்லிம் மக்கள் மீதான குறிப்பாக காத்தான்குடி ஏறாவூர் படுகொலைகள் எழுப்பிய அதிர்வலைகள் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் இருத்தலை கேள்விக்குறப்படுத்தியது. அதனால் அதுவரையும் ஏதோ பாதுகாப்பாக வாழலாம் என்று நம்பிக்கையுடன் இருந்த கிழக்கின் சகல சிறு கிராமங்களிலிருந்தும் முஸ்லிம்கள் வெளியேறினர். அவ்வாறான கிராமங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த மிகப்பெரிய முஸ்லிம் கிராமமான உறுகாமம் என்ற கிராமத்திலிருந்து அக்கிராம மக்கள் தங்களால் முடிந்ததை கையிலெடுத்துக்கொண்டு ஏ5 பாதையூடாக தென்மேற்காக பதுளை மாவட்டத்திலுள்ள மஹா ஓயா எனும் சிங்கள கிராமத்திற்கு மாட்டு வண்டிகளிலும் கால் நடையாகவும் பயணித்தனர். கோப்பாவளி பெரியபுல்லுமலை போன்ற இடங்களிலிருந்தும் முஸ்லிம்கள் தங்களது குடியிருப்புக்களை விட்டு மகா ஓயா நோக்கி சென்று அங்கு அகதிகளாகினர், பின்னரே மெதுமெதுவாக அவர்களில் பலர் பொலன்னறுவைவைக்கும் அக்கரைப்பற்று ஏறாவூர் போன்ற இடங்களுக்கும் சென்று குடியேறினர்.

இவர்களில் பலர் இப்போதுதான் கிழக்கில் புலிகளின் அழிவுக்கு பின்னர் தங்கள் கிராமங்களுக்கு மீள்குடியேறி வருகின்றனர். அவ்வாறு உறுகாமம் கோப்பாவளி பெரியபுல்லுமலை போன்ற இடங்களிலிருந்து வெளியேறி மகா ஓயா அரச

நிர்வாக கட்டிடத்தில் முகாமிட்டிருந்த பலரை நானும் மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் (எம்.எச்.எம்.அஸ்ரப்) சிலரும் சென்று பார்வையிட்டோம் அவ்வாறு நாங்கள் மகா ஓயா நோக்கி பயணித்த வழியில் கண்டி ரந்தெனிகல (விக்டோரியா ) பகுதிகளை தாண்டி வாகனங்கள் அதிகம் சென்றிராத மனித நடமாட்டமற்ற வீதிகளினூடாக சென்றபோது ரந்தெனிகல வீதியோரமாக ஜே.வீ.பி இளைஞர்களின் டயரில் எரிக்கப்பட்ட எரிந்தும் எரியாத சடலங்களை பார்த்து மனக்கிலேச முற்றோம். சிங்கள இளைஞர்களின் உடல்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டு வீதியோரமெங்கும் வீசி எறியப்பட்டிருந்தன. ஜே வீ பியினரை (மக்கள் விடுதலை முன்னணி) பயங்கரவாதிகளாக பிரகடனப்படுத்தி அவர்களுடன் தொடர்புள்ளவர்கள் அவர்களின் குடும்பத்தினர் என்று ஆயிரக்கணக்கான சிங்கள அப்பாவி ஆண் பெண்களை கொன்று குவித்தது பிரேமதாசா அரசாங்கம்.

இருபதாண்டு கடந்துவிட்டபோதும் வந்தாறுமூலை அகதிமுகாமில் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் சில நடுத்தரவயதினர் உட்பட பலரின் குடும்பத்தினர் அண்மையில் நடத்திய நினைவு கூறல் நிகழ்சிகள் இராணுவம் பற்றிய மனித உரிமை மீறல் பற்றியது மறுபுறம் இன வன்முறைகளால் கொல்லப்பட்ட கடத்தி காணாமல் போன தமிழர் முஸ்லிம்கள் பலர் குறித்து இந்த இருபதாண்டு மனித நடவடிக்கை இயல்போட்டத்துடன் மனித சுபாவமும் சேர்ந்து பலவற்றை மறக்கச்செய்து விட்டது யதார்த்தமே. இன நல்லுறவுக்கும் மீளினக்கத்துக்குமாக ஆணைக்குழுவினை முதலில் சந்திரிக்கா 1983 வன்முறையோடும அதற்கு முதிய பிந்திய உடனடி காலகட்டத்துக்கு மட்டும் (1981-1984 )வரையறுத்து விசாரிப்பதற்காக அவ்வானைக்குழு நியமிக்கப்பட்டது இன்றுள்ள ஆணைக்குழுவும் 2002 தொடக்கம் 2009 வரையுமான கால வரையறைக்குள் செயற்படுகிறது. ஆனால் தமிழ் முஸ்லிம் மக்களுகிடயிலான சிறு சிறு வன்முறைகள் விசாரனைக்குற்படுத்துவது என்பது இப்போதைக்கு அவசியமா என்ற கேள்வியும் எழுகிறது. ஏனெனில் குறிப்பாக இனங்களுக்கிடையே மீளிணக்கம் என்பது கட்டி எழுப்பப்படுவற்கு ஏதுவான சூழல்கள் புலிகளின் பேரழிவுடன் வட கிழக்கில் ஏற்பட்டுள்ளது.

நான் சில வருடங்களுக்கு முன்னர் சந்திரிகா அமைத்த உண்மைக்கும் மீளினக்கத்துக்குமான ஆணைக் குழு பற்றி வீரகேசரி பத்திரிகையில் (20.09.2001) எழுதும் போது தமிழ் முஸ்லிம் களுக்கிடையேயும் ஒரு உண்மைக்கும் மீளினத்துக்குமான (Truth and Reconciliation) ஆணைக் குழுவொன்று அமையலாம் என்று கருத்துரைத்திருந்தேன். அக்கட்டுரையையும் இங்கு இணைத்துள்ளேன். இன்றுள்ள பயங்கரவாத அழிப்பின் பின்னரான கால நகர்வு பல சமுக ரணங்களை சொஸ்தப்படுத்தியிருக்கிறது கடந்த மாகாண சபை அமைப்பு அதில் ஏற்பட்ட முதல் அமைச்சர் பதவிப் போட்டி அவ்வப்போது ஏற்பட்ட இன முறுகல் சம்பவங்கள் ஓரிரு வன்முறைகள் என்பன இன போட்டபோட்டி முறுகல் நிலைப்பாடுகள் மெதுமெதுவாக குறைந்து செல்லும் தன்மையையும் அவ்வாறான சமூக பிரச்சனைகள் முரண்பாடுகள் பற்றிய அணுகுமுறைகள் சமூக உடன்பாடுகள்மாற்றமுற்று வருவதனையும் நோக்கும்போது பொருளாதார நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டு வாழ்க்கை தரம் உயர்வடைய சூழல் உருவாகும் போது மனித உறவுகளும் விழுமியங்களும் மேலோங்குகின்றன இதுவே இன முரண்பாட்டு சூழல் வன்முறைகள் நிலவிய நாடுகள் சிலவற்றில் அவதானிக்கப்படும் உண்மையுமாகும மீளினக்கத்துக்கான விசாரணைகள் இனங்களுகிடையில் மீண்டும் உண்மையை வெளிக்கொண்டு வரப்போவதில்லை அவ்வாறு உண்மைகள் வெளிக்கொண்டு வருகின்றதான சூழ்நிலை மீண்டும் சமூக ஒற்றுமையை மேம்படுத்துமா அல்லது விரிசலை ஏற்படுத்துமா என்ற கேள்விகளும் உண்டு. மேலும் சமுக முரண்பாடுகளை ஆட்கடத்தல் கொலை என்று கொண்டு முடித்தவர்கள் வன்முறைகளை தூண்டிவிட்டவர்கள் இழைத்த குற்றம் இனிமேலும் நடைபெறாமல் இருக்க இப்போதுள்ள சமூக நல்லுறவு சூழல் தக்க முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

(தேனீ வலைத்தளம் செப்டெம்பர் 2010)

## உசாத்துணை மூலங்கள்

*(1) The_Massacre_of_Muslims: Following the end of the first week of July, a convoy of Kattankudi resident Muslims was proceeding thither, from Colombo, via Kalmunai. In the convoy were also lorries carrying a large quantity of goods. The convoy was stopped in Kurukkal Madam by the local LTTE group led by Mani, a somewhat notorious figure. The captives were herded into a single house. A witness put their*

*number at 60 to 80. It was widely understood that the initial motive was robbery. CHAPTER 2 REPORT 12 (UTHR (J))*

*மணியினால் வழி நடத்தப்பட்ட உள்ளூர் எல்.ரீரீ.ஈ குழுவினால் கொழும்பிலிருந்து, கல்முனையூடாக காத்தான்குடி வாசிகள் பயணித்த வாகனங்கள் குருக்கள் மடத்தில் நிறுத்தப்பட்டன. அத்தியாயம்2, அறிக்கை12 (பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைச் சங்கம் (யாழ்ப்பாணம் )*

*(1.1) `Black Tigers' in the `Sunday Island' of 14th November 1993, `Ravana' says: "The writer makes his context clear later in the piece: "The intelligence operative who was to be killed (by an apprehended Black Tiger) had distinguished himself for training and leading small teams in the East where the LTTE was strong. The success of this intelligence officer operating under the name of Moonas in apprehending or killing several key LTTE leaders with the support of LTTE deserters is what had hurt the LTTE most.....".( A SOVEREIGN WILL TO SELF-DESTRUCT -The Continuing Saga Of Dislocation & Disintegration Issued : 15th November 1993 CHAPTER 2Report 12 by UTHR(J) )*

*"எல்.ரீ.ரீ.ஈ பலமாகவிருந்த கிழக்கில் "முனாஸ்" என்ற பெயரில் செயற்பட்ட உளவுத்துறை அதிகாரி எல்.ரீ.ரீ ஈ இல்லிருந்து விலகிய புலிகளின் ஆதரவுடன் முக்கிய பல எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களை கைது செய்வதிலும்அல்லது கொலை செய்வதிலும் வெற்றி பெற்றிருந்தார்.*

*"கரும்புலிகள்" ராவண எழுதியது ( சண்டே ஐலண்ட் 14-11-1993)*

*(1.2) HRTF Chairman J.E.A. Soza, in his Report of September1993*

*Four army men have been identified among the soldiers who took part in this inhuman exercise. They are:*

*Capt. Kaluaratchi from Chenkalady Army Camp*

*Capt Mohammed Munas said to be masking his identity under this name when his real name was Dias Richard, attached to the NIB Batticaloa*

*Maj. Majeed Commanding Officer of Valachchenai Army Camp*

*Maj. Mohan Silva of Batticaloa Camp*

*கொக்கட்டிச்சோலை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் பற்றிய விசாரணையை மேற்கொண்ட ஜெ.ஈ. ஏ. சோசா தலைமையிலான மனித உரிமைச் செயலணி, தனது அறிக்கையில்*

*"மட்டக்களப்பு புலனாய்வுத்துறை செயலகத்தைச் சேர்ந்த கப்டன் முஹமட் முனாஸ் என்ற முகமூடி அடையாளத்துடன் செயற்பட்ட டயஸ் ரிச்சர்ட் எனும் உண்மைப் பெயரைக் கொண்டவரும் ஒருவர்."*

*2. "MUSLIMS & TAMIL EELAM"*

*State and Muslims Desecrate Ancient Tamil Village*

*K.N.Tharmalingam - Northeastern HeraldMay/June 2003*

*3. முஸ்லிம் தேசத்தின் அறிக்கை*

*எனும் அறிக்கை ஒன்றை 1999 ஆண்டு சுவீடனில் நடைபெற்ற சமாதானத்துக்கான மாநாட்டில்"முஸ்லிம் தேசத்தின் ஓர் அறிக்கை என்ற பெயரில் வெளியிடப்பட்ட அறிக்கையில்" காத்தான்குடி பள்ளிவாசல்களில் 122 அப்பாவி முஸ்லிம்கள் தொழுது கொண்டிருக்கும்பொழுது சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு புனித ஹஜ்ஜுக்கு சென்று வந்த ஹாஜிகள் உட்பட 150க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் வைத்து கடத்தப்பட்டு பின் கொல்லப்பட்டனர்." என்று குறிப்பிட்டுள்ளது.*

(எக்ஸில் ஆகஸ்து 2001) பிரான்ஸ்


*"States in conflict with their minorities: Challenges to minority rights in south Asia "Edited by Rita Manchanda (Page 268)*

*"Kaththankudi, four innocent Tamils and an LTTE cadre Nazir were killed by this', unholy group of Muslin home guards going by the name of JIHAD'. These unacceptable and deplorable behaviour, earned the anger and displeasure of the Muslim people in the area. Even though the people urged action to be taken against this group of home-guards, LTTE showed great restraint, to minimise any further developmentin tensions. The Muslim people clearly understood the LTTE's position. And supported us. Increasingly large numbers of Muslim youths joined our liberation organisation, on whose representation, insistence and active participation, LTTE was compelled to launch attacks on this armed Muslim home-guards group, killing 30 of them on*

*30th Decembr'87 at Kaththankudiand another 9 of the same Â· homeguards group at Oddamavadi in November'87.*

*'LTTE has also banned PLOTEEPRLF and TELO as these groups are also engaged in barbaric behaviour with the Tamil speaking Muslim people and are engaged in treacherous activities to create tensions and divisions among the people, for their own ends.*

*(LTTE'S press Statement 2nd January 1988)*


ශ්‍රී ලංකා පොලිසිය / இலங்கைப் பொலிஸ்

நீதிவானுக்கு வழங்கப்படும் தகவல்

01

02

கருவாக்கேணி

ශ/172/14


19 SEP 2014

BATTICALOA

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 115 (1), (2), (3), (4), 120 (1), (2), (3) ஆகிய பிரிவுகளின் கீழான அறிக்கை

பொலிஸ் நிலையம் கருவாக்கேணி பதில் பொறுப்பதிகாரி (பு.பொ.ப) லொகுகே

28/4/2014ம் திகதி எனது முன்னறிக்கை பிரகாரம் 1990ம் ஆண்டு காலப்பகுதியில் கருவாக்கேணி பொலிஸ் பிரிவிற்குள் வைத்து வாகனத்தில் சென்ற முஸ்லிம் பொதுமக்களை ஆயுததாரிகள் கடத்தி சென்று கொலை செய்தமை சம்பந்தமாக 2014.4.09ம் திகதி பிரதிபொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் இருந்து கிடைத்த அறிக்கையின் பிரகாரம் என்னால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மேற்படி கடிதத்தை அனுப்பி வைத்தவரான சாபி பொறக்பர் வீதி, காத்தான்குடி -02 என்னுமிடத்தில் வசிக்கும் அப்துள் மஜீட் மொகமட் றவ் என்பவரை பொலிஸ் நிலையம்



10

அழைத்து இவருடைய வாக்குமூலம் பெறப்பட்டும் குறித்த இடத்தை தன்னால் அடையாளம் காட்ட முடியும் எனவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தும் பின் குறித்த முறைப்பாட்டாள ருக்கு பலமுறை அழைப்பு விடுத்தும் இதுவரை அவரால் பொலிஸ் நிலையம் வந்து கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த இடத்தை அடையாளம் காட்ட வராத காரணத்தால் புதை குழி தோண்டுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு என்னால் முடியாதுள்ளதாலும் குறித்த நபர் ஒருதடவை வந்து பரந்த வெளி பிரதேசத்தை காட்டியதாகவும் ஆனால் உண்மையான இடம் தனக்கு தகவல் தந்தவருக்குதான் தெரியுமென கூறியதாலும்

தொடர்ந்து இன் நடவடிக்கையை முன்னெடுக்க முடியாதுள்ளதாலும் குறித்த பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாலும் எனவே புதை குழி சம்பந்தமாக உரிய இடத்தை அடையாளம் கண்டு கொள்வதற்கு தகவலாளியின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முறைப்பாட்டுக்காரரான அப்துல் மஜீட் மொகமட் றவ் என்பவரை நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு அழைப்பு கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறும் கனம் மன்றை கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் இவ் வழக்கு சம்பந்தமாக மன்றுக்கு அறிக்கை செய்வதற்கு ஓர் திகதியை நிர்ணயித்து தருமாறும் கனம் மன்றை கேட்டுக்கொள்கின்றேன்.

அழைப்பு கட்டளை


-------------


அப்துல் மஜீட் மொகமட் றவ்
சாப்பொறக்டர் வீதி
காத்தான்குடி - 02


நீதவான் நீதிமன்றம், மட்டக்களப்பு
MAGISTRATE'S
19 SEP 2014
BATTICALOA


பொறுப்பதிகாரி
பொலிஸ் நிலையம்
கருவாக்கேக்குடி
20/5/2014


**தமிழீழ விடுதைப் புலிகள் இயக்கத்தில் உயிர் நீத்த முஸ்லிம் இளைஞர்கள் சிலரது புகைப்படங்கள்.**













SMM.BAZEER
லெப்: றஹீம்
மட்டக்களப்பு
05.08.91
Lieút Raheem
Batticaloa
S.M. M.B


SMM>BAZEER
Lieutenant Senthaalan/ANSAR
லெப்டினன்ட்
06.07.95 செந்தாளன்/அன்ச


SMM.BAZEER
மேஜர்:- லத்திப்
Major Latheef
வீ.சாவு:- 14.02.92


S.M.M.BAZEER
நா. பற்றாளர் :- வசந்தன்,
சாவு :- 31-12-98.

# உண்மைக்கும் மீள் இணக்கத்திற்குமான ஆணைக்குழு சாதிக்கப்போவது என்ன..?

**தென்னாபிரிக்காவின 34 ஆண்டு கால இன ஒதுக்கலில் நிகழ்ந்த இனப் படுகொலைகளை இலங்கையில் இடம்பெற்றவையுடன் ஒப்பிடுகின்ற போது நூறு மடங்கு அதிகமானவையாகும்**

20.09.2001,

இலங்கையில் பல்வேறு நிகழ்வுகள் தேசிய அக்கறைகள் குறித்த விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழுக்கள் (Commissions) நியமிக்கப்படுவது அரசியற்கட்சிகளினதும் அரசாங்கங்களினதும் சாதனையாகவே காண்பிக்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் சிறுபான்மையினங்களின் விவகாரங்கள் குறித்து நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்தவில்லை. இந்நிலையில் தான் 1981-1984 காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட இனவன்முறைகளில் குறிப்பாக 1983 ஜூலை இனக்கலவரத்தினை ஆராய்வதற்காக தென்னாபிரிக்க முன்மாதிரியை பின்பற்றி ''இனவன்முறை மீதான உண்மை ஆணைக்குழு'' அமைக்கப்பட்டுள்ளது எனப்படுகிறது. இவ்வாணைக்குழு தனது முதல் அமர்வை அண்மையில் கலாநிதி ஆரியரத்னாவின் கருத்துக்களை கேட்கவழைத்து ஆரம்பித்து வைத்துள்ளது. இவ்வாணைக்குழு தென்னாபிரிக்க ''உண்மைக்கும் மீள் இணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழுவினை பெரிதும் பெயரில் மாத்திரம் ஒத்ததாகவே அமையப்போகிறது என்பதனை கோடிட்டுக்காட்டுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

தென்னாபிரிக்காவில் முதலாவது சுதந்திரத் தேர்தல் 1994இல் நடந்த ஒரு வருடத்தில் பாராளுமன்ற சட்டவாக்கத்துடன் உண்மைக்கும் இணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இது ''அபார்தய்ட்'' (Apartheid) எனப்படும் நிற ஒதுக்கல் காலகட்டத்தில் அதிலும் குறிப்பாக 1960-1994 காலகட்டத்தில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் குறித்து ஆர்ச்பிஷப் டெஸ்ட்மன்ட்டுவின் தலைமையின் கீழ் 17 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவினால் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் பாதித்தவர்கள் என இரு தரத்தினரும் விசாரிக்கப்பட்டனர். குறிப்பாக நீதி வழங்கும் முறைக்குப் பதிலாக பாதிப்பிழைத்தவனின் முழுமையான வெளிப்படுத்தலுக்காக ஒப்புதலுக்காக (Disclsure) மன்னிப்பு வழங்குவதும் பாதிப்புற்றோருக்கு ஏற்பட்ட மனித உரிமை, கௌரவ இழப்பினை ஈடு செய்வதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்தலும் இவ்வாணைக்குழுவின் பிரதான குறிக்கோளாகும். இது நீதி கேட்கும் ஒரு சபையாக வன்றி மன்னிப்பு வழங்குவதன் மூலம் மீண்டும் இனங்களுக்கிடையில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதையே நோக்கமாக கொண்டமைந்தது போலும் வன்முறைக்கு காரணமானவர்களை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் முன்பாக கொண்டுவருவதுடன் அவர்கள் வருந்துவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்குவதுமாகும். முதலிலே இலங்கையைப் பொறுத்தவரை இன்னும் இனப்படுகொலைகள், வன்முறைகள் என்று மனித உரிமை மீறல்கள் பல்வேறு ரூபங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பின்னணியில் அதிலும் வடகிழக்கில் சமாதானத்திற்கெதிரான யுத்தமுனைப்புகள் மேற்கொள்ளப்படும் வேளையில் இவ்வாணைக்குழுவின் இறுதிமுடிவான இணக்கப்பாட்டினை ஏற்படுத்தல் என்பது கேள்விக்குரியதாகவே அமையப்போகின்றது. இவ்வாறான ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் உண்மையில் மீள் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருக்குமாயின் இந்த ஆணைக்குழு ஒரு குறைப்பிரசவம் என்றுதான் குறிப்பிடவேண்டும்.

இது குறித்து ஒரு தென்னாபிரிக்க சம்பவத்தினை இலங்கையுடன் ஒப்பிட்டு நோக்குவது இதனை தெளிவாக்கும். தென்னாபிரிக்க ஆணைக்குழுவில் பார்வையாளராக நாடளாவிய விசாரணையில் கலந்துகொண்டு தனது அனுபவங்களை தொகுத்து 'எனது மண்டையோட்டின் நாடு' (Country of my skull) என்ற பெயரில் வெளியிட்ட தென்னாபிரிக்க சவிஞரும் பத்திரிகையாளருமான அன்ட்ஜிட் குரக் (Antjiekrog) தனது நூலில் குறிப்பிடும் ''ஒரு பொலிஸ்காரன் தனது மகனின் குடலை கையில் வைத்திருந்தான்'' என்ற பெற்றோரின் முறைப்பாட்டுக்கும் மிக அண்மையில் கிழக்கில் சித்தாண்டிக் கிராமத்தில் இராணுவத்தினர் 'சந்திரனின் தலையை வெட்டி எடுத்துச் சென்ற சம்பவத்திற்கும், முறைப்பாட்டிற்கும் உள்ள ஒற்றுமை 1983 சம்பவங்கள் இன்றும் தொடர்ச்சியாய் பல்வேறு பரிமாணங்களில் இடம்பெற்றுவரும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாணைக்குழு இணக்கப்பாட்டுக்கு வழிசமைக்கப்போவதில்லை என்பது கண்கூடு.

அடுத்ததாக 1983 ஜூலை இனக்கலவரத்தினைத் தொடர்ந்து இந்தியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, வடஅமெரிக்கா நாடுகளில் புலம்பெயர்ந்து நிரந்தரமாகவே குடியேறிவிட்ட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களில் பலர் சாட்சியமளிக்க நவீன தொழில்நுட்ப ஊடகங்கள் மூலமான விளம்பரமும் சான்றுகளும் அனுமதிக்கப்பட்டிருப்பினும் நேரடியான சாட்சியமளித்தலில் உள்ள தாக்கங்களை அவை ஏற்படுத்தப்போவதில்லை. மேலும் முறைப்பாடுகளை சத்தியக்கடதாசி வடிவில் கூட வெளிநாட்டிலிருந்து தூதுவராலயங்களில் சமர்ப்பிக்கலாம் என்று வேண்டப்பட்டிருப்பினும் கூட இவ் ஆணைக்குழுவின் வினைத்திறன் குறித்த ஐயம் இதில் எவ்வித அக்கறையும் ஏற்படுத்துமா என்பதும் கேள்விக்குரியதே.

இலங்கையில் ஆணைக்குழு நியமனத்தில் கூட ஜனாதிபதியின் தன்னிச்சையின் தேர்வும் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற வெளிப்படையான ஜனநாயக ரீதியிலான தரத்தினரின் இணக்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட நியமனக் கொள்கைகளுக்கு மாறாகவும் நியமனங்கள் அமைந்துள்ளன. இவ் ஆணைக்குழு ஒரு நீதிவழங்கும் நிறுவனமாக அமையாததால் எல்லா சமயத்தவர்களையும் பாதிக்கப்பட்ட தரத்தினரினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறுபட்ட நடுநிலையாளர்களையும் கொண்டதாகவமைதலே பொருத்தமானதாக அமையும்.

மேலும் இரண்டரை வருட காலமாக நடத்தப்பட்ட தென்னாபிரிக்க அமர்வுகளினை கருத்திற்கொள்கின்றபோது இலங்கையின் குறுகிய கால வன்முறைகளைக் குறித்த விசாரணைகளாயினும் இவ்வாண்டு அக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக விசாரணைகளை முடித்துவிடும் காலக் கெடு இவ்வாண்டுக்குழுவின் நோக்கம் குறித்து ஐயுற வைக்கின்றது.

பல உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை நெல்சன் மண்டேலாவின் தலைமையிலான தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் மீதும் அவரது மனைவி வின்னி மண்டேலாவின் ஐக்கிய உதைபந்தாட்ட சங்கம் மீதும் சுமத்தப்பட்டதையும் வின்னி மண்டேலா ஆணைக்குழுவில் சாட்சியமளித்ததையும் கருத்திற்கொள்கின்ற போது அரசியல் பின்னணி கொண்ட 1983 ஜூலை கலவ-

**எஸ்.எம்.எம்.பஷீர்**

-ரம் குறித்து பாரபட்சமற்ற விசாரணைகள் பாதிப்பிழைத்தோர் என்ற வகையில் இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் சாத்தியமா என்ற கேள்வியும் எழுகின்றது.

எல்லாவற்றையும்விட மிக முக்கியமாக சுமார் 34 ஆண்டுகால இன ஒதுக்கல் தென்னாபிரிக்காவில் நிகழ்ந்த இனப்படுகொலைகள் மனித உரிமை மீறல்களின் அளவோடு ஒப்பிடுமிடத்து இலங்கையில் குறுகிய காலத்தில் நிகழ்ந்தவை (நிகழ்ந்துகொண்டிருப்பவை உட்பட) நூறுமடங்கு அதிகமானதாகும்.

மேலும் கிழக்கில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் அதன் பின்னர் தொடர்ந்த சிறு சிறு தமிழ் முஸ்லிம் வன்முறைகள் குறித்தும் ஒரு உண்மை ஆணைக்குழு எதிர்காலத்தில் அமையும் சாத்தியம் குறித்து இன்றெண்ணுவதென்பது எதிர்காலம் குறித்த நிரந்தர சமாதானத்திற்கான ஆதங்கத்தையும் மக்களுக்கிடையிலான மன்னித்து மறக்கும் இணக்கப்பாட்டுக்கு அத்தகைய ஆணைக்குழு வழிசமைக்கும் என்ற நம்பிக்கையும் தவிர வேறில்லை.

இறுதியாக நெல்சன் மண்டேலா ஆபிரிக்க அனுபவம் குறித்து குறிப்பிட்டது மனங்கொள்ளத்தக்கது. ''துயரம் எப்போதும் சகிக்க முடியாததாகவிருப்பினும் வெளியிடப்பட்டவைகள் எங்கள் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினும் நிஜமாகவே என்ன நடந்தது என்பது பற்றிய பொதுவான புரிந்துணர்வொன்றுக்கும் தேசத்தின் மனிதாபிமானத்தை உறுதியாக மீளமைப்பதற்குமான ஆரம்பங்களை எங்களுக்கு அவை தருகின்றன.''



1990இல் தமிழ்ப் பாசிசத்தால் கொன்று புதைக்கப்பட்ட படுகொலைகளில் இருந்து ஒரு கொலை விவரணத்தை பலமான தரவுகளோடு எஸ்.எம்.எம். பஷீர் முன்வைப்பதை நூலாக்குவதற்கு காலம் கனிந்ததை கனத்த கசப்பின் மிச்சத்தோடு இங்கு பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது.

கேள்விக்கிடமற்ற விசுவாசத்தினதும் வழிபாட்டினதும் துதிப்பாடற் பாராயணத்தினதும் நிலை கடைசியில் எங்கு எல்லோரையும் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதை இந்நூல் சிறப்பாக முன்வைக்கிறது.

ISBN 978-81-907882-0-5

நிச்சாமம்

விலை ரூ. 80